வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு வார மலர்
Eelanadu ඊළනාඩු





Email : news@eelanadu.lk மலர் : 03 13.11.2022 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 340 பக்கங்கள் : 20


07 இலங்கை அரசியலில் செல்வாக்கு நிறைக்கும் 'லைக்கா' சுபாஸ்கரன்!


08 உள்ளூராட்சி தேர்தல்களும் அரசாங்கமும்


10 கைகளால் தோளை அணைத்தவாறு கழுத்தை நெரிக்கும் அரசியல்!


16 ஐ.நா. பொது வாக்கெடுப்பால் புதிய தேசமாக மலர்ந்த தென் சூடான்!

# மொட்டுக்கு இனி வாய்ப்பேயில்லை!

## அடித்து கூறுகின்றது ரணில் தரப்பு

கொழும்பு, நவம்பர் 13


**நாட்டு மக்கள் இனி ஒருபோதும் மொட்டுக்கு வாக்களிப்பர் என நாங்கள் நினைக்கவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.**

இதன்காரணமாக, அவர்களுடன் இணைந்து தேர்தலில் போட்டியிட நாங்கள் நினைக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வீழ்ச்சியடைந்திருக்கும் நாட்டை கட்டியெழுப்ப ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகவும் அர்ப்பணிப்புடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

19



## மஹிந்த அணியுடன் இனி கூட்டு இல்லை

### டலஸ் தரப்பு திட்டவட்டம்



கொழும்பு, நவ.13

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியுடன் ஒருபோதும் அரசியல் உறவைப் புதுப்பித்துக் கொள்ளப் போவதில்லை என்று டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்

19

## இலங்கையின் மீது பொருளாதார தடை!

### பிரிட்டன் எம்.பிக்கள் கோரிக்கை

லண்டன், நவ. 13

ஊழலில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக மேக்னிட்ஸ்க் பாணியில் பொருளாதாரத் தடைகளை விதித்து இலங்கை மீது நடவடிக்கை எடுக்குமாறு பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் அந்த நாட்டு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் பொருளாதார நிலை

19

## 40 ஆயிரம் ரூபா விவசாயக் கடன் ஒரு லட்சம் ரூபாவாக அதிகரிப்பு

### யாழ். அரச அதிபர் தகவல்



யாழ்ப்பாணம், நவ. 13

யாழ். மாவட்ட மரக்கறி செய்கை விவசாயிகளுக்கும் விவசாய கடன் முறைமை ஒன்று நடைமுறைப்படுத்தப் படவேண்டும். இது தொடர்பாக விவசாய அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடி நடவடிக்கை மேற்கொள்ளப்

19

## மஹிந்தவின் தலைமையிலான கூட்டங்களை நிறுத்திய பெரமுன

கொழும்பு, நவ.13

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆரம்பித்து நடத்தி வந்த "சாம்பலில் இருந்து எழுவோம்" என்ற தலைப்பிலான கூட்டத் தொடர் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

பொதுஜன பெரமுனவின் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ், அந்த கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இந்த கூட்டங்கள் நடத்தப்பட்டு வந்தன.

களுத்துறை, நாவலப்பிட்டி மற்றும் புத்தளம் ஆகிய மூன்று இடங்களில் அண்மையில் இந்த கூட்டங்கள் நடத்தப்

19

## விடுதலைப் புலி ஆதரவாளர்கள் மூன்று பேர் மீது குற்றப்பத்திரம்!

### இந்திய தேசிய புலனாய்வு முகவரகம் தாக்கல்

சென்னை, நவ. 13

தமிழ்நாட்டில் பயங்கரவாத செயல்களுக்கு திட்டமிட்டதாகக் கூறப்படும் மூன்று விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆதரவாளர்கள் மீது இந்திய தேசிய புலனாய்வு முகவரகம் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

தமிழகத்தில் கைது செய்யப்பட்ட குற்றவாளிகளான நவீன் என்கிற எம். சக்கரவர்த்தி, ஜே.சஞ்சய் பிரகாஷ் மற்றும் கபிலர் என்ற

15

## படகு கவிழ்ந்ததில் 3 சிறுமிகள் மாயம்

கொழும்பு, நவ. 13

சூரியவெவ, மஹாவெலிக்கட ஆரா வாவியில், நேற்றுக் காலை படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் மூன்று சிறுமிகள் காணாமற் போயுள்ளனர் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

படகுச் சவாரி

19

## புதிய அரசமைப்புக்காக கோடிக்கணக்கில் செலவு

### ஆயினும் பணி இன்னும் முடியவில்லை கணக்காய்வு அறிக்கையில் தகவல்

கொழும்பு, நவ. 13

நாடு பாரிய கடன் நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் நிலையிலும் புதிய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கவேண்டியதன் அவசியத்தை உணராமலேயே மூன்றாண்டுகளுக்கு 158 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டமை தெரியவந்துள்ளது.

2020 ஒக்ரோபர் 9 ஆம் திகதியில் இருந்து 2021 ஆம்

19

## பயங்கரவாத சட்டத்தின் கீழ் 129 பேர் தடுப்பில் உள்ளனர்!

கொழும்பு, நவ. 13

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குறைந்தபட்சம் 129 பேர் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என தெரிய வந்துள்ளது.

இவர்களில் 125 பேர் விளக்கமறியலில் உள்ளதாக தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் உத்தரவிற்கு அமைய இலங்கை பொலிஸார் வழங்கிய தகவ லின் அடிப்படையில்

19

## இப்படியும் நடக்கிறது...!

நல்லாட்சி அரசாங்கம் பதவியிழந்து சில நாட்கள் இருக்கும். அப்போது கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளராக அப்போது இருந்த சுமந்திரன் ஒரு தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றில் தெரிவித்தது இப்போதும் ஞாபகத்தில் இருக்கின்றது.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் ஐந்து ஆண்டுகளையும் முழுமையாக செலவிட்டு அவர்கள் தயாரித்த அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை - அதாவது, அவர்கள் ஐந்து ஆண்டுகள் செலவிட்டு தயாரித்த அரசமைப்பு தொடர்பான கேள்வி ஒன்றுக்கு அவர் பதிலளித்தார்.

“இப்போது கோட்டாபய ஆட்சிக்கு வந்தாலும் நாங்கள் தயாரித்த அரசமைப்பு வரைவை வைத்துக்கொண்டுதான் இனி புதிய அரசமைப்பு தயாரிக்கவேண்டும்“ என்றார்.

அவரின் அந்தப் பதிலில் தாங்கள் ஐந்து ஆண்டுகளை வீணடிக்கவில்லை என்ற தகவல் அதில் தொக்கி நின்றது.

ஆனால், கோட்டாபய ஆட்சிக்கு வந்ததும் தானும் புதிய அரசமைப்பை கொண்டுவரப்போவதாக கூறியபோதிலும், சுமந்திரன் - ஜெயம்பதி தயாரித்த அந்த நகலைக் கண்டுகொள்ளவில்லை. அவர் அதற்காகத் தனியான குழு ஒன்றை நியமித்தார். அதுவும் பதின்மூன்றுகூட அதிகமானது என்ற சிந்தனை ஓட்டமுள்ளவர்களையே நியமித்தார்.

இதற்கு முன்னர், நல்லாட்சி அரசாங்கத்தில் மக்களிடம் ஆலோசனைகள் பெறப்பட்டு, ஒவ்வொரு கட்சிகளாகத் தத்தமது யோசனைகளை சொல்லி அதனைத் தயாரிக்க எவ்வளவு செலவிடப்பட்டது என்பது தெரியவில்லை.

தனது அரசமைப்பு தீர்வு முயற்சி தோல்வியடைந்தால் அரசியலில் இருந்தே சென்றுவிடுவேன் என்று சொன்ன சுமந்திரன், அதுபற்றிக் கேட்டபோது -

“தமது அந்த முயற்சி முடிவடையவில்லை என்றும் அந்தப் பணி அதிலிருந்து- அதாவது விட்ட இடத்திலிருந்து தொடரும்” என்றும் நமக்கு தெம்பு தந்தார்.

ஆனால், அவரின் எதிர்பார்ப்பின்படி கோட்டாபய ஆட்சியில் எதுவும் நடக்கவில்லை. அதற்கு காரணமும் உண்டு. கோட்டாபயவை பொறுத்தவரை இனப்பிரச்னை என்ற ஒன்றே இல்லை. பொருளாதார பிரச்னைக்கு தீர்வு கண்டுவிட்டால் இவையெல்லாம் காணாமல்போய்விடும் என்பது அவரின் நம்பிக்கை. எனவே, அவர் ஆட்சியில் தயாரிக்கப்படும் அரசமைப்பில் இனப்பிரச்னைக்கு தீர்வு என்பதைஎதிர்பார்க்க வேண்டியதில்லைத்தான்.

ஆனால், இப்போது ரணில் ஜனாதிபதி. மகிந்த தரப்பின் ஆதரவுடன் அவர் ஆட்சியில் இருந்தாலும், தான் நினைத்தவற்றையெல்லாம் அவர்களைக்கொண்டே நிறைவேற்றி வருகின்றார். பொருளாதார நெருக்கடியை காரணம்காட்டி, இரட்டைப்பிரஜா உரிமை உள்ளவர்கள் பாராளுமன்றத்திற்குள் பிரவேசிக்கும் உரிமையை இரத்துச் செய்வதற்கே, பஸிலின் சகாக்களை- அதிகம் ஏன் அவரின் சகோதரர்களையே வாக்களிக்க வைத்தவர் ரணில்.

எனவே இன்றைய நிலையில் ரணிலால் - அதுவும் தனி ஒருவனாக இருக்கின்ற அவரால் முடியுமா என்ற கேள்விக்கே இடமில்லை.

இப்போது நாம் இங்கே சொல்ல வருவது, ரணில் ஆட்சிக் காலத்தில் அதுவும் அவரின் விருப்பத்தின்பேரில் ஐந்து ஆண்டுகள் செலவிட்டு தயாரிக்கப்பட்ட அரசமைப்பு நகல் பற்றி ஏன் எவரும் பேசுவதாகத் தெரியவில்லை?

அடுத்த ஆண்டுக்குள் புதிய அரசமைப்பைக் கொண்டு வருவேன் என்று ரணில் அறிவித்ததும் சம்பந்தனும், சுமந்திரனும் முந்திக்கொண்டு ஆதரவு தெரிவித்தனர்.

சம்பந்தன் வழமைபோல ஒருபடி மேலேபோய், இனியும் எங்களை ஏமாற்ற நினைத்தால் பாரிய விளைவுகளை சந்திக்க வேண்டிவரும் என்று எச்சரிக்கை வேறு விடுத்தார். ஆனால், ரணில் அடுத்த ஆண்டுக்குள் புதிய அரசமைப்பு என்று சொன்னது, கோட்டாபய நியமித்த குழுவினரின் அரசமைப்பை. இதனைத்தான் நமது தலைவர் சம்பந்தன் வரவேற்று அறிக்கை விடுத்தார்.

நல்லாட்சி அரசாங்க காலத்தில் எதிர்க்கட்சியிலிருந்த மகிந்த தரப்பு இன்று ரணிலுடன் ஆளும்தரப்பில் இருக்கின்றது. அன்று ரணிலுடன் ஆளும் தரப்பில் இருந்த சுதந்திரக் கட்சியும், சஜித் அணியும் இன்று எதிர்க்கட்சியில் இருக்கின்றன. தாம் தயாரித்த அரசமைப்பை அவர்களும் எதிர்க்க மாட்டார்கள் என்று நம்பலாம்.

சுமந்திரன்- ஜெயம்பதி குழுவினர் தயாரித்த வரைவு, எக்கராஜ்ய- அதாவது ஒற்றையாட்சி என்று பெயர்கொண்டாலும் சமஷ்டிக்கான அதிகாரங்கள் இருக்கின்றன என்று விளக்கமளிக்கப்பட்ட அந்த வரைவிலிருந்து - அதாவது நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் விட்ட இடத்திலிருந்து தொடங்குவதற்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

இல்லையெனில் சுமந்திரன் முன்னர் சொன்னதுபோல அவரது முயற்சி அத்தோடு முடிந்துவிட்டதாக கொள்ளவேண்டியிருக்கும்.!

- ஊர்க்குருவி

# 4 வயதுச் சிறுமியை கடுமையாக தாக்கி சித்திரவதை செய்த தந்தை கைதானார்!

யாழ்ப்பாணம், நவ. 13

4 வயதுச் சிறுமியை கடுமையாகத் தாக்கி சித்திரவதை செய்த தந்தையை ஊர்காவற்றுறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மாநகரப் பகுதியில் வைத்து நேற்று காலை அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் கூறினர்.

4 வயதுச் சிறுமி மூர்க்கத்தனமாக தாக்கப்படும் காணொளி சமூக வலைத்தளங்களில் கடந்த ஒரு வாரத்துக்கு முன்பாக வெளியாகியது.

தாக்கப்பட்ட சிறுமி மற்றும் அவரது தாயாரும் வீட்டிலிருந்து வெளியேறி யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் கடந்த திங்கட் கிழமை இருந்துள்ளனர்.

அந்தப் பகுதியினால் பயணித்த குடும்பநல உத்தியோகத்தர் ஒருவர் அந்த சிறுமியை இனங்கண்டு விசாரித்துள்ளார். தாம் வீட்டை விட்டு வெளியேறி பாதுகாப்புத் தேடுவதாக தாயார் கூறியதையடுத்து அவர்களை மீட்டு வடமாகாண சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்திடம் குடும்பநல உத்தயோகத்தர் ஒப்படைத்திருந்தார்.

சிறுமி அவரது தந்தையினால் தாக்கப்படும் காணொலி பதிவே சமூக ஊடகங்களில் வெளியாகியதை கண்டறிந்த வடமாகாண சிறுவர் பராமரிப்புத் திணைக்கள அதிகாரிகள் ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு அறிவித்திருந்தனர்.

ஊர்காவற்றுறை சுருவில் பகுதியில் சிறுமியின் தந்தையை தேடியபோதும் அவர் தலைமறைவாகி உள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்று காலை யாழ்ப்பாணம் மாநகர பகுதியில் வைத்து சிறுமியைத் தாக்கிய தந்தை ஊர்காவற்றுறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

அவரை விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

“தாயாருடன் ஏற்பட்ட முரண்பாட்டில் மகளைத் தாக்கினேன். அதனை அலைபேசியில் காணொளி எடுத்தேன். அந்த காணொளி மனைவியின் அலைபேசியிலிருந்து அவரது நண்பிக்கு சென்றுவிட்டது. அதுவே வெளியாகிவிட்டது” என்று சந்தேக நபர் வாக்குமூலம் வழங்கியுள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# சீரற்ற காலநிலையால் யாழில் 1,025 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ. 13

யாழ். மாவட்டத்தில் காணப்படுகின்ற சீரற்ற காலநிலை காரணமாக கடந்த 24 மணித்தியாலத்தில் 305 குடும்பங்களை சேர்ந்த 1,025 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு வீடானது பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது.

கரவெட்டி, யாழ்ப்பாணம், பருத்தித்துறை, மருதங்கணி மற்றும் சாவச்சேரி பிரதேச செயலர் பிரிவுகளில் பாதிப்புகள் கூடுதலாக ஏற்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் கூடுதலான பாதிப்பாக 201 குடும்பங்களைச் சேர்ந்த 691 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, பொலிகண்டி பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெயர்ந்த 14 குடும்பங்களை சேர்ந்த 46 பேர் தங்க வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள்.

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் 24 குடும்பங்களைச் சேர்ந்த 72 பேரும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 54 குடும்பங்களை சேர்ந்த 171 பேரும் வெள்ளம் காரணமாக பொது இடங்களில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்குரிய சமைத்த உணவு மற்றும் தங்குமிடவசதி கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது. (அ)

# திருவண்ணாமலையில் நடைபெற்ற உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு



சென்னை, நவ. 13

லண்டனைத் தலைமையகமாகக் கொண்டியங்கும் உலக தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 15ஆவது ஆய்வு மாநாடு அண்மையில் திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியை அடுத்த தெள்ளார் இராஜா நந்திவர்மன் கலைக் கல்லூரியில் நடைபெற்றது. அமைப்பின் தலைவர் அடைக்கலமுத்து இளஞ்செழியன் தலைமையில் இரு தினங்கள் நடைபெற்ற இம் மாநாட்டில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். புதுச்சேரி சட்டப்பேரவைத் தலைவர் இரா. செல்வம் மாநாட்டு மலரை வெளியிட்டுவைத்தார். கருத்தரங்கம், ஆய்வரங்கம், கவியரங்கம், பட்டிமன்றம் என்று பல சிறப்பு அமர்வுகள் இடம்பெற்றன.

மாநாட்டில் 118 ஆய்வுக் கட்டுரைகள் வாசிக்கப்பட்டன. இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, ஜேர்மனி, இங்கிலாந்து, கனடா, பிரான்ஸ் உள்ளிட்ட 14க்கும் மேற்பட்ட நாடுகளின் பேராளர்களும் இந்திய பேராளர்களும் கலந்துகொண்டு மாநாட்டைச் சிறப்பித்தனர்.

‘வைரத்தமிழர்’ விருதும் ‘உலகத் தமிழ் மாமணி’ விருதும் வழங்கப்பட்டன.

அடுத்த மாநாடு, புதுச்சேரி அரசு சார்பில் புதுச்சேரியில் அடுத்த ஆண்டு நடைபெறவிக்கின்றது. (அ)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2022

“கூர்மையாகச் செவிமடுத்துக் கொண்டிருக்கும் விண்ணுடன் பேசுவதற்கான மண்ணின் இடையறாத முயற்சிகளே மரங்கள்”

*இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)*

# கோப்பாய் பொலிஸ் திடீர் சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், நவ. 13

யாழ்.மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ள நிலையில் போதைப்பொருட்களுன் கைது செய்யப்படுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது.

இந் நிலையில் வடக்கு மாகாண பிரதி பொலிஸ் மா அதிபரின் வழிகாட்டுதலின் கீழ், கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் தலைமையில் கடந்த வெள்ளிக் கிழமை கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் பொக்கனை பகுதியில் திடீர் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

சுற்றிவளைப்பின்போது ஒரு பெண் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளதோடு 24 போத்தல் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# ரணிலின் அரசாங்கம் மீது மக்கள் மிகுந்த நம்பிக்கை

## கூறுகிறார் சாகல ரத்நாயக்க



கொழும்பு, நவ. 13

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கம் மீது மக்கள் அதீத நம்பிக்கை வைத்துள்ளதாக ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிமனையின் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கிராண்ட்பாஸ் புனித ஜோசப் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற விசேட போஷாக்கு நிகழ்ச்சியின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக சமூகத்தில் குறைந்த வருமானம் பெறும் ஒடுக்கப்பட்ட பிரிவினர் அதிகரித்துள்ளனர். அத்தகைய குழந்தைகளின் போசாக்கு நிலையை பாதுகாக்கும் வகையில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது.

ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு உத்தரவாத வேலைத்திட்டம் பாரிய பலம். தனிப்பட்ட மட்டத்தில் முன்னெடுக்கப்படும் இவ்வாறான போஷாக்கு வேலைத்திட்டங் களைப் பாராட்டுகிறேன்.

ஜனாதிபதியினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டத்தின் பிரகாரம் எதிர்காலத்தில் இலங்கையை அபிவிருத்திய டைந்த நாடாக மாற்ற முடியும். ஆனால் அதற்கு குறிப்பிட்ட கால அவகாசம் தேவை.

சரியான தொலைநோக்குப் பார்வையின் ஊடாக நாட்டை அபிவிருத்தியை நோக்கி இட்டுச் செல்வதற்கு உறுதியான கொள்கைக் கட்டமைப்பைத் தயாரிக்கவேண்டும். அதற்குத் தேவையான சட்டங்களை இயற்றி முன்னோக்கி நகர்த்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயற்படுவார் - என்றார்.

(அ)

# இலங்கையின் ஆயுர்வேதத்தை உலகம் அனுபவிக்கவேண்டும்

## பிரதமர் தினேஷ் கூறுகிறார்

கொழும்பு, நவ. 13

இலங்கையின் கலாசாரத்தையும் பாரம்பரியத்தையும் பேணுவதற்கு இலங்கை ஆயுர்வேதத்தை உலகம் முழுவதும் பரப்ப வேண்டும் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்க ஆயுர்வேத வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் ஆயுர்வேதம் உலகம் முழுவதும் பிரபலமடைந்துள்ளதாகவும், இந்தத் தொழில் மூலம் அந்நியச் செலாவணியை உருவாக்குவதற்கான முறைமை நடைமுறையில் இல்லை என்றும் அவர் கூறினார்.

அண்டை நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களை மதிப்பீடு செய்த பின்னர், நாடு மற்றும் உலகம் முழுவதும் உள்ள உள்ளூர் ஆயுர்வேத மையங்களை திறப்பதன் மூலம் அந்நிய செலாவணியை உருவாக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆயுர்வேதப் பட்டம் பெற்ற அனைவரையும் இந்த தேசியப் பணியில் தீவிரமாக இணையுமாறு அழைப்பு விடுத்த பிரதமர், ஆயுர்வேத மருத்துவத்துறை இலங்கையின் மருத்துவத் துறையின் கோட் டையாக உள்ளது - என்றார்.

அரசாங்க ஆயுர்வேத வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பணிகளைப் பாராட்டிய பிரதமர், மருத்துவத்துறையானது ஒரு மருத்துவ முறைக்கு மட்டுப்படுத்தப்படவில்லை என்றும் கூறினார். (அ)

# மதுபோதையில் பயணிகள் பஸ் செலுத்திய இ.போ.ச. சாரதி கைது!

வவுனியா, நவ. 13

மதுபோதையில் பயணிகள் பஸ்ஸை செலுத்தி சென்ற இலங்கை போக்குவரத்துச் சபையின் சாரதி மற்றும் நடத்துநர் புளியங்குளம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை அக்கரைப்பற்றில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணிகளை ஏற்றிக்கொண்டு பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸை செலுத்திய சாரதி மதுபோதையில் இருந்துள்ளார்.

சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் புளியங்குளம் பகுதியில் மாலை 6 மணியளவில் குறித்த பஸ்ஸை மறித்து சாரதியை பரிசோதித்துள்ளனர்.

அதன்போது சாரதி மதுபோதையில் இருந்தமையை உறுதி செய்ததையடுத்து அவரை கைது செய்தனர்.

பஸ் புளியங்குளம் பொலிஸ் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டது.

சாரதி மற்றும் நடத்துநர் பரிசோதனைக்காக வைத்திய சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (அ)

# தனுஷ்க குணதிலக்கவுக்கு பிணை கோர நிதி திரட்டும் இலங்கை கிரிக்கெட் சபை




கொழும்பு, நவ. 13

பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டு அவுஸ்திரேலிய சிறையில் அடைக்கப்பட்டுள்ள கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலகவுக்கு, 200,000 டொலர் பிணை கோரி மீண்டும் மனுச் செய்யப்படவுள்ளது.

இதற்காக, 200,000 டொலர்களை திரட்டும் முயற்சியில் இலங்கை கிரிக்கெட் சபை இறங்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பிணைப் பணத்துக்காக, இலங்கை கிரிக்கெட் நிர்வாகிகள், சில நபர்களிடமிருந்து நன்கொடைகளை ஏற்கனவே கோரியுள்ளனர். கிரிக்கெட் வீரர் வனிந்து ஹசரங்க ஏற்கனவே பாரிய தொகையை கையளித்துள்ளார்.

பணம் திரட்டப்பட்டதும், நீதிமன்றத்தில் பிணை கோரி மேன்முறையீடு செய்வதற்கு பிணை வைப்புத் தொகையாக சமர்ப்பிக்கப்படும். அதன் பிறகு முக்கிய வழக்கு ஜனவரி 12ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இலங்கை கிரிக்கெட் நிர்வாகம், கடந்த வாரம் அவுஸ்திரேலிய நீதிமன்றத்தில் தனுஷ்க குணதிலகவை பிரதிநிதித்துவப்படுத்த புதிய சட்டத்தரணி ஒருவரை நியமித்தது குறிப்பிடத்தக்கது. (அ)

# திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டு விழா சிறப்பு மலர் வெளியீடு





யாழ்ப்பாணம், நவ. 13

திருநெல்வேலி பரமேஸ்வராக்கல்லூரியின் நூற்றாண்டு விழா சிறப்பு மலர் வெளியீடு கடந்த 11 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

பரமேஸ்வராக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் யாழ்பாணக் கிளை ஏற்பாட்டில், பேராசிரியர் திருமதி சுபதினி ரமேஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகவும், வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவர் ரி. பேரின்பநாதன், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே. மகேசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவர் ரி. பேரின்பநாதன் ஆகியோர் சிறப்புரைகள ஆற்றினர்.

வரலாற்றுச் சிறப்புகளைக் கொண்ட பரமேஸ்வரா கல்லூரி நூற்றாண்டு விழா சிறப்பு மலரை செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் வெளியிட்டு வைக்க யாழ். பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடத்தின் இந்து நாகரிகத் துறைத் தலைவர் கலாநிதி ச. முகுந்தன் மற்றும் சைவ சித்தாந்தத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் த. செல்வ மனோகரன் ஆகியோர் நூல் மதிப்பீட்டுரைகளை நிகழ்த்தினர்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடன ஆற்றுகையும், சேர். பொன். இராமநாதன் கட்புல ஆற்றுகைக் கலைகள் பீட மாணவிகளின் விசேட நாட்டிய, நடன நிகழ்வுகளும் இந்த நிகழ்வில் இடம்பெற்றன.

நிகழ்வில் சமயத் தலைவர்கள், பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், பல்கலைக்கழகப் பீடாதிபதிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், பணியாளர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(அ)

# பரந்த கூட்டணியை உருவாக்கத் தயார்!

## ஐக்கிய தேசியக் கட்சி அறிவிப்பு

கொழும்பு, நவ.13

**எதிர்காலத் தேர்தல்களில் போட்டியிடும் வகையில் பரந்துபட்ட கூட்டணியை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.**

கட்சியுடன் கூட்டணி அமைப்பது குறித்து ஏற்கனவே பல தரப்புக்கள் கலந்துரையாடி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் உதவித் தலைவரும் முன்னாள் கல்வி அமைச்சருமான அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்ட பின்னடைவை ஒப்புக் கொண்ட அவர், நாட்டை முன்னோக்கி வழிநடத்தும் தரமான மற்றும் முற்போக்கான தலைவர்கள் மற்றும் கொள்கைகள் கட்சிக்கு உண்டு.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரேயொரு உறுப்பினராக பாராளுமன்றத்தில் இருந்தும்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதை பாரிய சவாலாக ஏற்றுக் கொண்டார்.

அரசாங்கத்தை அமைக்கும் அடுத்த கூட்டணியை அமைப்பதில் ஐக்கிய தேசியக் கட்சியே முன்னிலை வகிக்கும். எதிர்காலத்தில் எந்தக் கட்சியும் தனித்து ஆட்சி அமைக்க முடியாது. எனவே தேர்தலில் வெற்றிபெற தலைவர்களும் கட்சிகளும் கூட்டணி அமைக்கவேண்டும்.

அடுத்த வருடத்தின் நடுப்பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி ஒரு பரந்த கூட்டணியை முன்னெடுத்து நாட்டை ஆட்சி செய்யும்.

மத்தியவாதக் கட்சிகளின் கொள்கைகளை கடுமையாக எதிர்க்கும் கட்சிகளில் இருந்தும் கூட ஏற்கனவே பல பிரிவுகள் ஜனாதிபதியுடன் இணைந்து பணியாற்ற உறுதியளித்துள்ளன.

நாட்டின் நெருக்கடியான பிரச்னைகளுக்கு அரசியல் சித்தாந்தங்கள் எதுவாக இருந்தாலும் அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து தீர்வு காணவேண்டும்-என்றார். (அ)

# சிவப்புச் சீனியை இறக்குமதி செய்க!

கொழும்பு, நவ. 13

சிவப்புச் சீனியை இறக்குமதி செய்ய வர்த்தக அமைச்சிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.

உள்நாட்டில் சிவப்புச் சீனி உற்பத்தி செய்யப்பட்டாலும் அது போதுமானதாக இல்லை. எனவே சிவப்புச் சீனியை இறக்குமதி செய்யவேண்டும் என வர்த்தகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தற்போது பெலவத்தை, செவனகல, ஹிங்குரான மற்றும் கல்ஓயா தொழிற்சாலைகளில் சிவப்புச் சீனி உற்பத்தி செய்யப்படுகிறது. தற்போது கொழும்பு புறக்கோட்டையில் ஒரு கிலோ சிவப்புச் சீனியின் மொத்த விலை 310 ரூபாவாகவும், வெள்ளைச் சீனியின் மொத்த விலை 215 ரூபாவாகவும் உள்ளது.

இதற்கான இறுதி முடிவு உணவுக் கொள்கைக் குழு மூலம் எடுக்கப்படுகிறது. ஆண்டுதோறும் எண்பதாயிரம் மெற்றிக் தொன் பழுப்பு நிறச் சீனி உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதாக கூறப்படுகிறது. (அ)

# மற்றுமொரு உரக் கப்பல் நாளை நாட்டுக்கு வரும்!

கொழும்பு, நவ. 13

22,000 மெற்றிக் தொன் யூரியா உரத்தை ஏற்றிய மற்றுமொரு கப்பல் திங்கட்கிழமை கொழும்பு துறைமுகத்துக்கு வரவுள்ளது.

2022/2023 பெரும் போகத்தில் மக்காச்சோள செய்கைக்கு தேவையான யூரியா உர இருப்புகளை கொள்வனவு செய்வதற்கு 105 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவிக்கு உலக வங்கி அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி, கடனூடாக கொள்வனவு செய்யப்பட்ட 22,000 மெற்றிக் தொன் யூரியா உரம் நாளை திங்கட்கிழமை கொழும்பு துறைமுகத்தை வந்தடையவுள்ளது.

கடன் மூலம், 13,000 மெற்றிக் தொன் உரம் முன்பு வந்தது.

முதல் சரக்கு சீனாவில் இருந்து வந்தது, இரண்டாவது கப்பல் மலேசியாவில் இருந்து வரும்.

இந்த பருவத்திற்காக 120,000 மெற்றிக் தொன் யூரியா உரம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் 566 நிலையங்கள் ஊடாக உர இருப்புக்கள் விநியோகிக்கப்படுகின்றன. (அ)

# டீசல் விலை உயர்த்தப்பட்டாலும் பஸ் கட்டணம் அதிகரிக்கப்படாது

கொழும்பு, நவ. 13

எரிபொருள் விலையில் திருத்தம் செய்யப்பட்ட போதிலும் பஸ் கட்டணம் அதிகரிக்கப்படமாட்டாது என தனியார் பஸ் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்றைய விலை திருத்தம் தமது தொழிற்துறைக்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தாது என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன குறிப்பிட்டார்.

எனவே பஸ் கட்டணத்தை உயர்த்த மாட்டோம் எனவும் அவர் தெரிவித்தார்.

அதிகாரிகள் கடந்த மாதம் இதே அளவு டீசல் விலையை குறைத்தனர். இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் விலையை உயர்த்தியுள்ளது. (அ)

# எத்தனோல் இறக்குமதி வரியை மீண்டும் உயர்த்துவதற்கு முடிவு

கொழும்பு, நவ. 13

எத்தனோல் இறக்குமதி வரியை மீண்டும் உயர்த்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க நிதி அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

கொவிட் தொற்று காலத்தின் போது, கிருமிநாசினி திரவ உற்பத்தியில் எத்தனோல் பயன்படுத்தப்பட்டதால் இறக்குமதி வரி குறைக்கப்பட்டது.

இவ்வாறு வரியை மீண்டும் அதிகரிப்பதன் மூலம் 1.6 பில்லியன் ரூபா வருமானத்தை அரசாங்கம் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கோவிட் தொற்று காலத்தில் எத்தனோல் வரி 2020 ஏப்ரல் 30 மற்றும் 2020 ஜூன் 09 ஆகிய இரு சந்தர்ப்பங்களில் குறைக்கப்பட்டது.

இந்நிலையில் ஒரு லீற்றருக்கு 25 ரூபாவாக இருந்த வற் வரியை 50 ரூபாவாக அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் கடந்த ஜனவரி மாதம் 25 ரூபாவாக குறைக்கப்பட்ட போதிலும், வாடிக்கையாளருக்கு பலன் கிடைக்காத காரணத்தினால், வரியை மீண்டும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# வெளிநாட்டில் வேலைவாய்ப்பு; மோசடி குறித்து 570 முறைப்பாடு

கொழும்பு, நவ. 13

வெளிநாடுகளில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடியில் ஈடுபற்ற தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் குறித்து இந்த வருடம் ஜனவரி முதல் ஒக்ரோபர் வரை 570 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவிக்கிறது.

அவற்றில் 182 முறைப்பாடுகள் நீதிமன்ற நடவடிக்கைளுக்கு எடுக்கப்பட்டுள்ளதாகவும், மோசடியான முறையில் அறவிடப்பட்ட 2 கோடியே 83 இலட்சத்து 83 ஆயிரம் ரூபா பணத்தொகையை முறைப்பாட்டாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வேலைவாய்ப்புப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி சம்பவங்கள் தொடர்பில் பணியகம் செய்த முறைப்பாடுகளின் பிரகாரம் மேற்கொள் ளப்பட்ட 17 சுற்றிவளைப்புகளில் 43 பேர் கைது செய்யப்பட்டு, அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் பணியகம் மேலும் குறிப்பிடுகிறது. (அ)

# கந்தக்காட்டிலிருந்து தப்பி ஓடிய கைதி வைத்தியசாலையில் பலி!

கொழும்பு, நவ. 13

கந்தக்காடு புனர்வாழ்வு முகாமில் இருந்து தப்பிச் சென்ற கைதி ஒருவர் வெலிகந்தை, சிங்கபுர வனப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டார். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் உயிரிழந்துள்ளார்.

காட்டுப் பகுதியில் காணாமல்போயிருந்த அவர் இராணுவத்தினரால் மேற் கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

உணவுப் பற்றாக்குறையால் சுகவீனமுற்றிருந்த தப்பியோடிய கைதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கந்தக்காடு புனர்வாழ்வு முகாமில் குளிப்பதற்கு பயன்படுத்தப்படும் வாளி தொடர்பில் இரு குழுக்களுக்கிடையில் கைகலப்பு ஏற்பட்டது. (அ)

# ரயில் மோதி இளைஞன் பலி!

மட்டக்களப்பு, நவ. 13

புகையிரத வண்டியில் மோதி இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கி நேற்று முன்தினம் சென்ற ரயில் மோதியே இளைஞன் உயிரிழந்துள்ளான்.

இந்தச் சம்பவம் சித்தாண்டி - முறக்கொட்டான்சேனை தேவபுரம் எனும் இடத்தில் வைத்து இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்த இளைஞன் சித்தாண்டி - 1, அலைமகள் வீதியைச் சேர்ந்த 25 வயதுடைய சிவகுமார் குவேந்திரன் என்பவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்துள்ள இளைஞனின் உடல் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை சந்திவெளி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

ஈழநாடு
Eelanadu
13.11.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 29

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## ராஜீவ்காந்தி கொலை - ஆறு பேரின் விடுதலை?

இந்தியாவின் முன்னாள் பிரதமர், ராஜீவ்காந்தியின் கொலையுடன் தொடர்புடையவர்கள் என்னுமடிப்படையில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருந்த, ஆறு பேரையும், இந்திய உச்சநீதிமன்றம் நன்னடத்தையின் அடிப்படையில் விடுதலை செய்திருக்கின்றது. இதன் மூலம், 31வருட கால விவகாரம் முடிவுக்கு வந்திருக்கின்றது. மே,1991 இல், தமிழ் நாட்டில் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டிருந்தபோது, ராஜீவ் காந்தி தற்கொலை குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டார். இதனை புலன் விசாரணை செய்த டி.ஜி.பி.கார்த்திகேயன் தலைமையிலான புலன் விசாரணைக் குழுவினர், விடுதலைப் புலிகள் இயக்கமே இந்தக் கொலையைச் செய்ததாக விசாரணைகள் முலம் நிரூபித்தது. விடுதலைப் புலிகள் இயக்கமும் அதனை மறுக்கவில்லை. வன்னியில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனிடம், இந்தக் கேள்வி கேட்கப்பட்டபோது, துன்பியல் சம்பவம் என்றே பதில் கூறப்பட்டிருந்தது. இதனுடன் தொடர்புடையவர்கள் என்னுமடிப்படையில் ஆறுபேர் கைது செய்யப்பட்டனர்.

பொது மன்னிப்பின் அடிப்படையில் அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று பல தரப்பிலும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இந்த நிலையில், 2018இல், தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியின் தலைமையிலான, சட்டமன்றம், அரசியலமைப்பின் கீழ், மானிலத்திற்குள்ள அதிகாரத்தின் அடிப்படையில், குறித்த நபர்களை, விடுதலை செய்யுமாறு, ஆளுநருக்கு சிபார்சு செய்திருந்தது. எனினும் இது தொடர்பில், ஆளுநரிடமிருந்து எவ்விதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படாத நிலையிலேயே, இந்திய உச்சநீதிமன்றம், அதற்குரிய அதிகாரத்தின் அடிப்படையில் குற்றவாளிகள் அனைவரையும் நன்னடத்தையின் அடிப்படையில், தற்போது விடுதலை செய்திருக்கின்றது. இவர்கள் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டதை, காங்கிரஸ் கட்சியின் மூத்தலைவர்கள் கண்டித்திருக்கின்றனர்.

ஆளுநர் எண்ணியிருந்தால் இவர்களின் விடுதலையை எதிர்த்திருக்கலாம். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. ஆளும் பி.ஜே.பி, தமிழ் நாட்டிற்குள் அதன் அரசியல் செயற்பாடுகளை அதிகரித்து வருகின்றது. இவ்வாறானதொரு சூழலில்தான், ராஜீவ்காந்தி கொலையுடன் தொடர்புடையவர்களின் விடுதலையை, மத்திய அரசாங்கம் கண்டும் காணாமல் விட்டிருக்கின்றது. மத்திய அரசாங்கத்தின் பக்கத்திலிருந்து, பலமான எதிர்ப்பு உச்சநீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தால், இவர்களின் விடுதலை தடைப்பட்டிருக்கும்.

ராஜீவ்காந்தி கொலை ஏன் நடந்தது - எவ்வாறு திட்டமிடப்பட்டது, இதற்கு பின்னால் யாரெல்லாம் இருந்தனர், அவர்கள் உள்நாட்டு சக்திகளா அல்லது வெளிநாட்டு சக்திகளாக? இப்போதும் இவ்வாறான கேள்விகள் ஆங்காங்கே தலைநீட்டிக் கொண்டேயிருக்கின்றது. இதற்கு தெளிவான பதில்கள் எவரிடமும் இல்லை. ஒவ்வொருவரும் தங்களின் ஊகங்களை முன்வைத்துவருகின்றனர். ராஜீவ்காந்தி கொலையை புலன்விசாரணை செய்த, கார்த்திகேயன் தலைமையிலான குழுவினர், தங்களின் விசாரணை அறிக்கையை வெளியிட்டனர். அது ஒரு நூலாகவும் வெளிவந்திருக்கின்றது.

எவர் - எப்படி இதற்கு பின்னாலிருந்தனர் என்னும் கேள்விகளுக்கு அப்பால், ராஜீவ்காந்தியின் கொலையானது, இந்தியத் தலையீட்டின் விளைவாக இடம்பெற்ற ஒன்றுதான். இன்றுவரையில் அது ஏதோவொரு வகையில் ஈழத் தமிழர் பிரச்னையில் செல்வாக்குச் செலுத்தியே வந்திருக்கின்றது. ஆனால் தற்போது, குறித்த கொலையுடன் தொடர்புடையவர்கள் விடுவிக்கப்பட்டிருக்கும் நிலையில், இந்தியாவின் அணுகுமுறையில் மாற்றங்கள் நிகழ வாய்ப்பிருக்கின்றதா என்னும் கேள்வியெழத்தான் செய்கின்றது.

## ராஜீவ் கொலை வழக்கு:
# விடுதலையானவர்கள் இலங்கை வந்தால் கைது செய்யப்படுவரா?

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வந்த 6 பேரையும் விடுதலை செய்ய இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. அந்த ஆறு பேரில் நால்வர் இலங்கை பிரஜைகள்.

நளினியின் கணவரான முருகன் என்றழைக்கப்படும் ஸ்ரீஹரன், சாந்தன், றொபேர்ட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகியோர் இலங்கையைச் சேர்ந்தவர்கள். இவர்களில் சாந்தன் மற்றும் முருகன் ஆகியோர் இலங்கை கடவுச்சீட்டை கொண்டவர்கள். றொபேர்ட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகியோர் 1990ஆம் ஆண்டு தமிழகத்திற்கு பயணித்து, அங்கு அகதி அந்தஸ்து பெற்றவர்கள்.

தற்போது, விடுதலை செய்யப்பட்டுள்ள இந்த நான்கு இலங்கையர்களுக்கும் இலங்கைக்கு வருகை தர சந்தர்ப்பம் உள்ளதாக என்பது தற்போது கேள்விகு உரியதாகியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு இலங்கையில் தொடர்ந்து தடை அமுலில் உள்ள நிலையில், விடுதலைப் புலிகளின் தாக்குதல் சம்பவம் தொடர்பில் இந்தியாவில் கைது செய்யப்பட்டு, விடுவித்து விடுதலையான இலங்கைப் பிரஜைகளால் நாட்டுக்கு மீள வர முடியுமா? என்ற கேள்வி எழுகிறது.

ஒருவேளை இலங்கைக்கு வருகை தரும் இவர்களை, விடுதலைப் புலிகளாக கருதி இலங்கை அரசாங்கம் அவர்களை மீளக் கைது செய்ய முடியுமா?

இந்த வழக்கில் விடுதலை செய்யப்பட்ட இலங் கையர்கள், மீண்டும் நாட்டிற்கு வருகை தர சந்தர்ப்பம் உள்ளதா? என்பது குறித்து பி.பி.சி. சட்ட நிபுணர்கள் சிலரிடம் வினவியது.

ஜனாதிபதி சட்டத்தரணி யூ.ஆர்.டி.சில்வா கூறுகையில்,

“அவர்களுக்கு இலங்கைக்கு வருகைத் தருவதில் எந்தவித பிரச்னையும் கிடையாது. அவர்களுக்கு கடவுச்சீட்டு உள்ளது என்றால், அவர்களுக்கு விஸா உள்ளது என்றால், நிச்சயமாக நாட்டுக்கு வருகை தர முடியும். எனினும், ஏதேனும் குற்றச்சாட்டு தொடர்பில் இவர்களின் பெயர்கள் சந்தேக நபர்களின் பெயர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கும் பட்சத்தில், அவர்களை கைதுசெய்ய முடியும்,” என்கிறார் சில்வா.

இலங்கையில் தடை செய்யப்பட்ட அமைப்பு ஒன்றுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் இந்தியாவில் கைது செய்யப்பட்டு, விடுதலையாகியுள்ளவர்களை மீள அதே குற்றச்சாட்டு தொடர்பில் கைது செய்ய முடியுமா?

“அந்த குற்றச்சாட்டு தொடர்பில் கைது செய்ய முடியாது. இலங்கைக்குள் ஏதேனும் குற்றம் செய்திருக்கவேண்டும். உதாரணமாக விடுதலைப் புலிகளின் செயல்பாடுகளுக்கு நிதி வழங்கியிருந்தால் அல்லது வேறு விதமான ஒத்துழைப்புக்களை வழங்கியிருந்தால், அவர்களை கைது செய்ய முடியும்” என அவர் பதிலளித்தார்.

மனித உரிமைகள் ஆணைக்குழு என்ன சொல்கிறது?

இதே கேள்விகளை இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் சட்டத்தரணி பிரதீபா மஹாநாம ஹேவாவிடம் நாம் வினவினோம்.

“அவர்கள் இலங்கைக்கு வருகை தர முடியும். விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு இலங்கையில் தொடர்ந்தும் தடை காணப்படுகின்றது. இவர்கள் உறுப்பினர்கள் என்றால், விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களின் பெயர்களும் கறுப்பு பட்டியலுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளது.

இவர்கள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் என்ற சந்தேக நபர்கள் மாத்திரமே. எனினும், அவர்கள் விடுதலைப் புலிகள் என்ற பெயர் அவர்கள் மீது பொறிக்கப்படவில்லை. வழக்கிலிருந்து முழுமையாக விடுதலை செய்யப்படுகின்றார்கள் என்றால், அவர்களுக்கு தண்டனை இல்லாது செய்தே, விடுதலை செய்யப்பட்டார்கள். அப்படி என்றால், அவர்களுக்கு அடிப்படை உரிமை உள்ளது. இலங்கை பிரஜையொருவருக்கு எந்தவொரு நேரத்திலும் இலங்கைக்கு வருகைத் தர முடியும்.


எந்தவொரு நேரத்தில் நாட்டை விட்டு வெளியேறவும் முடியும் என சட்ட ஏற்பாடு-14 இல், இறுதியாக கூறப்பட்டுள்ளது. வேறு குற்றங்களை செய்திருந்தால், கைது செய்யப்படலாம். ஆனால், வேறு குற்றங்கள் கிடையாது. அப்படி என்றால், கைது செய்ய முடியாது”

இதேவேளை, குறித்த நான்கு பேரும் விடுதலைப் புலி உறுப்பினர்கள் என உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில், அது அவர்களுக்கு பிரச்னையாக உருவாகலாம் என மூத்த சட்டத்தரணி இளையதம்பி தம்பையா,

“விடுதலைப் புலி உறுப்பினர்களாக இருந்து, அவர்கள் இந்த தாக்குதலை நடத்த உதவி செய்துள்ளார்கள் என குற்றப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருந்தால், அவர்களுக்கு பிரச்னை உள்ளது. விடுதலைப் புலிகள் தடை விதிக்கப்பட்ட அமைப்பு. தடை செய்யப்பட்ட சிலரின் பெயர்களை, தடைபட்டியலிலிருந்து இலங்கை நீக்கியுள்ளது. இவர்கள் மீது தடை இருந்தால், அந்த தடையை நீக்க வேண்டும்.

இந்தியாவிலும் அவர்களுக்கு பிரச்னை உள்ளது. அவர்களை முகாம்களுக்கே அனுப்புவார்கள். அவர்களை இந்தியாவில் நடமாட விடமாட்டார்கள். சொந்த நாட்டு பிரஜைகள் இல்லாதமையினால், அவர்களை முகாமுக்கே அனுப்புவார்கள். ஆனாலும், இந்தியா விஸா கொடுத்தால், அவர்களுக்கு அங்கு இருக்க முடியும். நாடு கடத்தினாலும், இலங்கை ஏற்குமா என்ற கேள்வி இருக்கின்றது. எங்களுக்கு இலங்கைக்கு போக முடியாது, தங்கு மிட வீசாவை வழங்குமாறு அவர்கள் கோரிக்கை விடுக்க முடியும்.அதற்கு மறுப்பு தெரிவிக்கப்படும் பட்சத்தில், அந்த நாட்டு நீதிமன்றத்தை நாட முடியும். இவர்களை வருகை தர இலங்கை அனுமதி வழங்கினால், பிரச்னை கிடையாது” என்கிறார்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



# இயற்கை மருத்துவம் பற்றியதொரு பகிர்வு

பகிர்வு -55

கணபதி சர்வானந்தா

“யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்” என்ற வகையில் எனது அறிவுக் கண்களைத் திறந்த ஒரு கல்வி மானை நான் ஞாபகப்படுத்திக்கொண்டேன். அவர் ஒரு பொறியியலாளர். இயற்கை மீது மிகவும் நம்பிக்கைக் கொண்டவர். அத்துடன் அக்கறை கொண்டவர். அதனால்தான் தேனீ வளர்ப்புக் கலையில் அக்கறை கொண்டு தானாகவே அதனைத் தேடிக் கற்று, தானும் பயன்பெற்று அதனைப் பலருக்குச் சொல்லிக் கொடுத்தவர். யுத்த காலத்தில் காணப்பட்ட மக்கள் நிர்வாகம் அவரைச் சரி வரப் பயன்படுத்தி அவரை வைத்துத் தேனீக்கள் பற்றிய ஆவணம் ஒன்றைத் தயாரித்து மக்களைப் விழிப்படையச் செய்தனர்.

இன்று அவர் என்னருகில் இல்லை. ஆனால் அவர் விட்டுச் சென்ற சித்த மருத்துவம் பற்றிய அறிவொன்றினைப் பலர் மத்தியில் நான் பரப்பிவருகி றேன். அதனைக் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாகக் கடைப்பிடித்துப் பயனடைந்தும் வருகிறேன். அது காயகல்பம் என்று சொல்லப்படுகிற கடுக்காய் பயன்பாடு பற்றியது.

“காலையில் இஞ்சி, கடும்பகல் சுக்கு, மாலையில் கடுக்காய் மண்டலம் உண்டால் கோலை ஊன்றி குறுகி நடக்கும் கிழவனும், கோலை வீசி குலாவி நடப்பனே“, ஹ- இது சித்தர்கள் வாக்கு. ஹகடுக்காய் உண்டால் மிடுக்காய் வாழலாம்“, ஹஈனாத மாட்டுக்கு ஒரு கடுக்காய் இளம் பிள்ளைத்தாய்ச் சிக்கு ஏழு கடுக்காய்“ போன்ற பழமொழிகளும் கடுக்காயின் மகத்துவத்தை எடுத்துரைக்கின்றன.

“உடல் அழியாத் தன்மை பெற அறுபதுக்கு மேற்பட்ட காயகல்ப முறைகளைப் பின்பற்ற வேண்டும். குறிப்பாக உடல், மனம், ஆன்மா என அனைத்தையும் தூய்மை செய்யும் ஆற்றல் கடுக்காய்க்கு உண்டு” என்று கூறும் திருமூலர் அதை ஹஅமுதம்’ என்று குறிப்பிடுகிறார். அதாவது, “தேவர்கள் பாற்கடலைக் கடைந்தபோது தோன்றிய அமிர்தத்துக்கு ஒப்பானது.” எனத் திருமூலர் குறிப்பிட்டிருக்கிறார்.

“காலையில் – இஞ்சி, கடும்பகல் – சுக்கு, மாலையில் – கடுக்காய் என, 48 நாட்கள் தொடர்ந்து அவற்றை உண்டு வந்தால் நரை, திரை, மூப்பு இன்றி இளமையாக வாழலாம்.” என்பதொரு மூலிகை இரகசியம்.

கடுக்காய் ஓட்டைத்தூளாக்கி அதன் பொடியை இரவு உணவுக்குப் பின் உண்டு, ஒரு டம்ளர் நீரைக் குடித்துவர உடல் வலுவாகும். வாதம் குணமாகும் என்ற குறிப்பையும் இயற்கை மருத்துவத்தில் காணலாம். உணவே மருந்து, மருந்தே உணவு என்ற சொற்பதம் கடுக்காய் விடயத்தில் அதிக பொருத்தம் உடையது எனலாம்.

கடுக்காய் நீள் வட்ட வடிவிலோ அல்லது நீண்டோ காணப்படும். கடுக்காயில் மொத்தமாக ஏழு வகைகள் உள்ளன என்று சொல்லப்படுகிறது. அதன் தன்மைகளைப் பொறுத்து, கருங்கடுக்காய், செங்கடுக்காய், வரிக்கடுக்காய், பால் கடுக்காய் என அதனைப் பல பெயர்களில் அழைக்கிறார்கள். அறுசுவைகளில் ஒன்றான “உவர்ப்புச் சுவை” மட்டும் கடுக்காயில் இல்லை. அதைத் தவிர ஏனைய ஐந்து சுவைகளான இனிப்பு, புளிப்பு, கசப்பு, துவர்ப்பு, கார்ப்பு என அனைத்தும் அதில் அடங்கியுள்ளன. வாய், தொண்டை, இரைப்பை மற்றும், குடலில் உள்ள புண்களை ஆற்றும் தன்மை கொண்டது. மலச்சிக்கலைப் போக்கி குடற் சக்தியை அதிகரிக்கும் ஆற்றல் கடுக்காய்க்கு உண்டு. கடுக்காய் மரம் ஏறத்தாழ 60 அடி உயரத்திற்கு மேல் வளரும் தன்மை கொண்டது.

“கடுக்காயைப் பயன்படுத்துவோர் கவனத்தில் கொள்ள வேண்டியதொரு முக்கிய விடயம் இது.கடுக்காயில் மேல் தோல் மட்டுமே மருத்துவப் பயன்பாட்டுக்குரியவை. இததர பாகங்களைப் பயன்படுத்தக் கூடாது என இயற்கை மருத்துவம் எச்சரிகை செய்கிறது.”

கடுக்காய் தோல் பொடியை உபயோகிப்பதில் அப்படி என்ன நன்மை உண்டு? என்று கேட்டால்.. உடலை ஊக்கப்படுத்தும். பசியைத் தூண்டும். இரத்தத்தைச் சுத்தப்படுத்தும். வாதம், பித்தம், கபம் ஆகியவற்றால் வரும் பல்வேறு நோய்களைக் குணப்படுத்தும். காது நோயைக் குணப்படுத்தும். கடுக்காய் வலிமையூட்டும், நீர்பெருக்கி, உள்ளழலகற்றி, புண்கள், கண்நோய், இருமல், காமாலை, கை கால் நமச்சல், தலைநோய், இரைப்பு, நாவறட்சி, மார்பு நோய், மூலம், மேகம், வயிற்றுப்பொருமல், விக்கல் போன்றவைகளை குணப்படுத்தும்.

சித்த மருத்துவத்தில் கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய் ஆகிய மூன்றினது பொடிகளைச் சேர்த்து அரைத்து “திரிபலா” என்ற மருந்தைத் தயார் செய்கிறார்கள். இது “சர்வ நோய் நிவாரணியாக” சொல்லப்படுகிறது. பல இயற்கை மருந்துப் பொருட்கள் விற்கும் கடைகளில் இதனை வாங்கலாம்.

மலச்சிக்கல், வயிற்றுப் பிணிகள் உள்ளவர்கள், 15 கிராம் கடுக்காய்த் தோலை எடுத்து நசுக்கி, 15 கிராம் கராம்பு சேர்த்து அதனுள் ஒரு தம்ளர் நீர் விட்டுக் கொதிக்க வைத்து, ஆறியபின் அதனை அதிகாலையில் குடித்தால், சுக பேதியாகும்.

கடுக்காய் தோலை எடுத்து அதனுடன் தேவையான அளவு இஞ்சி, மிளகாய், புளி, உளுத்தம் பருப்பு என்பனவற்றை ஒன்றாகச் சேர்த்து அதனை நெய்யில் வதக்கி அதனுடன் உப்பைச் சேர்த்துத் துவையலாக அரைத்து அதனைப் பின்னர் சுட சுட சாதத்துடன் பிசைந்து சாப்பிட்டு வந்தால் ஜீரணசக்தி கூடும். அஜீரணக் கோளாறுகள் நீங்கும். மலச்சிக்கல் பிரச்சினை தீரும். உடல் பலம் பெறும். அத்துடன் வாய்வுப் பிரச்சனை வயிறு அழுவது அனைத்தும் நீங்கிவிடும் என்று இயற்கை மருத்துவக் குறிப்பில் உண்டு.

“கடுக்காய் அக நெஞ்சு” என்பது சித்த மருத்துவ மொழி. கடுக்காயின் மருத்துவப் பயனைப்பெற அதன் விதையை நீக்கித் தோலைப் பயன்படுத்த வேண்டும். கடுக்காயின் தோலில் மலச்சிக்கலை நீக்கும் “ஆந்த்ரோகுயுனோன்” வகையானதொரு வேதிப் பொருள் உண்டு.பெற்ற தாயைவிட சிறந்தது கடுக்காய் என்பதை “கடுக்காய் தாயக்கதிகம் காண்” என்றுரைக்கிறார் அகத்தியர்.

ஒரு முக்கிய குறிப்பு. நீங்கள் மருந்தாக ஒன்றைப் பயன்படுத்த முன்பு, அத்துறைசார்ந்த வைத்தியரோடு உங்கள் உடல் ஆரோக்கியம் பற்றிக் கலந்துரையாடி அவர் ஆலோசனை பெறுவது மிகவும் முக்கியம்.

# இந்தவார ராசிபலன் 13.11.2022 - 19.11.2022

நவம்பர் 13 ஞாயிற்றுக்கிழமை
சுபகிருது வருடம் - ஐப்பசி 27

நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 04.30 - 06.00 திதி : பஞ்சமி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

கவனமாக செயல்படுங்கள்.தொழில் சம்பந்தமாக வெளியூர் பயணம் மேற்கொள்வீர்கள். செலவு அதிகரித்தாலும் அதற்கேற்ப வருவாய் வரும். மனம் விரும்பிய வகையில் செயல்படுவீர்கள். இனிய சம்பவங்கள் நடந்தேறும். வெளித்தொடர்புகளால் நன்மை ஏற்படும். பணிகளில் நெருக்கடி உண்டாகும். பேச்சில் கவனம் தேவை. தவறான எண்ணங்களால் தடுமாற்றம் அடைவீர்கள்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

உங்கள் எண்ணம் நிறைவேறும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். செயல்களில் இழுபறி ஏற்பட்டாலும் புத்திசாலித்தனத்தால் எல்லாவற்றையும் சரி செய்வீர்கள். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். பகைவர் தொல்லை விலகும். நெருக்கடிகளை சந்திப்பீர்கள். முயற்சிகளில் கூடுதல் பலன் கிடைக்கும். இடையூறாக இருந்தவர்கள் விலகிச் செல்வர்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

வாரத்தின் முதல்நாளில் செலவு அதிகரிக்கும். முயற்சியில் கடின நிலை உண்டாகும். எதிர்பார்த்தவற்றில் நன்மை உண்டாகும். அந்நியர்கள் வழியே ஆதாயம் உண்டாகும். குடும்பத்தினர் ஆதரவாக இருப்பர் செலவு அதிகரிக்கும். திறமை பளிச்சிடும். குடும்பச் செலவு அதிகரிக்கும். பூர்வீக சொத்தில் இருந்த பிரச்னை தீரும். பணியில் உங்கள் நிலை உயரும். அரசு வழியில் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

வருமானத் தடை உண்டாகும். செலவு அதிகரிக்கும். அரசு வழியில் நன்மை காண்பீர்கள். எதிர்பார்ப்பு நிறைவேறும் வாரம் இது. நண்பர்களுடன் இருந்த கருத்து வேறுபாடு மறையும். அரசு வழியில் முயற்சிகள் நிறைவேறும். உங்கள் செயல்கள் வெற்றி பெறும். வருமானம் அதிகரிக்கும். செயலில் வேகம் பிறக்கும். உறவினர், நண்பர்கள் உதவுவர். அந்நியர்களால் ஆதாயம் கிடைக்கும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

எதிர்பார்ப்பு பூர்த்தியாகும். நீண்ட நாளாக இழுபறியாக இருந்த முயற்சி நடந்தேறும். பணியில் இருந்த நெருக்கடி விலகும். செலவு அதிகரிக்கும். முயற்சியில் ஆதாயம் காண்பீர்கள். எதிர்பாராத செலவைச் சந்திப்பீர்கள். அரசு வழியில் ஆதாயம் கிடைக்கும். பணியில் இருந்த நெருக்கடி விலகும். குடும்பத்தில் குழப்பம் தீரும். சிலருக்கு புதிய வேலைவாய்ப்பு அமையும். வரவேண்டிய பணம் வந்து சேரும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

நெருக்கடிகள் விலகும். செலவுக்கேற்ற வரவு வந்து கொண்டிருக்கும். வியாபாரத்தில் ஏற்பட்ட சங்கடம் விலகும். பொருளாதாரம் உயரும். செலவு அதிகரிக்கும். உறவினர் ஆதரவுடன் முயற்சி வெற்றி பெறும். மகிழ்ச்சி அதிகரிக்கும். வரவு செலவில் கவனம் தேவை. சங்கடங்களை சந்திப்பீர்கள். குடும்பத்தினருடன் கருத்து வேறுபாடு தோன்றலாம்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

முயற்சிகள் தள்ளிப்போகும். அதன்பின் நிலைமை சீராகும். உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். அந்நியரால் ஆதாயம் அதிகரிக்கும். சங்கடங்களை சந்திப்பீர்கள். மனம்போன போக்கில் செல்வீர்கள். சோதனை ஏற்படும். கவனம் தேவை. கவனமாக செயல்பட்டாலும் சில தவறுகள் உண்டாகும். அதன்பின் நிலைமை சீராகும். எதிர்பாலினரால் சங்கடங்களை சந்திப்பீர்கள்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

முயற்சியில் வெற்றி காண்பீர்கள். நினைத்ததை அடைவீர்கள். சிரமம் உண்டாகும். தெளிவான முடிவுகளை மேற்கொள்ள முடியாமல் போகும். எதிரி தொல்லை விலகும். உங்கள் செயல்கள் லாபமாகும். பொன் பொருள் சேரும். பழைய பிரச்னைகள் தலைதூக்கும். திட்டமிட்ட பணிகள் நிறைவேற விடாமுயற்சி தேவைப்படும். அதன் பின் சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். எதிர்பார்ப்பு நிறைவேறும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

எண்ணங்கள் நிறைவேறும். முயற்சி வெற்றி பெறும். குடும்பத்தில் இருந்த நெருக்கடி விலகும். அரசு வழியில் பிரச்னையில் இருந்து வெளியில் வருவீர்கள். எதிலும் கவனம் தேவை. நேர்மையான வழியில் முன்னேறுவீர்கள். சங்கடங்களை விட்டு வெளியில் வருவீர்கள். பணியில் கூடுதல் அக்கறை செலுத்துவீர்கள்.எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரும். குடும்பத்தில் நிம்மதி உண்டாகும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

நெருக்கடியில் இருந்து மீள்வீர்கள். வருமானம் புதுவழிகளில் வரும். செயல்களில் கவனம் தேவை. திட்டமிட்டு செயல்பட்டு வெற்றி அடைவீர்கள். தொழிலை விரிவு செய்வீர்கள். வேலைக்காக முயற்சித்தவர்களுக்கு நல்ல வேலை உண்டாகும். செயல்களில் கவனம் தேவை. நன்மை காண்பீர்கள். துணிச்சலுடன் செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். விழிப்பாக செயல்படவும்.


### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

தடைகளை சந்திப்பீர்கள். அரசு வழியில் நெருக்கடி உண்டாகும். குடும்ப நலனில் அக்கறை ஏற்படும். நீண்டநாள் எண்ணம் நிறைவேறும். பணவரவால் மகிழ்வீர்கள். தைரியம் அதிகரிக்கும். செயல்களில் சங்கடம் ஏற்படும். தொழிலில் இருந்த தடைகள் விலகும். சிலருக்கு புதிய வேலை அமையும். குடும்பத்தினர் உதவியுடன் புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

உற்சாகத்துடன் செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். நன்மை அதிகரிக்கும். வருமானத்தில் ஏற்பட்ட தடைகள் விலகும். அரசு வழியிலான முயற்சி நிறைவேறும். வீடு மனை வாங்கும் சிந்தனை மேலோங்கும். உடல்நலக்குறைவு ஏற்படலாம். பலத்தால் நன்மை காணும் வாரம் இது. விருப்பங்கள் எளிதாக நிறைவேறும். தடைகள் விலகும். வரவு அதிகரிக்கும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும்.

# இலங்கை அரசியலில் செல்வாக்கு நிறைக்கும் பிரிட்டிஷ் பணக்காரர் ‘லைக்கா’ சுபாஸ்கரன்!






ரஜினிகாந்தையும் ஏ. ஆர். ரஹ்மானையும் வைத்து 2018இல் 575 கோடி இந்திய ரூபாய் செலவில் - நாட்டிலேயே அன்றைய தினம் அதிக பட்ஜெட்டில் ‘2.0’ படத்தை எடுத்த லைக்கா ரெலிகொம் நிறுவனத் தலைவர் சுபாஸ்கரன் அல்லிராஜா, இந்த ஆண்டு, ‘பொன்னியின் செல்வன்- பாகம்1’ என்ற இன்னொரு பிரம்மாண்டமான தயாரிப்பு மூலம் வண்ணத்திரை ரசிகர்களைக் கவர்ந்ததோடு, சினிமா உலகத்தையே அதிர வைத்துள்ளார். தற்போது, கோலிவுட் தலைநகரமாகிய சென்னையிலிருந்து செயல்பட்டு வரும் அவரின் லைக்கா ப்ரொடஷன்ஸ், இலங்கை - பிரித்தானியரான சுபாஸ்கரனை இந்திய திரை உலகத்தில் ஒரு மாமன்னராகவே முடிசூட்டியுள்ளது.

இங்கிலாந்தில் உள்ள பெரிய பணக்காரர்களில் ஒருவராக ஜொலிக்கும் இவர், அந் நாட்டின் ஆளும் கன்சர் வேடிவ் கட்சியின் ஒரு பிரதான பெருநிறுவனன் கொடையாளராவார். முக்கிய தொழிலதிபர்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் நெருக்கமான தொடர்புகள் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் அமைவது உலகமெங்கும் நடப்பதுதான். அது போன்றுதான், சுபாஸ்கரனின் அரசியல் தொடர்புகள் இங்கிலாந்திலும் இலங்கையிலும். இதில் ஆச்சரியப் படுவதற்கோ, சந்தே கப்படுவதற்கோ, ஆட்சேபிப்பதற்கோ தேவையில்லை என்று நினைக்கிறேன். அவர் மீது சில வரிச் சிக்கல் குற்றச் சாட்டுகள் இருந்த போதிலும், பிரித்தானிய அரசியலில் அவரின் கனிவான இருதயத் துடிப்பால் பலபெரும் நன்மைகள், அவரின் ஈழத்து மக்களையும் சென்றடைந்துள்ளன. நீங்கள் சுபாஸ்கரனுக்கு ராஜபக்ஷ குடும்பத்துடன் நட்புண்டு என்ற செய்திகளை முன்பு படித்திருக்கலாம். அதோடு, அவர் ராஜபக்ஷ குடும்பத்துடன் நட்பில்லை என்று சென்னையில் செய்தியாளர்களுக்கு, விஜயை வைத்து எடுத்த ‘கத்தி’ திரைப்படத்தின் வெளியீட்டின் போது அளித்த விளக்கத்தையும் கேட்டிருப்பீர்கள்.

அவர், அதிபர் ரணில் விக்ரமசிங்கவுடன் மேற்கொண்ட சந்திப்பு குறித்தும், ஆட்சியாளர்களுடன் அவருக்கு இருக்கும் நட்பு குறித்தும், இலங்கைச் சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க அரசு முடிவெடுத்திருப்பது குறித்தும் அண்மைக் காலங்களில் ஊடகங்களில் செய்திகள் வெளியானதையும் நிச்சயம் பார்த்திருப்பீர்கள். அந்த அரசியல் கைதிகள் அனை வரையும் தைப்பொங்கலுக்குள் விடுதலை செய்வதாக ரணில் உறுதியளித்துள்ளார். செல்வாக்கு மிக்க பிரித் தானிய தமிழரின் தலையீட்டால், வரும் மாதங்களில் இது போன்ற பல நேர்மறை நிகழ்வுகளை எதிர்பார்க்கலாம்.

‘வடக்கு மக்கள் பிரச்னைக்குச் சுதந்தர தினத்திற்குள் தீர்வு’ - வெள்ளியன்று ‘ஈழநாடு’ முதல் பக்கத்தில் பிரதான செய்தியாக இலங்கை அதிபர் ரணிலின் வாக்குறுதியைக் கண்டிருப்பீர்கள். என் மனதிற்குள் மகிழ்ச்சி. ஒரு புது நம்பிக்கை, எதிர்பார்ப்பு. ஏனோ தெரியவில்லை. ஒருவேளை, ரணிலின் இந்த உற்சாகத்தில் சுபாஸ்கரனின் பங்கிருக்குமோ? தெரியவில்லையே! நாம் பலமுறை இதுபோல் வாக்குறுதிகளைச் சிங்கள ஆட்சியாளர்களிடமிருந்து கேட்டிருக்கிறோம், ஏமாந்திருக்கிறோம். குறிப்பாக, பாராளுமன்றத்தில் மாபெரும் எண்ணிக்கையில் உறுப்பினர்களைக் கொண்ட பலமும், சிங்கள பொதுமக்களிடமும் முன்னோடியில்லாது செல்வாக்கும் பெற்றிருந்தும், மகிந்த 2009ஆம் ஆண்டு, மே மாதம் தந்த, “அனைவருக்கும் சம உரிமைகள், வாய்ப்புகள், நியாயம்” என்ற வாக்குறுதியை நிறைவேற்ற மனமில்லாதவராக, வரலாற்றில் தோல்வியை, இன வெறியால் கண்ட பெருமையுடன் ஏற்றுக்கொண்டதைக் கண்டிருக்கிறோம். அதன் விளைவுகளைத் தாங்கிக் கொண்டிருக்கிறோம், நம்முடைய சுயநலக்கார அரசிய தலைவர்களின் ‘உதவியுடன்’! இனிமேலாவது நல்ல காலம் பிறக்கட்டும்.

கொழும்பில் உள்ள தமிழ்த் தலைவர்களுடனும் சுபாஸ்கரன் சந்திப்பு நிகழ்த்தியிருப்பது குறித்த படங்களும் செய்திகளும்கூட செய்தி ஊடகங்களில் வந்ததை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இலங்கையிலுள்ள ஊடக நண்பர் ஒருவர், ரெலோவின் செல்வாக்கு மிக்க தலைவரான என் இனிய நண்பர் செல்வம் அடைக்கலநாதனு டன் சுபாஸ்கரன் இருக்கும் புகைப்படம் ஒன்றை என்னு டன் பகிர்ந்திருந்தார். இது, எனது ஆழ்ந்த சிந்தனையைத் தூண்டியது. மூத்த ஈழப் பத்திரிகையாளர்கள் சிலரு டன் இதுபற்றிப் பேசினேன். நாட்டின் அரசியலில் சுவாரஸ்யமாக ஏதோ ஒரு நிகழ்வு நடந்து கொண்டி ருக்கிறது என்றும், வரவிருக்கும் மாற்றத்திற்கு சுபாஸ்கரனின் பங்களிப்பு இருக்கலாம் என்றும் நான் கருதுவதை அவர்களும் ஒப்புக்கொண்டார்கள்.

பாராளுமன்றத்தில், ஒரேயோர் உறுப்பினர் கொண்ட கட்சியாக, மகிந்தவின் எம்பிக்கள் கொடுக்கும் ஒக்சிசனாலும், இன்னும் சில ‘நட்பு’களின் ஆதரவிலும் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கும் ரணில், பலரின் இழுப்பு களுக்கும் அழுத்தங்களுக்கும் இடையில் மூச்சு முட்டிக்கொண்டிருக்கிறார். செல்வம் போன்ற நண்பர்களின் உதவியுடன் ஈழத்திலும் ரணில் மற்றும் சில சக்தி வாய்ந்த சிங்களத் தலைவர்களின் உறவுடன் சிங்களத் தெற்கிலும் தனது அரசியல் செல்வாக்கைக் கட்டமைத்து வரும் மாபெரும் பணக்காரரான சுபாஸ்கரனின் ஆதரவு, ரணிலுக்கும் உதவலாம். மிகவும் மோச மான பொருளாதார வீழ்ச்சியையும் உணவுப் பற்றாக் குறையையும் எதிர்கொண்டுவரும் இந்தத் தீவு தேசத்துக்கு, நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் சுபாஸ்கரனின் ஈடுபாடு (அதற்குரிய நிதி, அரசியல், சமூக அங்கீகாரத்தை எதிர்பார்த்துத்தான் என்றாலும்) நீண்ட காலமாக மறுக்கப்பட்டு வந்த தமிழர்களின் உரிமைகளை வழங்குவதாக இருந்தாலும், சிங்களவர்கள் அதை இறைவன் அளித்த பரிசாகவே கருதக்கூடும். காலிமுக போராட்டத்தில், தங்கள் ஆற்றலையும் சக்தியையும் இழந்த சிங்கள மக்கள், சமரசத்துக்கும் மறுசீரமைப்புக்குமான நேரம் வந்து விட்டது என்பதை ஏற்கத்தான் செய்வார்கள்.


ஹரித்ரா

போரால் அஞ்சி, பசியால் வாடி, இரத்தத்தையும் பிணக்குவியல்களையும் கண்ட கொடூர நினைவுகளால் தூக்கம் தொலைத்துத் தவித்து நிற்கும் ஈழ மக்களுக்கு நான் கனவு கண்டு வரும் இந்த மாற்றம் நன்மையளிக்கும் என்று உறுதியாக நம்புகிறேன். நிகழவிருக்கும் இந்த மாற்றம், ஈழ மக்களைக் கடந்தகால அச்சங்களிலிருந்து மீட்பதுடன் மட்டுமல்லாமல், அவர்களையும் அவர்க ளின் சந்ததியினரையும் இன வேறுபாடில்லாத, வளரும் பொருளாதாரத்தை நோக்கிய விடியலுக்கு இட்டுச் செல் லும் என்றும் உறுதியாக நம்புகிறேன். சந்தர்ப்பவாதம் மற்றும் சுயநல நோக்கங்களைக் கொண்ட தற்கால அரசியல் சூழலுக்கு ஒரு மாற்றாக இது இருக்கும் என்றும் எண்ணுகிறேன்.

எதிர்வரும் சில மாதங்கள் அல்லது ஆண்டுகளில் இப்படி ஒரு மாற்றம் நிகழும் என்ற நம்பிக்கையில், இந்தச் சூழல் மாற்றங்கள், இந்துமா கடல் பகுதியில், குறிப்பாக, தமிழகத்தின் தென் முனையான இராமேஸ்வரத்திலிருந்து ஒரு மணி நேரத்திற்கும் குறைவான நேரத்தில் படகுச் சவாரியில் எட்டக்கூடிய இலங்கைத் தீவில் ஆதிக்கம் செலுத்த இந்தியாவுக்கும் சீனாவுக்குமான மோதல் என்ற புவிசார் அரசியல் மாற்றங்களில் எப்படித் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் சிந்திக்கிறேன். என் மூளையில் வறுபட்டுக்கொண்டிருக்கும் மசாலாவில் சிறிது வாசனைப் பொருட்களைச் சேர்த்துச் சிந்தித்ததில் உருவான என் எண்ணம் - ‘லைக்காவின் தலைமையகம் சென்னையில் உள்ளது, சுபாஸ்கரனும் எதிர்காலத்திற் கான தனது பெரிய திட்டங்களைக் குறித்துப் பேசியுள் ளார். அவை திரைத் துறையில் மட்டுமல்லாமல், மற் றைய துறைகளிலும் ஈடுபாடு கொண்டுள்ளன. இத்தனை ஆண்டுகளாக இருந்ததைப்போலவே தமிழகம் அமை திப் பூங்காவாகத் திகழச்செய்ய அவர் விருப்பம் கொண்டுள்ளார் என்று நம்பலாம்’. என் சிந்தனை கொஞ்சம் அதீதமாக இருக்கிறதோ…?

முப்பதாண்டுகளுக்கும் மேலாகச் சிறைவாசம் அனுபவித்துவிட்ட, ராஜீவ் காந்தி கொலைக் கைதிகள் ஆறு பேரையும் விடுதலைசெய்ய வெள்ளியன்று உத்தரவிட்ட உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பையடுத்து, அவர்களுக்கு உதவ, லைக்கா தலைவர் ஏதேனும் செய்யலாம். அவர்களின் தலைவிதி குறித்து ஏற்கெனவே ஊடகங்களிலும் மற்ற தளங்களிலும் விவாதங்கள் தொடங்கிவிட்டன - அவர்கள் சிறப்பு முகாம்களுக்கு அனுப்பப்படுவார்களா அல்லது தாய்நாடான இலங்கைக்கு அனுப்பப்படுவார் களா என்ற விவாதம். இலங்கைக்கு அனுப்பினால், சிங்கள அரசால் மீண்டும் சிறையில் அடைக்கப்படலாம் என்ற அச்சமும் எழுந்துள்ளது.

புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனால் உத்தரவிடப்பட்ட அந்தக் கொடூரக் கொலை குறித்த விவரங்களுக்குள் செல்ல நான் விரும்பவில்லை. அது குறித்து நிறைய எழுதப்பட்டுவிட்டது. சிபிஐ இயக்குநர் கார்த்திகேயன் தலைமையிலான சிறப்புப் புலனாய்வுக் குழு மேற்கொண்ட அந்த ‘ஓட்டை’ விசாரணை குறித் தும் நானே விமர்சித்துள்ளேன். இப்போது, தமிழகத் தைச் சேர்ந்த நளினி, சிவராசனால் அமைக்கப்பட்ட தாக்குதல் குழுவில் அங்கம் வகித்த, இலங்கையைச் சேர்ந்த எல்ரிரிஈ போராளியான அவரது கணவர் சிறி ஹரன் என்ற முருகன் உள்ளிட்ட, ஆயுள் தண்டனை பெற்ற இந்த ஆறு பேரைப் பற்றி எழுதுவது போது மானது. விடுதலை செய்யலாம் என்று உத்தரவிடப்பட் டுள்ள எஞ்சிய நான்கு பேரில், ரவிச்சந்திரன் மட்டுமே தமிழகத்தைச் சேர்ந்தவர். மீதமுள்ள சாந்தன் என்ற ரவிராஜ், றொபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் ஈழத் தமிழர்கள்.

ரவிச்சந்திரன் அவரது குடும்பத்தினருடன் சேர்க்கப்படுவார் என்றும் சாந்தன், றொபர்ட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகியோர் அகதி முகாம்களுக்கு வெளியே தங்கும் அகதிகள் என்ற அந்தஸ்துடன் ஒரு வீட்டைச் சிறப்பு முகாமாக்கித் தங்க வைக்கப்படவுள்ளார்கள் என்றும் கேள்விப்பட்டேன். பின்னர், டில்லியில் உள்ள இலங்கைத் தூதர கத்தின் மூலமாகத் தம் தாய்நாட்டுக்கு, அவர்கள் விரும் பினால் அனுப்பி வைக்கப்படுவார்கள் அல்லது வெளிநாடுகளில் இருக்கும் உறவினர்கள் உதவி செய் தால், அங்கு தங்க அனுமதி கிடைத்தால், அப்படிச் செல்லலாம். இந்தியப் பிரஜையான நளினியை மணந் துள்ளதால் முருகன் வேறுவிதமாக நடத்தப்படலாம். முகாம்களில் வசிக்காத அகதிகள் என்ற அதே அந்தஸ்து டன், சிறிது காலத்திற்குத் தமிழகத்தில், அநேகமாக வேலூருக்கு அருகில் நளினியும் முருகனும் அவர்கள் விரும்பும் ஒரு வீட்டில் வசிக்க அனுமதிக்கப்படலாம். அங்கு தங்கி, இங்கிலாந்துக்கோ ஐரோப்பாவிற்கோ குடிபெயரத் தேவையான ஏற்பாடுகளைச் செய்து கொள்ளலாம்.

அவர்களின் மகள் ஹரித்ரா லண்டனில் வசித்து வருவது கவனத்தில் கொள்ளத்தக்கது. கொலை நடந்த (1991 மே 21) சிறிது காலத்திற்குள் கைதுசெய்யப்பட்டபோது நளினி கர்ப்பமாக இருந்தார் என்பதை இங்கு நினைவுகூர விரும்புகிறேன். சிறையிலேயே அவர் தனது பெண்ணைப் பெற்றெடுத்தார். நான்கு வயதுவரை சிறையில் தாயுடன் வளர்ந்த ஹரித்ரா, மற்றொரு சிறைக் கைதியின் குடும்பத்தினரால் கோவையில் சற்று காலம் வளர்க்கப்பட்டார். அதன் பிறகு சிறிஹரனின் தாயார் ஷோமானி அப்பெண்ணை இலங்கைக்கு அழைத்துச் சென்றார். ஈழப்போர் உச்சத்தில் இருந்தபோது, அவர் கள் லண்டன் சென்றனர். அங்கு வளர்ந்த ஹரித்ரா, மருத்துவம் படித்தார். இரண்டாண்டுகளுக்கு முன், தமிழகத்தில் அவருக்குத் திருமணம் நடந்தபோது தாய் தந்தையர் பரோலில் சென்று பங்கேற்றனர். 2011 செப்ரெம்பரில், ஹரித்ரா, தூக்கு தண்டைனை பெற்றிருந்த தனது தாய் தந்தையர் சார்பில், தமிழக முதல்வருக் கும், காங்கிரஸ் தலைவரும் ராஜீவ் காந்தியின் விதவை மனைவியுமான சோனியா காந்திக்கும் அனுப்பியிருந்த கருணை மனு குறித்து என்ரிரிவிக்கு அளித்திருந்த பேட்டியைக் கண்ணீருடன் பார்த்த அனுபவம் என் நினைவுக்கு வருகிறது. தூக்கு தண்டனைக் கைதிகளான அவர்களது தண்டனையை, பின்னர், ஆயுள் தண்டனையாக உச்ச நீதிமன்றம் குறைத்தது. என் இதயத்தைத் துளைத்த அவரது உரை எனக்கு நினைவில் உள்ளது. ‘ஈழநாடு’ இதழுக்காக இந்தக் கட்டுரையை எழுதும் இப்போது கூட அந்தப் பேட்டிக்கான லிங்கைத் தேடி, மீண்டும் ஒரு முறை அதைப் பார்த்தேன். https://www.youtube.com/watch˜v=7DTKpBiThq0 என்ற லிங்கில் அதைப் பார்க்குமாறு உங்களையும் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

என் இனிய ‘ஈழநாடு’ நண்பர்களே! ஹரித்ரா பற்றியும் அவரைப்போலவே, ஈழத்தில், தாங்கள் செய்யாத குற்றத் துக்காகத் தண்டனை அனுபவிக்கும் எத்தனையோ பேரைப்பற்றியும் உங்களிடம் பகிர இன்னும் நிறைய இருக்கிறது. என் கண்களில் படரும் நீர்த் திரையின் காரணமாக நான் இந்தக் கட்டுரையை மேலும் தொடர இயலவில்லை.

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.




# உள்ளூராட்சி தேர்தல்களும் அரசாங்கமும்



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

தேர்தல் ஒன்றுக்கு முகங்கொடுப்பது என்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தைப் பொறுத்தவரை, தற்போதைய சூழ்நிலையில் இயலாத ஒரு காரியமேயாகும். பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தேர்தல் ஒன்றுக்கான செலவு நாட்டுக்கு கட்டுப்படியாகாது என்ற வாதம் ஒரு புறமிருக்க, அரசாங்கத்தின் மீது மக்கள் கடுமையான அதிருப்தியில் இருக்கிறார்கள். அண்மைக்காலமாக எடுத்த சில பொருளாதார நிவாரண நடவடிக்கைகள் மூலமாக தோன்றிய சூழ்நிலையை வழமை நிலை போன்று காண்பிக்க அரசாங்கம் முயற்சி செய்தாலும் அது ஒரு ஏமாற்று தோற்றப்பாடேயாகும்.

எரிபொருட்கள் உட்பட அத்தியாவசிய பாவனைப்பொருட்களுக்கான தட்டுப்பாடு ஒப்பீட்டளவில் தணிந்திருந்தாலும் கூட, அதிகப்பெரும்பான்மையான மக்களினால் வானளாவ உயர்ந்த விலையைச் செலுத்தி அவற்றைப் பெற்றுக் கொள்ளமுடியாமல் இருக்கிறது. பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியும் இவ்வருடத்திற்குள் கிடைக்கக்கூடிய வாய்ப்பில்லை. அனேகமாக அடுத்த வருடம் மார்ச் இறுதியில் தான் அந்த உதவி கிடைக்கும் சாத்தியம் இருக்கிறது என்று கூறப்படுகிறது.

இத்தகைய சூழ்நிலையில் அரசாங்கம் மக்கள் முன் செல்வதற்கு தயங்கவே செய்யும். முதலில் பாராளுமன்ற தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்த எதிரணி கட்சிகள் இப்போது உள்ளூராட்சி தேர்தல்களில் கவனத்தைக் குவித்திருக்கின்றன. அடுத்த வருடம் மார்ச் மாத நடுப்பகுதியில் நடத்தப்படவேண்டியிருக்கும் உள்ளூராட்சி தேர்தல்களை ஒத்திவைப்பதற்கு அரசாங்கம் பல்வேறு முயற்சிகளில் இறங்கியிருப்பதாக அந்த கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன. அந்த தேர்தல்களை ஒத்திவைக்க ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை என்று சூளுரைக்கும் கட்சிகள் அவ்வாறு ஒத்திவைக்கப்பட்டால் இரத்தக்களரி ஏற்படும் என்று கூட எச்சரிக்கை செய்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

ஆனால், உள்ளூராட்சி தேர்தல்களை ஒத்திவைக்கும் எந்த நோக்கமும் அரசாங்கத்துக்கு கிடையாது என்று அரசாங்கத்தரப்பில் குறிப்பாக ஜனாதிபதி விக்கிரமசிங்கவிடம் இருந்தோ அல்லது பிரதமர் தினேஷ் குணவர்தனவிடமிருந்தோ எந்த உறுதிமொழியும் இதுவரை வரவில்லை. மாறாக, ஜனாதிபதியின் ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளரான பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன ஏதோ ஜனாதிபதி செயலகத்தின் பேச்சாளர் போன்று அண்மைய மாதங்களில் எந்த தேர்தலும் நடத்தப்படமாட்டாது என்று கூறியிருக்கிறார்.

“நாட்டில் உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்கு தேசியக் கொள்கை கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட்ட பின்னர் தொடர்ச்சியாக பல தேர்தல்கள் நடத்தப்படும். இது தேர்தல்களை நடத்துவதற்கான நேரம் அல்ல. தேர்தல்களுக்காக கோரிக்கை விடுப்பவர்கள் நாட்டை சீர்குலைக்க விரும்புகிறார்கள். அந்த சக்திகள் விரைவில் அம்பலப்படுத்தப்பட்டு ஓரங்கட்டப்படுவார்கள் ” என்று அபேவர்தன கூறினார்.

இதனிடையே, பாராளுமன்றம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் என்ற மூன்று மட்டங்களிலும் தேர்தல்முறை சீர்திருத்தங்களை ஆராய பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்றை நியமிக்குமாறு நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் விஜேதாச ராஜபக்ச சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவிடம் இரு வாரங்களுக்கு முன்னர் வேண்டுகோள் விடுத்தார்.

அதற்கு ஒரிரு வாரங்கள் முன்னதாக துறைசார் நிபுணர்கள் குழுவொன்றுடனான சந்திப்பின்போது ஜனாதிபதி விக்கிரமசிங்க விரைவில் நியமிக்கப்படவிருக்கும் பாராளுமன்ற தெரிவுக்குழு அடுத்தவருடம் ஜூலை மாதமளவில் உறுதியான தீர்மானத்துக்கு வரத் தவறினால் பாராளுமன்ற தேர்தல் முறை குறித்து தீர்மானிக்க சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட வேண்டும் என்று கூறியிருந்தார்.

அதேவேளை, கடந்த வாரம் பிரதமர் குணவர்தன உள்ளூராட்சி சபைகளின் எல்லைகளை நிர்ணயிக்க தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரான மகிந்த தேசப்பிரிய தலைமையில் ஐவர் கொண்ட குழுவொன்றை நியமித்தார். உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 8 ஆயிரத்தில் இருந்து 4 ஆயிரமாகக் குறைக்கும் நோக்குடன் உள்ளூராட்சி வட்டாரங்களின் எல்லைகளை நிர்ணயம் செய்வது தொடர்பான அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு இந்த குழுவுக்கு அடுத்த வருடம் பெப்ரவரி 28 வரை கால அவகாசம் வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த நடவடிக்கைகள்

> **இலங்கையில் அரசியலமைப்பு திருத்தங்கள் என்றாலென்ன தேர்தல் சீர்திருத்தங்கள் என்றாலென்ன நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு மேலாக அரசியல் கட்சிகளின் நலன்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுவதே பிரச்சினையின் அடிப்படையாகும்.**

எல்லாவற்றையும் உள்ளூராட்சி தேர்தல்களை ஒத்திவைப்பதற்கான அரசாங்கத்தின் “தந்திரோபாயமாகவே” எதிரணி கட்சிகள் நோக்குகின்றன. ஆனால், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரான எஸ்.ஜி.புஞ்சிஹேவவும் உள்ளூராட்சி எல்லை நிர்ணயக் குழுவின் தலைவர் தேசப்பிரியவும் வெளியிட்ட கருத்துகள் தேர்தலை ஒத்திவைப்பதில் அரசாங்கம் எதிர்நோக்கக்கூடிய சிக்கல்களை உணர்த்துபவையாக இருக்கின்றன.

நாட்டில் உள்ள 340 உள்ளூராட்சி சபைகளினதும் (275 பிரதேச சபைகள், 41 நகரசபைகள், 24 மாநகரசபைகள்) பதவிக்காலத்தை 2023 மார்ச் 19 வரை ஒருவருட காலத்துக்கு அரசாங்கம் கடந்த ஜனவரியில் நீடித்தது. சட்டத்தின் பிரகாரம் 2023 மார்ச் 20 க்கு முன்னதாக சகல உள்ளூராட்சி சபைகளும் அமைக்கப்படவேண்டியவையாக இருக்கின்றன. அந்த திகதியில் அல்லது முன்னதாக சகல சபைகளையும் அமைப்பதற்கான ஆணை தேர்தல் ஆணைக்குழுவுக்கு இருக்கிறது.

குறைந்த பட்சம் 2023 மார்ச் 20 க்கு இரு வாரங்கள் முன்னதாக உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு உத்தேசித்திருக்கிறது. பெப்ரவரி இறுதியளவில் தேர்தல்களை நடத்தமுடியும். 2022 இடைக்கால பட்ஜெட்டில் அரசாங்கம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு 1000 கோடி ரூபாவை ஒதுக்கியிருப்பதால் உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துவதற்கு நிதி ஒரு பிரச்சினையாக இருக்கப் போவதில்லை என்று பஞ்சிஹேவ ஊடகங்களுக்கு கூறினார்.

2022க்கான தேர்தல் இடாப்பு கடந்த மாத முடிவில் பூர்த்தியாக்கப்பட்டிருக்கிறது. செப்டெம்பர் 30 அளவில் 18 வயதைப் பூர்த்திசெய்திருப்பவர்களின் பெயர்கள் அடங்கிய துணைப் பட்டியலை தயாரிக்கும் பணிகளில் ஆணைக்குழு இப்போது ஈடுபட்டிருக்கிறது. 2023 முற்பகுதியில் உள்ளூராட்சி தேர்தல்களை நடத்தக்கூடியதாக நவம்பர் நடுப்பகுதியளவில் 2022 தேர்தல் இடாப்பு முழு நிறைவு செய்யப்பட்டுவிடும். புதிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் கீழோ அல்லது தற்போதைய ஆணைக்குழுவின் கீழோ தேர்தல்கள் நடத்தப்பட்டு 2023 மார்ச் 20 அளவில் 340 உள்ளூராட்சி சபைகளையும் அமைக்கவேண்டியிருக்கிறது என்றும் அவர் கூறினார்.

அதேவேளை, எல்லை நிர்ணயக் குழுவின் தலைவரான மகிந்த தேசப்பிரியவும் தனது குழுவின் செயற்பாடுகள் உள்ளூராட்சி தேர்தல்கள் நடத்தப்படுவதை எந்த விதத்திலும் பாதிக்காது என்றும் அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு தங்களுக்கு அடுத்தவருடம் பெப்ரவரி 28 வரை கால அவகாசம் இருப்பதால் அதற்குள் அல்லது அதற்கு முன்னதாக தங்களது பணியை நிறைவு செய்ய இயன்றவரை முயற்சிப்பதாகவும் கூறியிருக்கிறார்.

உள்ளூராட்சி சபைகளின் வட்டாரங்களின் தற்போதைய நடைமுறையில் உள்ள எல்லை நிர்ணயத்தின்படி அல்லது தனது தலைமையிலான குழு சமர்ப்பிக்கக்கூடிய புதிய எல்லை நிர்ணயத்தின் படி தேர்தல்களை நடத்துவதற்கு ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இருக்கிறது என்றும் தேசப்பிரிய கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

புதிய எல்லை நிர்ணயக்குழு சமர்ப்பிக்கக்கூடிய அறிக்கையை பாராளுமன்றம் அங்கீகரிக்கத் தவறினால் பிரச்சினை தோன்றக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. பாராளுமன்றம் அங்கீகரிக்கவில்லையானால் அறிக்கையை மீளாய்வுக்குழுவுக்கு அனுப்பவேண்டியிருக்கும். மீளாய்வுக்குழு அதன் அறிக்கையை இரு மாதங்களில் ஜனாதிபதியிடம் கையளிக்க வேண்டும். ஆளும் பொதுஜன பெரமுன தேர்தல் ஒன்றுக்கு முகங்கொடுக்கத் தயங்கி எல்லை நிர்ணயக்குழுவின் அறிக்கையை பாராளுமன்றம் அங்கீகரிப்பதற்கு இடையூறுகளைச் செய்யக்கூடிய சாத்தியத்தை நிராகரிப்பதற்கில்லை என்ற அபிப்பிராயமும் அரசியல் அவதானிகள் மத்தியில் இருக்கிறது.

இது இவ்வாறிருக்க, ஏற்கெனவே தேர்தல் முறை சீர்திருத்தங்கள் குறித்து பல வருடங்களாக தினேஷ் குணவர்தன தலைமையிலான பாராளுமன்ற தெரிவுக்குழு ஆராய்ந்து அறிக்கைகளை சமர்ப்பித்த போதிலும், எதற்காக புதியதொரு தெரிவுக்குழுவை நியமிக்குமாறு சபாநாயகரை அமைச்சர் விஜேதாச ராஜபக்ச கோருகிறார் என்ற கேள்வி எழுகிறது.

குணவர்தன தலைமையிலான தெரிவுக்குழு 2003 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டது. அதன் செயற்பாடுகள் சுமார் ஒரு தசாப்த காலம் நீடித்த போதிலும், இறுதியில் பழைய தொகுதி அடிப்படையிலான தேர்தல் முறையும் விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையும் கலந்த ஒரு முறையை கொண்டுவருவதற்கு பெரும்பாலும் சகல அரசியல் கட்சிகளும் இணங்கிக்கொண்டன.

ஆனால், சட்டத்தை குறைந்த பட்சம் உள்ளூராட்சி தேர்தல்களுக்காவது மாற்றுவதற்கு ஒன்பது வருடங்கள் எடுத்த அதேவேளை அந்த தேர்தல்களை நடத்த 15 வருடங்கள் சென்றன. கலப்பு தேர்தல் முறைமூலம் நடத்தப்பட்ட 2018 பெப்ரவரி உள்ளூராட்சி தேர்தல்கள் குளறுபடியாகவே அமைந்தன. அந்த தேர்தலில் பெருவெற்றி பெற்ற பொதுஜன பெரமுனவின் தலைவர் மகிந்த ராஜபக்சவே அந்த தேர்தல் முறையை மாற்றவேண்டும் என்று கோரினார். ஏனென்றால் அவரது கட்சி வெற்றிபெற்ற பல உள்ளூராட்சி சபைகளில் அவர்களுக்கு அறுதிப்பெரும்பான்மை பலம் இல்லாததால் தலைவர்களை நியமிக்கமுடியாமல் போனது.




(09 ஆம் பக்கம் பார்க்க...)

# ராஜீவ் காந்தி கொலை வழக்கு:

## நளினி, சாந்தன் உள்பட 6 பேர் விடுதலை!

## - யார் இவர்கள்?



இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருந்த நளினி, ஆர்.பி.ரவிச்சந்திரன் உள்ளிட்ட 6 பேரை விடுதலை செய்து இந்திய உச்ச நீதிமன்றம் வெள்ளிக்கிழமை தீர்ப்பளித்திருக்கிறது.

இதன்படி, நளினி, ஜெயக்குமார், ஆர்.பி.ரவிச்சந்திரன், ராபர்ட் பயாஸ், சுதேந்திர ராஜா, சிறிஹரன் ஆகியோர் விடுவிக்கப்படுகின்றனர்.

நேற்று முன்தினம் மாலை நிலவரப்படி நளினி, ரவிச்சந்திரன் ஏற்கெனவே பரோலில் உள்ளனர். சாந்தன் மற்றும் முருகன் வேலூர் மத்திய சிறையில் உள்ளனர். ராபர்ட் பயஸ், ஜெயகுமார் சென்னை புழல் மத்திய சிறையில் உள்ளனர்.

இந்த விவகாரத்தில் ஏற்கெனவே கடந்த மே 18ஆம் திகதி மற்றொரு கைதி பேரறிவாளனை விடுதலை செய்வதற்கு அளித்த தீர்ப்பின்படி, தற்போது அந்த வழக்கில் சிறை தண்டனை அனுபவித்து வரும் மேலும் ஆறு பேரும் விடுவிக்கப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்திருக்கிறது.

இந்தியாவின் முன்னாள் பிரதமரும், காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரான சோனியா காந்தியின் கணவருமான ராஜீவ் காந்தியைக் கொல்ல நடந்த சதிக்கு உடந்தையாக இருந்ததாக இவர்கள் ஆறு பேர் மீதும் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இந்த ஆறு பேர் யார், அவர்களைப் பற்றிய சிறிய குறிப்புகளை இங்கே தொகுத்து வழங்குகிறோம்:

### எஸ். நளினி

ராஜீவ் காந்தி கொலையில் பிரதான குற்றவாளிகளுடன் சேர்ந்து கூட்டு சதி செய்ததாக குற்றம்சாட்டப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டவர் நளினி சிறிஹரன்.

இந்தியாவின் மிக நீண்ட காலம் சிறை தண்டனை பெற்ற பெண் ஆக இவர் கருதப்படுகிறார்.

53 வயதாகும் நளினி, கிட்டத்தட்ட 29 ஆண்டுகளாக சிறையில் இருந்தார். 2020ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் மூன்று முறை மட்டுமே அவர் சிறைக்கு வெளியே பரோலில் வந்தார்.

2016இல் முதன் முதலாக இவர் 12 மணி நேரம் பரோலில் வந்து தனது தந்தையின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டார்.

இரண்டாவதாக 2019ஆம் ஆண்டு ஜூலை மாதம் அவருக்கு 51 நாள் பரோல் வழங்கப்பட்டது. மகள் ஹரித்ராவின் திருமணத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கூறி அவர் பரோலில் வெளியே வந்தார்.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 21ஆம் திகதி தமிழக அரசு நளினியை பரோலில் விடுவிக்க முடிவு செய்ததைத் தொடர்ந்து நீதிமன்ற அனுமதியுடன் அவர் பரோலில் விடுவிக்கப்பட்டார்.

### சிறிஹரன் என்கிற முருகன்

சிறிஹரன் என்றழைக்கப்படும் முருகன்தான் இந்தக் கொலைக்கு மூளையாக செயல்பட்டவர் என்று இந்திய புலனாய்வுத்துறையின் சிறப்பு விசாரணைக்குழு குற்றம்சாட்டியிருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் (எல்டிடிஈ) இயக்கத்தின் தீவிர உறுப்பினராக அவர் இருந்தார்.

இலங்கையைச் சேர்ந்த இவர் இளம் வயதிலேயே எல்டிடிஈ இயக்கத்தில் சேர்ந்தார்.

முருகன், இந்திய குடிமகளான நளினியை மணந்தார். 1992 இந்த தம்பதி சிறையில் இருந்த காலகட்டத்தில் அவர்களுக்கு பெண் குழந்தை பிறந்தது.

### ராபர்ட் பயஸ்

ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் தண்டனை பெற்றவர்களில் ஒருவரான பி. ராபர்ட் பயஸ் இலங்கை குடிமகன்.

முன்னாள் பிரதமரின் கொலையுடன் தொடர்புடைய விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தீவிர உறுப்பினர்களுக்கு பயஸ் அடைக்கலம் அளித்ததாக அவர் மீது குற்றம்சாட்டப்பட்டு அது புலனாய்வில் உறுதிப்படுத்தப்பட்டது.

பயாஸ் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் என்று புலனாய்வுத்துறையால் சந்தேகிக்கப்பட்டவர்.

அவர் போராளிக் குழுவின் தளங்களை அமைப்பதற்காக இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார் என்றும் மற்ற குற்றவாளிகள் தங்கியிருந்த இடங்களை வாடகைக்கு எடுத்து ராஜீவ் காந்தி படுகொலைக்கான திட்டமிடலுக்கு உடந்தையாக இருந்தார் என்கிறது சிபிஐ.



### ஜெயகுமார்

விடுவிக்கப்பட்டுள்ள மற்றொரு கைதியான ஜெயகுமார், ராபர்ட் பயஸின் மைத்துனர்.

குற்றவாளிகள் படுகொலை நிகழ்த்த ஒரு வீட்டை தமிழ்நாட்டில் ஏற்பாடு செய்ய உதவியதாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

### ரவிச்சந்திரன்

தாக்குதலில் தொடர்புடைய மற்றொரு இலங்கை பிரஜை ரவிச்சந்திரன்.

இந்தியாவில் பயண நிறுவனம் ஒன்றை நிறுவி, முன்னாள் பிரதமரைக் கொல்ல விடுதலைப் புலிகள் பயன்படுத்துவதற்காக ஒரு வாகனத்தை வாங்கியதாக இவர் மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

### டி.சுதேந்திரராஜா என்கிற சாந்தன் என்கிற சின்ன சாந்தன்

இந்த வழக்கில் மற்றொரு குற்றவாளியான சுதேந்திரராஜா விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்.

பொட்டு அம்மானால் இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட கொலையாளிகள் குழுவில் இருந்த ஒன்பது பேரில் இவரும் ஒருவர்.

கொலை மற்றும் கிரிமினல் சதி செய்ததற்காக அவர் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

### வழக்கும் சுருக்கமான பின்னணியும்

ராஜீவ் காந்தி, 1991ஆம் ஆண்டு மே 21ஆம் திகதி தமிழ்நாட்டின் சிறிபெரும்புதூரில், இலங்கையைச் சேர்ந்த தமிழீழ விடுதலைப் புலி கள் இயக்கத்தைச் சேர்ந்த பெண் தற்கொலை குண்டுதாரியால் படுகொலை செய்யப்பட்டார்.

இந்த கொலையில் நேரடியாக பங்கேற்றவர்களுக்கு உடந்தையாக இருந்ததாக ஏழு குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

2000ஆம் ஆண்டில், ராஜீவ் காந்தியின் மனைவியும் முன்னாள் காங்கிரஸ் தலைவருமான சோனியா காந்தியின் தலையீட்டின் பேரில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த நளினி சிறிஹரனின் தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது. 2008ல் ராஜீவ் காந்தியின் மகள் பிரியங்கா காந்தி வேலூர் சிறைக்கு சென்று நளினியை சந்தித்தார்.

மேலும் 6 குற்றவாளிகளின் தண்டனையும் 2014-ல் குறைக்கப்பட்டது.

அதே ஆண்டு, அவர்களை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை அப்போதைய தமிழக முதல்வர் ஜெ.ஜெயலலிதா தொடங்கினார்.

கடந்த மே மாதம் இந்த வழக்கில் ஆயுள் தண்டனை அனுபவித்து வந்த பேரறிவாளனை விடுவிக்க உச்ச நீதிமன்றம் தனது அசாதாரண அதிகாரங்களைப் பயன்படுத்தியது.

அவரது விடுதலை தொடர்பாக மாநில ஆளுநர் முடிவெடுப்பதில் தாமதம் செய்தார் என்ற அடிப்படையில் இந்த விவகாரத்தில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளிக்க நேர்ந்ததாக நீதிபதிகள் தெரிவித்தனர்.

அந்த அடிப்படையே தற்போது மீதமுள்ள ஆறு பேரின் விடுதலைக்கும் பொருந்தும் என்று உச்ச நீதிமன்றம் கூறியிருக்கிறது. முன்னதாக, குற்றவாளிகளை விடுவிக்க தமிழக அமைச்சரவை 2018ஆம் ஆண்டு அப்போதைய ஆளுநருக்கு பரிந்துரை செய்ததாகவும், அதற்கு ஆளுநர் கட்டுப்பட்டிருக்க வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டது.

---

# உள்ளூராட்சி தேர்தல்களும்...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மைத்திரி - ரணில் அரசாங்க காலத்தில் 2017 கலப்பு தேர்தல் முறையை மாகாணசபைகளுக்கு அறிமுகப்படுத்துவதற்காக சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால், ஐந்து வருடங்கள் கடந்த பின்னரும் கூட மாகாணசபைகளுக்கான எல்லை நிர்ணய அறிக்கை வெளிவரவில்லை.

அதற்குப் பிறகு கோட்டாபய ராஜபக்ச அரசாங்க காலத்தில் 2021 ஏப்ரில் 5 பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றின் மூலமாக மீண்டும் தினேஷ் குணவர்தன தலைமையில் தேர்தல் சீர்திருத்தங்களை அடையாளம் காண தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்பட்டது.

அந்தக் குழு பொருளாதார நெருக் கடிக்கு மத்தியில் மக்கள் கிளர்ச்சி உச்சக்கட்டத்தில் இருந்தபோது கடந்த ஜூன் 22 அதன் இறுதி அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது.

அந்த அறிக்கைக்கு என்ன நடந்தது? குணவர்தன தலை மையில் தேர்தல் சீர்திருத்தங்கள் குறித்து ஆராய சுமார் 20 வருடங்களாக தெரிவுக்குழுவின் செயற்பாடுகளுக் காக எவ்வளவு நிதி விரயமாக்கப்பட்டிருக்கிறது பாருங்கள். இப்போது புதியதொரு தெரிவுக்குழு நியமிக்க வேண்டும் என்று கோரப்படுகிறது. குணவர்தனவின் தெரிவுக்குழு இவ்வளவு காலமும் என்ன " தேங்காயா துருவியது" என்று பாராளு மன்றத்தில் எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஸ்மன் கிரியெல்ல கேட்டது சரியாகத்தான் இருக்கிறது.

இலங்கையில் அரசியலமைப்பு திருத்தங்கள் என்றாலென்ன தேர்தல் சீர்திருத்தங்கள் என்றாலென்ன நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு மேலாக அரசியல் கட்சிகளின் நலன்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுவதே பிரச்சினையின் அடிப்படையாகும்.

# கைகளால் தோளை அணைத்தவாறு கழுத்தை நெரிக்கும் அரசியல்!

**பனங்காட்டான்**

ஓர் அரசாங்கம் ஆட்சிக்கு வந்தால் அல்லது ஓர் ஆட்சித் தலைவர் பதவிக்கு வந்தால், அதன் முதல் நூறு நாட்கள் முக்கியமானதாகப் பார்க்கப்படுவதுண்டு. அதற்கு ஏற்றாற்போல பதவிக்கு வருபவர்களும் தங்களின் முதல் நூறு நாள் திட்டத்தை முற்கூட்டியே அறிவிப்பர்.

ஆனால், இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அவ்வாறான கடப்பாடு எதுவும் கிடையாது. காரணம், அவர் வகிக்கும் பதவி தேர்தல் மூலம் மக்களின் வாக்கினால் பெற்றதல்ல.

இவர் 2020ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தோல்வி கண்டவர். இவரது தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி ஓர் ஆசனத்தைக்கூட பெறவில்லை. ஜே.ஆர்.ஜெயவர்த்தன உருவாக்கிய அரசியலமைப்பு வழங்கிய தேசியப் பட்டியலூடாக 2021 யூன் 23ல் நாடாளுமன்ற உறுப்பினரானார்.

தெற்காசியாவின் அதிகார பலமும், ஊழல் மிக்க அரசியல் வம்சமுமான ராஜபக்சக்களுக்கு எதிராக சுனாமி போன்று எழுந்த மக்கள் பேரெழுச்சி ரணிலுக்கு அதிர்ஸ்ட தேவதையானது.

இந்த ஆண்டு மே மாதம் 12ம் திகதி பிரதமராக நியமனமாகி, யூலை மாதம் 13ம் திகதி ஜனாதிபதியாக நியமனமாகி, யூலை 20ம் திகதி நாடாளுமன்ற வாக்கெடுப்பால் ஜனாதிபதியாகி, மறுநாள் அதிகாரபூர்வமாக இப்பதவியில் அமர்ந்த ரணில் விக்கிரமசிங்க நூறு நாட்களைப் பூர்த்தி செய்துவிட்டார். இந்தக் காலத்தில் இவரது சாதனைகள் என்ன?


எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்கில் பங்குபற்ற பிரித்தானியாவுக்கும், ஜப்பானின் முன்னாள் பிரதமர் சின்ஸோ அபேயின் இறுதிச் சடங்கில் பங்குபற்ற ஜப்பானுக்கும் விஜயம் செய்தார். ஆசிய அபிவிருத்தி வங்கிக் கூட்டத்தில் கலந்து கொள்ள பிலிப்பைன்ஸ் போனார். எகிப்தில் இடம்பெற்ற காலநிலை மாநாட்டில் கடந்த வாரம் பங்குபற்றினார். முதல் நூறு நாட்களும் நான்கு நாடுகளுக்குப் பயணம் செய்த ஜனாதிபதி என்பது சிலவேளை ஒரு சாதனையாக அமையலாம்.

இதற்கும் அப்பால் என்று பார்ப்பதற்கு செய்யாதவைகளே அதிகமுண்டு. பயங்கரவாத தடைச் சட்டத்துக்குப் பதிலாக பிரித்தானியாவிலுள்ளது போன்ற புதிய சட்டம் வரப்போவதாகக் கூறினார். அதனைக் காணவில்லை. மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறும் சாத்தியக்கூறுகள் தெரியவில்லை. மாகாண சபைகளுக்கு தேர்தல் நடைபெற்றால் அந்தந்த மாகாண உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்களை அதற்கு நியமிக்கப் போவதாகவும் ஒரு அறிவிப்பு வந்துள்ளது.


நாட்டிலுள்ள 341 உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களும் பின்போடப்பட்டுள்ளன. இவற்றுக்கு தேர்தல் எல்லை நிர்ணயம் செய்யப்பட்ட பின்னரே தேர்தல் நடைபெறும். காணாமலாக்கப்பட்டோரின் விவகாரத்துக்குத் தீர்வாக அப்படியாக எவரும் இல்லையென்று அதற்கான அலுவலகத்தின் தலைவர் கை விரித்துள்ளார்.

ஜெனிவா தீர்மானம் மீண்டும் மீண்டும் கேட்கும் போர்க்குற்ற பொறுப்புக்கூறலுக்கும், சர்வதேச நீதிவிசாரணைப் பொறிமுறைக்கும் மறுப்பே பதிலாக வருகிறது.

நிலைமை இவ்வாறிருக்க, தீர்க்கப்படாத அரசியல் பிரச்சனைகளுக்கு ஒரு வருடத்துள் தீர்வு காணப்படுமென ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் உறுதியாகக் கூறியுள்ளார். இந்தக் கூற்றை அவரது நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச வழிமொழிந்து வருகிறார். இதற்கு முன்னதாக நியமிக்க வேண்டிய அரசியலமைப்புப் பேரவை முயற்சி இழுபறியிலுள்ளது.



> பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்கிறது. காணாமலாக்கப்பட்டோர் என எவரும் இல்லையென்று அறிவிக்கப்படுகிறது. மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சிச் சபைகளுக்கும் எப்போது தேர்தல் என்பது தெரியாது. போர்க்குற்ற பொறுப்புக் கூறலுக்கும் சர்வதேச நீதி விசாரணைக்கும் முழு மறுப்பு. இவை அனைத்துக்கும் சர்வரோக நிவாரணியாக புதிய அரசியலமைப்பு ஒரு வருடத்துள் வரப்போகிறதாம்! இதனைத் தமிழர் நம்ப வேண்டுமாம்!



21வது திருத்தத்தை நிறைவேற்றிய தன் முதன்மைப் பணியாக அரசியலமைப்புப் பேரவையே நிறுவப்பட வேண்டும். அதன் பின்னரே தேர்தல், காவற்துறை, கணக்காய்வு, மனித உரிமைகள், லஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகள், நீதி, தேசிய கொள்வனவு ஆகியவற்றுக்கான ஆணைக்குழுக்களை உருவாக்க முடியும்.

அரசியலமைப்புப் பேரவை பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், நாடாளுமன்ற சபாநாயகர் ஆகியோருடன், ஜனாதிபதி ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை நியமிக்க முடியும். பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை நியமிப்பர். அத்துடன் சிறுகட்சிகள் நியமிக்கும் ஒருவரும், இலங்கை வர்த்தக சம்மேளனம், தொழில்சார் சங்கங்களின் அமைப்பு, பல்கலைக்கழக மானியங்களின் ஆணைக்குழு நியமிக்கும் ஒருவர் என மொத்தம் பத்து உறுப்பினர்களை கொண்டதாக பேரவை அமையும்.

அரசியலமைப்புப் பேரவை இப்போது நடைமுறைக்கு வந்துள்ளதாக நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச கூறுகின்றார் ஆயினும், இதற்கான உறுப்பினர்கள் எவரும் இதுவரை நியமிக்கப்படவில்லை. எதிர்க்கட்சிகள் இவ்விடயத்தில் சாத்தியமாகச் செயற்படவில்லையெனக் கூறப்படுகிறது.

புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்காக நாடாளுமன்ற தெரிவுக்குழுவை அமைக்கப் போவதாகவும் நீதியமைச்சர் அறிவித்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச புதிய அரசியலமைப்பை உருவாக்க ஒன்பது பேர் கொண்ட குழுவொன்றை அப்போது நியமித்ததை பலரும் ஞாபகத்தில் வைத்திருப்பர். இந்தக் குழு 272 பக்கங்களைக் கொண்ட புதிய அரசியலமைப்பு அறிக்கையை சமர்ப்பித்திருந்தது. அந்தக் குழுவில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட எவரும் இடம்பெறவில்லை.

இந்தக் குழுவின் அறிக்கை பகிரங்கப்படுத்தப்படாது குளிரூட்டிக்குள் வைக்கப்பட்டது. எனினும், அதன் முக்கிய அம்சங்கள் இப்போது கசிந்துள்ளது.

1987ம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழான 13வது திருத்தத்துக்கு அமைய உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமையை நீக்க வேண்டும் - அதாவது இந்த முறைமைக்கு மக்கள் ஆதரவில்லையென்று பெரும்பான்மை உறுப்பினர்கள் அபிப்பிராயம் கொண்டுள்ளதாக இந்த அறிக்கை சுட்டியுள்ளது. அனைத்து மக்களும் சமத்துவமாக இருப்பதற்கு 13ம் திருத்தத்தின் கீழான மாகாண சபை முறைமை குந்தகமாக உள்ளது என்ற கருத்து இங்கே வலியுறுத்தப்பட்டுள்ளது.

மாகாண சபை முறைமை ஒரு குழுமத்தினருக்கு சலுகை வழங்குவது போன்று அமைந்துள்ளது என்று இந்தக் குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்கள் கருதுவதாக இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக சில உறுப்பினர்களின் பெயர்களும் அவர்களின் அபிப்பிராயங்களும் தெரியவந்துள்ளது. இக்குழுவில் இடம்பெற்ற ஒரேயொரு தமிழரான சட்டப் பேராசிரியர் அ.சர்வேஸ்வரன் 13ம் திருத்தத்தின் கீழான மாகாண சபை தக்கவைக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி சட்டத்தரணிகளான மனோகர டி சில்வா, சமந்தா ரத்வத்த, பேராசிரியர் ஜி.எச்.பீரிஸ் ஆகிய மூவரும் 13ம் திருத்தத்துக்கு பாதகமான கருத்தை முன்வைத்துள்ளனர். இலங்கையின் சுதந்திரம், இறையாண்மை, ஒற்றையாட்சி முறைமை, பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கு 13ம் திருத்தம் ஏற்க முடியாதது என்ற கருத்தை இவர்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டு மக்கள் ஒரு நேர உணவுக்குத் திண்டாடிக் கொண்டிருந்த காலகட்டத்தில், 158 மில்லியன் ரூபாவை இந்த அரசியலமைப்புக் குழு விழுங்கியுள்ள போதிலும், அதன் பணி இன்னமும் முடியவில்லையென கணக்காளர் நாயகத்தின் அறிக்கை தெரிவிக்கிறது.

கணக்காளர் நாயகத்தின் அறிக்கை உண்மையெனின், கோட்டாபய நியமித்த குழு இன்னமும் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதே அர்த்தம். அப்படியானால் புதிய அரசியலமைப்புக் குழுவொன்றை ரணிலினால் எவ்வாறு நியமிக்க முடியும்? சிலவேளை கோட்டாபய குழுவின் அறிக்கையை தூசு தட்டியெடுத்து



அமுல்படுத்த ரணில் விரும்புகிறாரோ தெரியவில்லை. அவ்வாறு செயற்படின் பொதுஜன பெரமுனவின் ஆதரவை பெறமுடியுமென நம்புகிறார் போலும்.

உள்ளூராட்சிச் சபைகளின் உறுப்பினர்களது மொத்த எண்ணிக்கையை ஐம்பது வீதத்தினால் குறைப்பது, மாகாண சபை உறுப்பினர்களாக அந்தந்த மாகாண உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்களை நியமிப்பது போன்ற திட்டங்களை ரணில் தரப்பு ஏற்கனவே அறிவித்துள்ளது.

இந்தப் பின்னணியில் பார்க்கையில் புத்தம்புதிதாக உருவாகப்போகும் அரசியலமைப்பில் (1972ல் சிறிமாவோ பண்டாரநாயக்க உருவாக்கிய அரசியலமைப்பை 1978ல் ஜே.ஆர். ஜெயவர்த்தன இல்லாற்செய்து புதியதை உருவாக்கியது போன்று) 13ம் திருத்தம் முற்றாக உள்வாங்கப்படுமா என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

தம்மை நம்புமாறும், தமிழர் தரப்பு தம்மோடு இணைந்து செயற்பட வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுக்கும் ரணில் விக்கிரமசிங்கவின் போக்கு நம்பிக்கையைத் தருவதாக இல்லை. அருகிருப்பவர் தோள்களில் கைகளைப் போட்டு நண்பராகக் காட்டிக் கொண்டு, குரல்வளையை நசுக்கும் அரசியலில் கை தேர்ந்தவரான ரணில் அதேபாணியில்தான் தமிழருக்கான அரசியல் தீர்வையும் வழங்கப் போகிறாரா?

# உள்ளூராட்சி மன்ற தேர்தல் அவசியம் ஏன்...?

அறிக்கையிடல் REPORTING என். குகராஜ்

உள்ளூராட்சி சபைகள் என்பது மாநகர, நகர, பிரதேச (கிராம) சபைகள் உள்ளடங்கிய அமைப்பு முறையாகும். இது மக்களுக்கு மிகநெருக்கமான - அண்மையான ஜனநாயகக் கட்டமைப்பாகும்.

இன்றைய அமைப்பு முறைமை 1987முதல் நடைமுறைக்கு வந்தாலும் வரலாற்றுக் காலம் தொட்டு உள்ளூராட்சி அமைப்பு முறை இலங்கையின் ஜனநாயக தன்மைக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

இந்நிலையில், உள்ளூராட்சி சபைத் தேர்தலை உடன் நடத்தாதிருக்க - காலத்தை தள்ளிப்போட உள்ளூராட்சி சபைகளின் எல்லையை நிர்ணயம் என்ற பெயரில் அரசு நாடகமாடுகிறது என்ற குற்றச்சாட்டு வலுவாக நாடு முழுவதும் எழுந்துள்ளது.

இந்நிலையில், உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஏன் நடத்தவேண்டும்? அதன் முக்கியத்துவம் என்ன? நடத்தாது போனால் ஏற்படும் விளைவுகள் என்ன என்பது குறித்து இந்த சபைகளை ஆளும் மக்களின் பிரதிநிதிகள் இங்கு கருத்துகளை தெரிவிக்கின்றனர்.




## சர்வாதிகாரத்துக்கு வழிவகுக்கும்

**க. பாலச்சந்திரன்,**
**காரைநகர் பிரதேச சபை தவிசாளர்.**



நான்கு வருடங்களுக்கு பிறகு மீண்டும் ஒரு வருடம் நீடிப்பு செய்யப்பட்டு, தற்போது உள்ளூராட்சி மன்றங்கள் செயல்படுகின்றன. பிரதேச சபைகளின் பதவிக் காலம் எதிர்வரும் மார்ச் மாதத்துடன் முடிவடைய இருக்கின்றது.

இந்த பிரதேச சபைகளுடைய பதவிக் காலம் முடிவடைந்த உடனேயே தேர்தலுக்கான முஸ்தீபுகள் எடுக்கப்பட்டு தேர்தல் நடத்தப்பட்டு, அந்தத் தேர்தல் மூலம் ஜனநாயக முறைப்படி தேர்வு செய்யப்படுகின்ற பிரதிநிதிகள் அந்த சபைகளை ஆளக்கூடிய நிலை உருவாக்கப்பட வேண்டும்.

வெறுமனே மாகாண சபைகள் இன்று இயங்காமல் இருப்பது போன்று பிரதேச சபைகளும் இயங்காமல் இருப்பதானது ஒரு சர்வாதிகாரப் போக்குக்கு வழிவகுக்கும். ஆகவே, இந்த உள்ளூராட்சி சபைகள் ஒன்றில் தொடர்ந்து சபைகளுடைய தேர்தல் நடத்தப்படும் வரை காலம் நீடிக்கப்பட வேண்டும். அல்லது சபைகளுடைய பதவிக் காலம் முடிவடைந்த உடனே தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டு தேர்தல் நடத்தப்பட்டு ஜனநாயக ரீதியிலே தெரிவு செய்யப்படுகின்ற மக்கள் பிரதிநிதிகளிடம் உள்ளூராட்சி மன்றங்கள் ஒப்படைக்கப்பட வேண்டும்.

அவ்வாறு அல்லாது ஆளுநர், ஆணையாளர், செயலாளர்கள் மூலம் உள்ளூராட்சி சபைகளை செயற்படுத்துவது என்பது சாத்தியமாகாத ஒரு விடயமாகும். இந்த நிலைமையானது மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் செல்கின்ற நிலை ஏற்பட்டு விடும். அத்துடன், மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்கு கீழ் வருமாக இருந்தால் மக்களுக்குரிய சேவையை உரிய முறையில் வழங்க முடியாத நிலைக்குச் செல்லும். எனவே உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் முடிந்தவுடன் தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும்.

## தேர்தலை உடன் நடத்துங்கள் அல்லது காலத்தை நீடியுங்கள்!



**க. தர்சன்**
**சுன்னாகம் பிரதேச சபை தவிசாளர்**

உள்ளூராட்சி சபைகளின் காலம் எதிர்வரும் மார்ச் மாதத்துடன் நிறைவடைகின்றது. ஏற்கனவே, கடந்த மார்ச் மாதத்தில் முடிவடைந்து இருந்தாலும் ஒரு வருடம் நீடிக்கப்பட்டு இருந்தது.

மக்களுக்கான ஆட்சிதான் ஒரு நாட்டில் இடம்பெற வேண்டும். அது மாகாண சபையாக இருக்கலாம் - பாராளுமன்றமாக இருக்கலாம் - உள்ளூராட்சி மன்றங்களாக இருக்கலாம் மக்களால் தேர்வு செய்யப்படுகின்ற மக்கள் பிரதிநிதிகள்தான் அந்த சபைகளை ஆள வேண்டும்.

உள்ளூராட்சி சபை தேர்தல் நடத்தப்படாமல் அந்த அதிகாரங்கள் திணைக்களங்களின் அதிகாரிகளுக்கு செல்லுமாக இருந்தால், உயர் அதிகாரிகள் - ஆளுநர்களின் கைகளுக்கு இந்த அதிகாரம் சென்றால் அரசாங்கம் ஒரு சர்வாதிகார ஆட்சிக்கு வழிவகுக்கும்.

ஏனென்றால் அவர்கள் நினைத்தபடி எல்லாவற்றையும் செய்து கொள்ள - அவர்கள் நிர்வாகத்தை பாவித்து கொள்வார்கள். உள்ளூராட்சி சபைகள் என்பது கீழ் மட்டங்களிலே மக்களுடன் இணைந்து செயல்படுகின்ற ஓர் அமைப்பாகும். அது நிச்சயமாக மக்கள் பிரதிநிதிகள் மூலமாக செயல்படுத்தப்பட வேண்டும். ஏனென்றால், அவர்களுக்குத்தான் தெரியும் மக்களுக்கு என்னென்ன பிரச்னை உள்ளது? என்னென்ன குறைகளை தீர்க்க வேண்டும் என்ற விடயங்கள்.

எனவே, உள்ளூராட்சி மன்றில் மக்கள் பிரதிநிதிகள் அல்லாது திணைக்கள தலைவர்கள் மூலம் சபைகள் நடத்தப்படுமாக இருந்தால் சபைகளை நடத்துவதில் பிரயோசனம் இல்லை. அரச நிர்வாகிகளினால் சபைகள் நிர்வகிக்கப்படும் போது மக்களின் தேவைகளை உணர்ந்து செயல்படுத்தக் கூடிய நிலை ஏற்படாது மேலிடத்து உத்தரவின்படி அவர்கள் செயல்பட வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவார்கள்.

ஆனால், மேலும் ஒரு வருடம் உள்ளூராட்சி மன்றங்களின் காலம் நீடிக்கப்படலாம் என்று அரச மட்டங்களில் பேசப்படுகின்றது. அது ஒரு நல்ல விடயம். அவ்வாறு தவறினால் உடனடியாக சபைக்காலம் முடிந்தவுடன் உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடத்தப்பட்டு ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்படும் மக்கள் பிரதிநிதிகள் மூலம் உள்ளூராட்சி மன்றங்கள் நடத்தப்பட வேண்டும்.

## ஊழலற்ற நிர்வாகத்துக்கு மக்கள் பிரதிநிதிகள் அவசியம்!



**அ. ஜெபநேசன்,**
**மானிப்பாய் பிரதேச சபை தவிசாளர்**

உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சி காலம் எதிர்வரும் மார்ச் 19ஆம் திகதி உடன் 5 வருடங்கள் பூர்த்தியாகிறது. உள்ளூராட்சி சபைகளுடைய கால எல்லைகள் நான்கு வருடங்கள். ஆனால், உள்ளூராட்சி அமைச்சர் ஒரு வருட கால நீடிப்பைவழங்கக்கூடிய சட்ட ஏற்பாடு இருந்தது. ஆகவே, இப்பொழுது காலநீடிப்பு முடிகின்ற நிலை வந்திருக்கின்றது.

உண்மையிலேயே மக்களின் - அடிமட்ட மக்களின் ஜனநாயக கருத்துக்களுக்கு பிரதான ஒரு பங்காக இருப்பது உள்ளூராட்சி சபைகள். இந்த உள்ளூராட்சி சபைகள் மக்களுக்குரிய சேவைகளை வழங்குவதில் பிரதான பங்கு வகிக்கின்றன.

மக்களுடைய ஜனநாயக தூண்களாக உள்ளூராட்சி சபைகள் இருக்கின்றன. இந்த சூழ்நிலையிலே அரசாங்கம் தேர்தல் நடத்தக்கூடாது என்பதற்காக பல்வேறு சாட்டுக்கள் கூறிக்கொண்டிருக்கின்றது.

குறிப்பாக உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைக்கின்றது வட்டாரங்கள் மாற்றப்பட வேண்டும் என பல்வேறுபட்ட விமர்சனங்கள் உருவாக்கப்பட்டு கொண்டிருக்கின்றன.

இந்த சூழ்நிலையிலேயே அரசாங்கம் மாகாண சபையை கடந்த நான்கு வருடங்களாக நடத்தாது இழுத்து கொண்டிருக்கின்றது. அதேபோல இப்பொழுது உள்ளூராட்சி சபைகளையும் இன்னும் காலம் தாழ்த்தி தங்களுக்குரிய ஏகோபித்த அதிகாரத்தைக் கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டும் என்று பாராளுமன்றம் ஜனாதிபதி என்ற இரண்டு அலகை கொண்டு இங்கு ஒரு சர்வதிகார ஆட்சியை ஏற்படுத்துவதற்காக இந்த செயல்பாடு மேற்கொள்ளப்படுகின்றது.

இது ஜனநாயக விரோதத்துக்கு எதிராக சிறப்பாக எதிர்த்து குரல் கொடுத்தவர் மகிந்த தேசப்பிரிய என்ற முன்னாள் ஆணையாளர். அந்த முன்னாள் ஆணையாளர் கொடுத்த அழுத்தங்கள் என்பது ஊடகங்களிலே பெரும் சவாலானதாக இருந்தது. இப்போது அவரையே அந்த எல்லை நிர்ணய குழுவுக்கு தலைவராக நியமித்து எதிர்வரும் பெப்ரவரி மாதம் அந்த அறிக்கை சமர்ப்பிக்குமாறு கூறப்பட்டிருக்கின்றது.

அந்த காலப்பகுதியில் எல்லை நிர்ணயம் செய்வது சாத்தியப்படாது. ஆகவே, மீள இன்னும் இரண்டு வருட காலப்பகுதியை எடுத்துக் கொள்ளும். குறிப்பாக மக்கள் பிரதிநிதிகளைக் குறைப்பது என்பது வேறு விடயம். அரசாங்கம்இப்படி செல்லுமாக இருந்தால் இனி வருகின்ற இரண்டு வருடங்களுக்கு உள்ளூராட்சி தேர்தலை புதிய முறையில் நடத்த முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்படும்.

பல சவால்களை எதிர்கொண்டு செயல்படுத்தக்கூடிய மக்கள் பிரதிநிதிகள், பொறுப்பு கூறக்கூடிய மக்கள் பிரதிநிதிகள் பங்குபற்றுதலோடு செயல்படும் உள்ளூராட்சி சபைகளை அரச நிர்வாகத்தால் மாத்திரமே உள்ளூராட்சி மன்றங்கள் இயங்கக்கூடிய சந்தர்ப்பங்களில், மக்களுக்கு உரிய பொறுப்பு கூறல் வருமானங்கள் ஈட்டிக் கொள்வதற்குரிய புதிய யுக்தி என்பன சட்டத்துக்கு அப்பாலும் சென்று சேவை புரியக்கூடிய மக்கள் பிரதிநிதிகளின் செயல்பாடுகள் என்பது லஞ்ச ஊழலற்ற பொறுப்பு கூறல் உள்ள ஒரு உள்ளூராட்சி சபையை நடத்துவது என்பது மிகவும் கேள்விக்குறியாக உள்ளது.

அரச நிர்வாகத்தால் ஊழலற்ற சபையை நடத்த முடியாது. எனவே மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்யக் கூடிய உள்ளூராட்சி மன்ற தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும். அது தவறும் பட்சத்தில் மக்களின் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டு ஜனநாயகம் அற்ற நிர்வாகத்தை அரசு நடத்தும் சாத்தியக்கூறுகள் உள்ளன.

## 100 கோடி வசூல்



கார்த்தி இரு வேடங்களில் நடித்த உளவாளி கதையை அடிப்படையாக வைத்து தண்ணீர் கதையை மையமாக வைத்து வெளியான படம் சர்தார்.

கலவையான விமர்சனத்தைப் பெற்ற இந்தப் படம் வசூலில் சாதனை படைத்தது. 40 கோடி இந்திய ரூபாய் செலவில் வெளியான இந்தப் படம், உலகளவில் 100 கோடி இந்திய ரூபாயை வசூலித்துள்ளது.

## ரஜினி படம் ஏப்ரலில்



அண்ணாத்த படத்தை அடுத்து நெல்சன் இயக்கும் ஜெயிலர் படத்தில் நடித்து வருகிறார் ரஜினிகாந்த். இந்தப் படத்தில் அவருடன் ரம்யா கிருஷ்ணன், யோகி பாபு, வசந்த் ரவி, விநாயகன் உட்பட பலர் நடிக்கிறார்கள்.

அநிருத் இசையமைக்கும் இந்த படத்தின் படப்பிடிப்பு இதுவரை 50 சதவீதம் நடைபெற்று விட்டதாக இயக்குனர் சொல்கிறார்.

அதிரடி சண்டைப் படமாக உருவாகியிருக்கும் இந்தப் படத்தை அடுத்த ஆண்டு ஏப்ரல் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

## அஜித்தை இயக்கும் சமுத்திரகனி



'துணிவு' படத்தில் அஜித்துடன் முதன்முறையாக இணைந்து நடிக்கிறார் சமுத்திரக்கனி. படப்பிடிப்பு இடைவெளியில் அஜித்துடன் நெருங்கிப் பேசிய சமுத்திரக்கனி, அவர் மனதுக்குப் பிடித்தமான நண்பராகி விட்டார்.

இருவரும் பேசியபோது, சமுத்திரக்கனி கூறிய ஒருவரி கதை அஜித்துக்கு பிடித்து விட்டது. எனவே, அவரிடம் விரைவில் கதை கேட்கவுள்ளார் அஜித். விரைவில் அஜித்தை சமுத்திரக்கனி இயக்க வாய்ப்புள்ளது.

## பிரதீப்பின் திட்டம்



'கோமாளி' படத்தின் இயக்குநர் பிரதீப் ரங்கநாதன் இயக்கி, நடித்திருக்கும் 'லவ் டுடே' படம் பெரிய வெற்றி பெற்றுள்ளது.

இந்நிலையில், விஜயை இயக்குவதற்கு தயாராகவுள்ளார் பிரதீப், சிலவேளைகளில் இந்தப் படம் பின்சென்றால், அடுத்த படத்தில் நாயகனாக அவரே நடிக்கவுள்ளாராம்.


## மீண்டும் இணையும் கூட்டணி



நடிகர் கமல் ஹாசனின் விக்ரம் படம் மிகப்பெரிய வசூலைக் கொடுத்தது. தற்போது கமல் இந்தியன் 2 படத்தில் சங்கரின் இயக்கத்தில் நடிக்கிறார்.

இந்நிலையில், மணிரத்னம் இயக்கத்தில் கமல்ஹாசன் நடிக்கவுள்ளார். இது தொடர்பான அறிவிப்பு அண்மையில் வெளியானது. இந்தப்படத்தை ராஜ்கமல் நிறுவனம் தயாரிக்க, ஏ. ஆர். ரஹ்மான் இசை அமைக்கவுள்ளார்.

35 ஆண்டுகளுக்கு முன்னர் நாயகன் படம் மூலம் இணைந்த இந்தக் கூட்டணி மீண்டும் இணைவது ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.









**திரைப்படம் - லவ் டுடே**
**இயக்கம் - பிரதீப் ரங்கநாதன்**
**இசை - யுவன்ஷங்கர் ராஜா**
**நடிப்பு - பிரதீப் ரங்கநாதன், இவானா, யோகி பாபு, சத்யராஜ், ராதிகா, ரவீணா**

ஒரு படத்தின் டிரைலரைப் பார்த்தே இந்தப் படத்தைப் பார்க்கலாமா, வேண்டாமா என ரசிகர்கள் ஓரளவு முடிவு செய்வார்கள். இந்தப் படத்தின் டிரைலரைப் பார்த்ததும் இன்றைய தலைமுறை இளைஞர்கள் பார்க்க வேண்டும் என்று முடிவு செய்து விட்டார்கள் என்பது படத்துக்கான வரவேற்பிலேயே தெரிகிறது.

கோமாளி படம் மூலம் இயக்குநராக வியக்க வைத்தவர் பிரதீப். அவரின் இந்த இரண்டாவது படத்தில் துணிச்சலாக, நம்பிக் கையுடன் நாயகனாகவும் அறிமுகமாகி தமிழ் திரையுலகில் உள்ள சிலருக்கு பயத்தையும் ஏற்படுத்தியிருக்கிறார் என்று சொல்லலாம்.

ஐ. ரி கம்பெனியில் வேலை பார்க்கும் பிரதீப் – இவானா இருவரும் காதலர்கள். இவர் கள் காதல் விவகாரம் இவானா அப்பா சத்யராஜுக்குத் தெரிய வருகிறது. பிரதீப்பை வீட்டிற்கு வரவழைத்துப் பேசி பிரதீப், இவானா கைபேசிகளை இருவரிடமும் மாற்றிக் கொடுத்து ஒரு நாள் வைத்திருங்கள் என்கிறார்.

மாற்றிக் கொண்ட கைபேசிகள் மூலமாக ஒருவர் இரகசியம் மற்றவருக்குத் தெரிய வர பிரதீப், இவானா சண்டை போட ஆரம்பிக்கிறார்கள். அந்த சண்டை பிரிவு வரை செல்கி றது. அதன் பின் என்ன நடக்கிறது என்பது தான் மீதிக் கதை.

"லவ் டுடே" என படத்துக்குப் பொருத்தமான பெயரைத்தான் வைத்திருக்கிறார்கள். 1997 ஆம் ஆண்டில் விஜய், சுவலட்சுமி நடித்து பாலசேகரன் இயக்கத்தில் வெளிவந்த "லவ் டுடே" அப்போது பெரிய வெற்றிப் படம். அன்றைய அந்தக் காதல் படத்திற்கும், அதே பெயரை கடன் வாங்கி இப்போது எடுத்திருக் கும் காதல் படத்திற்கும் இடையில் உள்ள "காதல்" எவ்வளவு மாறிவிட்டது என்பதை நினைக்கும் போது அதிர்ச்சியாகத்தான் உள்ளது.

நாயகனாக அறிமுகமான முதல் படத்திலேயே தனது நடிப்பை பற்றியும் பேச வைத்து விட்டார் பிரதீப். காதல், உணர்ச்சி, நகைச் சுவை, என எல்லாம் கலந்த "உத்தமன் பிரதீப்" என்ற கதாபாத்திரத்தில் நடிப்பில் உத்தமமாய் இருக்கிறார். எந்தக் காட்சியிலும் கதாபாத்திரத்துக்காக நடித்திருக்கிறார் என்று சொல்லமுடியாதபடி நடித்திருக்கிறார். தன்னைப் பற்றிய தவறுகளை மறைத்துவிட்டு, காதலி செய்த தவறுகளை மட்டும் பெரிதுபடுத்திப் பேசும் ஒரு கதாபாத்திரம். தன்னைப் பற்றிய உண்மைகள் தெரிய வந்ததும் அதை சமாளிக்க அவர் செய்யும் விஷயங்கள் பலரின் நிஜமான தோற்றம். உச்சக்கட்ட காட்சிகளில் கண் கலங்கவும் வைக்கிறார் பிரதீப்.

இவானா, இதற்கு முன்பு இவர் எந்தெந்த படத்தில் நடித்திருக்கிறார் என்று படம் பார்க்க வருபவர்கள் யோசித்திருப்பார்கள். ஆனால், இந்தப் படம் இவானாவுக்கு இனி இனிய முகவரியாக அமையப் போகிறது. இளம் வயதில் கொஞ்சம் "ப்ரீக் அவுட்" ஆக இருக்க நினைக்கும் ஒரு பெண் என்னவெல்லாம் செய்வார், எப்படியெல்லாம் இருப்பார் என்பதை கண் முன் நிறுத்துகிறார். ஒரு பக்கம் அப்பா சத்யராஜின் கண்டிப்பு, மறுபக்கம் காதலன் பிரதீப்பின் காதல் தொல்லை என ஒரு உணர்திறன் கதாபாத்திரத்தை எளிதாக கையாண்டிருக்கிறார்.

2 கே கிட்ஸ் என்பபடும் இன்றைய தலைமுறை காதல் எப்படி இருக்கிறது என ஒரு பக்கம் காட்டினாலும், மறுபக்கம் பேசி செய்யும் திருமணங்கள்கூட எப்படி சந்தேகங்களை ஏற்படுத்துகிறது எனவும் காட்டியிருக்கிறார் பிரதீப். அவருடைய அக்கா ரவீணாவுக்கும் யோகிபாபுவுக்கும் திருமணம் நடக்க இருக்கும் நிலையில் அந்தக் கதாபாத்திரங்களை வைத்தும் ஒரு "பாடத்தை" எடுத்திருக்கிறார். யோகி பாபுவைப் பார்த்து சிரித்தவர்கள் இந்தப் படத்தைப் பார்த்து நிச்சயம் யோசிப்பார்கள். அக்கா ரவீணாவின் நடிப்பும் அவ்வளவு இயல்பு.

எந்த மாதிரியான அம்மா கதாபாத்திரம் கொடுத்தாலும் கவனிக்க வைப்பவர் ராதிகா சரத்குமார். இந்தப் படத்தில் பிரதீப்பின் அம்மாவாக, 2 கே கிட்ஸ்களின் அம்மாவாக மனம் கவர்கிறார். அதிலும் ஒரு காட்சியில் பிரதீப்புக்கு அவர் அறிவுரை சொல்வது நூற்றுக்கு நூறு உண்மை. இவானாவின் அப்பாவாக சத்யராஜ். தன் செயல்களாலேயே வெறுப்பைக் காட்டுகிறார் என்று நினைத்தால் அந்தக் கதாபாத்திரத்துக்கும் மனதைத் தொடும்விதமான முடிவை வைத்திருக்கிறார் இயக்குநர். பிரதீப்பின் நண்பர்கள், இவானாவின் நண்பனாக ஆஜீத் ஆகியோரும் அவர்களது நடிப்பைக் குறிப்பிட வைக்கிறார்கள்.

இந்தப் படத்துக்காக யுவன் ஷங்கர் ராஜாவை இயக்குநர் தேர்வு செய்தது பொருத்தமான ஒன்று. பல காட்சிகளை மட்டுமல்ல படத்தையே தன் பின்னணி இசையாலும் தூக்கி நிறுத்துகிறார் யுவன். பாடல்களுக்கான இடங்கள் பல இருந்தாலும் ஓரிரு பாடல்கள் மட்டுமே படத்தில் இடம் பெற்றிருக்கிறது. காதல் அதற்கு மேல் உணர்ச்சி என படத்துக்கான காட்சிப் பதிவுகளைத் தந்திருக்கிறார் ஒளிப்பதிவாளர் தினேஷ் புருஷோத்தமன்.

இடைவேளைக்குப் பிறகு திரைக்கதையில் தடுமாற்றம் இருக்கிறது. அடிக்கடி நாயகனும், நாயகியும் கைபேசியிலேயே பேசிக் கொள்வது அதிகமாக உள்ளது. இளம் ரசிகர்களைக் கவர வேண்டும் என்பதற்காக சில நெருக்கமான காட்சிகள், இரட்டை அர்த்த வசனங்கள் படத்தில் இடம் பெற்றுள்ளன.

காதலில் நம்பிக்கை எவ்வளவு அவசியம் என்பதுதான் இந்தப் படம் சொல்ல வரும் கருத்து. காதலர்கள் எவ்வளவு வெளிப்படையாக இருக்க வேண்டும் என்று சொல்லும் அதே நேரத்தில் சில விஷயங்களை மறைப்பதும் மகிழ்வைத் தரும் என்கிறது. அவை என்னென்ன என்பதுதான் படத்தின் அடிப்படையும் முக்கியமும்.






# உலகக் கிண்ணம் யாருக்கு?

அவுஸ்திரேலியாவில் நடந்து வரும் 8-வது 20 ஓவர் உலகக் கிண்ணப் போட்டியின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு (இலங்கை நேரம்) நடக்கவுள்ளது.

இதில், ஜோஸ் பட்லர் தலைமையிலான இங்கிலாந்து அணியும், பாபர் அசாம் தலைமையிலான பாகிஸ்தான் அணியும் பலப்பரீட்சை நடத்துகின்றன.

ஏறக்குறைய 1 லட்சம் ரசிகர்கள் அமரும் வசதி கொண்ட உலகின் மிகப்பெரிய விளையாட்டரங்கங்களில் ஒன்றான மெல்பர்னில் அரங்கேறும் இந்த போட்டிக்கான ரிக்கெற்றுக்கள் அனைத்தும் விற்றுதீர்ந்து விட்டன.

20 ஓவர் உலகக் கிண்ணப் போட்டியில் இங்கிலாந்து, பாகிஸ்தான் அணிகள் நேருக்கு நேர் மோத இருப்பது இது 3ஆவது முறையாகும். இதற்கு முன் 2009ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடந்த 20 ஓவர் உலகக் கிண்ணப் போட்டியில் லீக் சுற்றில், பாகிஸ்தான் அணி இங்கிலாந்திடம் தோல்வி அடைந்தது.

அதே சமயம் அந்த ஆண்டு உலகக் கிண்ணத்தை பாகிஸ்தான்தான் வென்றது. அடுத்து 2010இல் மேற்கிந்தியத் தீவுகளில் நடந்த 20 ஓவர் உலகக் கிண்ணத் தொடரின்போது இவ்விரு அணிகளும் "சுப்பர் 8" சுற்றில் சந்தித்தன. இதில் இங்கிலாந்து அணி அபார வெற்றி பெற்றது. மேலும் அந்த ஆண்டு உலகக் கிண்ணத்தை இங்கிலாந்து அணி வென்றது.

இந்த நிலையில் இறுதிப்போட்டிக்கு வருணபகவான் வழிவிடுவாரா என்பது பலத்த கேள்விக்குறியாகி இருக்கிறது. இன்று மெல்பர்னில் 15 முதல் 25 மில்லி மீற்றர் வரை மழை பெய்ய 95 சதவீதம் வாய்ப்பு இருப்பதாக அங்குள்ள வானிலை மையம் அறிவித்துள்ளது.

இறுதிப்போட்டிக்கு மாற்று நாள் வசதி உண்டு. அதாவது மழையால் ஆட்டம் பாதிக்கப்பட்டால் மாற்று நாளாக அறிவிக்கப்பட்டுள்ள அடுத்தநாளில் (திங்கட்கிழமை) போட்டி நடத்தப்படும். ஆனால், இரண்டு நாட்களும் மழை காரணமாக ஆட்டம் நடத்த முடியாத நிலை உருவானால் இரு அணிகளும் கூட்டாக சம்பியன் பட்டம் வென்றதாக அறிவிக்கப்படும்.

லீக் சுற்றில் இரு அணிகளும் குறைந்தபட்சம் 5 ஓவர்கள் ஆடி முடித்து இருந்தால் டக்வேர்த் லூயிஸ் முறைப்படி வெற்றியாளர் முடிவு செய்யப்படுவது வழக்கமாகும். ஆனால், நொக்- அவுட் சுற்று போட்டியில் முடிவு தெரிய இரு அணிகளும் குறைந்தபட்சம் 10 ஓவர்கள் விளையாடி முடித்து இருக்க வேண்டியது அவசியமானதாகும். மழை குறுக்கிட்டால் ஓவர் குறைத்தாவது போட்டியை நடத்த முன்னுரிமை அளிக்கப்படும்.

ஞாயிற்றுக்கிழமை மழையால் ஓவர் குறைத்து ஆட்டம் தொடங்குவதாக அறிவித்த பிறகு, அந்த நாளில் ஆட்டம் நடக்கவில்லை என்றால் மாற்று நாளில் முழுமையாக 20 ஓவர் கொண்டதாக போட்டி நடத்தப்படும். ஞாயிற்றுக்கிழமை ஆட்டம் தொடங்கி குறிப்பிட்ட நேரத்துக்குள் முடியாமல் போனால் மறுநாளில் அந்த போட்டி முந்தைய நாள் நிறுத்தப்பட்ட நிலையில் இருந்து தொடங்கி நடைபெறும்.

# பீனிக்ஸ் பறவையாக எழுந்த அலெக்ஸ் ஹேல்ஸ்




மீண்டும் ஒரு முறை இங்கிலாந்து அணிக்காக அலெக்ஸ் ஹேல்ஸ் விளையாடுவார் என்பதை அந்த நாட்டு ரசிகர்கள் நினைத்துக்கூட பார்த்திருக்கமாட்டார்கள். ஆனால், தற்போது இருபது - 20 உலகக் கிண்ணத்தில் இங்கிலாந்து அணியை தனது அசாத்தியமான துடுப்பாட்டத்தால் இறுதிப் போட்டிக்குள் அழைத்துச் சென்றுள்ளார் ஹேல்ஸ். இந்தியாவுக்கு எதிரான அரையிறுதி ஆட்டத்தில் அவர் 47 பந்துகளில், 7 சிக்ஸர்களுடன் 86 ஓட்டங்கள் விளாசி மிரளச் செய்தார்.

இத்தனைக்கும் இருபது - 20 உலகக் கிண்ணத்துக்கான இங்கிலாந்து அணியில் அலெக்ஸ் ஹேல்ஸ் முதலில் இடம் பெறவில்லை. கோல்ப் விளையாடும் போது ஜொன்னி பெயர்ஸ்ரோவுக்கு காயம் ஏற்பட்டதால் கடைசி நேரத்தில் விலகினார். இதனால் சுமார் மூன்றரை வருடங்களுக்குப் பிறகு இங்கிலாந்து அணியில் சேர்க்கப்பட்டார் அலெக்ஸ் ஹேல்ஸ்.

கடந்த 2019ஆம் ஆண்டு ஊக்கமருந்து பயன்படுத்திய விவகாரத்தில் அலெக்ஸ் ஹேல்ஸூக்கு 21 நாட்கள் தடைவிதிக்கப்பட்டது. அப்போது 50 ஓவர் உலகக் கிண்ணத்தை இங்கிலாந்து நடத்தியது. இதற்கான அணியில் அலெக்ஸ் ஹேல்ஸ் இடம்பெற்றிருந்தார். ஆனால் தடை காரணமாக 2 நாட்களில் உலகக் கிண்ணத்தில் இருந்து நீக்கப்பட்டார்.

இந்தப் பிரச்னையால் அலெக்ஸ் ஹேல்ஸூக்கும் இங்கிலாந்து அணியில் மற்ற வீரர்களுக்கும் இடையே இருந்த நம்பிக்கையில் முழுமையான முறிவு ஏற்பட்டதாக அப்போதைய அணித் தலைவர் மோர்கன் மனவேதனையை வெளிப்படுத்தினார்.

தனது ஒழுங்கீன செயல்களால் சொந்த மண்ணில் இங்கிலாந்து அணி முதன்முறையாக உலகக் கோப்பையை கைகளில் ஏந்திய தருணங்களில் இல்லாதது ஹேல்ஸூக்கு மன வலியை கொடுத்தது.

சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடத் தடை விதிக்கப்பட்டாலும் தொழில்முறை இருபது -20 லீக் போட்டிகளில் தொடர்ந்து விளையாடி வந்தார் அலெக்ஸ் ஹேல்ஸ். அவுஸ்திரேலியாவின் பிக் பாஷ் இருபது -20 லீக், பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடர்களில் ஓட்ட வேட்டையாடினார். கடந்த ஓகஸ்ட் மாதம் இருபது - 20 போட்டிகளில் 10 ஆயிரம் ஓட்டங்களை எட்டிய முதல் இங்கிலாந்து வீரர் என்ற சாதனையை படைத்திருந்தார் ஹேல்ஸ்.

இது ஒருபுறம் இருக்க மோசமான தகுதி காரணமாக இருபது - 20 உலகக் கிண்ணம் தொடங்குவதற்கு சில மாதங்களுக்கு முன்னர், சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து இயன் மோர்கன் ஓய்வு பெற்றார். இதனால் புதிய அணித் தலைவராக ஜோஸ் பட்லர் தேர்வானார். இதன் பின்னர் அணியின் சூழ்நிலை மாறியது.

பெயர்ஸ்ரோ காயம் காரணமாக விலக மறுபுறம் ஜசன் ராய் மோசமான துடுப்பாட்டம் காரணமாக அணியில் தனது இடத்தை இழந்தார். இதனால் அலெக்ஸ் ஹேல்ஸ/க்கு மீண்டும் சர்வதேச கிரிக்கெட் போட்டிக்கான கதவு திறந்தது.

மூன்றரை ஆண்டுகளுக்கு பிறகு இங்கிலாந்து அணிக்கு திரும்பிய அலெக்ஸ் ஹேல்ஸ், இருபது - 20 உலகக் கிண்ணத் தொடருக்கு முன்னதாக பாகிஸ்தானில் நடைபெற்ற இரு தரப்பு இருபது - 20 தொடரில் அரைச் சதம் அடித்து தனது மீள் வருகையை உலகுக்குக் காண்பித்தார். அப்போது அவர், "இங்கிலாந்து அணிக்காக விளையாடாத மூன்றரை ஆண்டுகளை எப்போதும் மறக்க மாட்டேன்" என உருக்கமாகக் கூறினார்.

2019ஆம் ஆண்டு சொந்த மண்ணில் இழந்த பெருமையை தற்போது அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் இருபது - 20 உலகக் கிண்ணத்தில் மீட்டெடுத்துள்ளார் அலெக்ஸ் ஹேல்ஸ். பிக் பாஷ் தொடரில் விளையாடியுள்ள அனுபவத்தால் உலகக் கிண்ணத்துக்கான ஆடுகளங்களை நன்கு அறிந்திருந்தார் ஹேல்ஸ். இதுவும் அவர், இங்கிலாந்து அணிக்குள் மீண்டும் பிரவேசிக்கக் காரணமாக அமைந்தது.

இருபது - 20 உலகக் கிண்ணத்தில் அலெக்ஸ் ஹேல்ஸ் 5 போட்டிகளில் 2 அரைச்சதங்களுடன் 211 ஓட்டங்கள் விளாசி இங்கிலாந்து வீரர்களில் அதிக ஓட்டங்கள் குவித்தவராக உள்ளார். அவரின் சராசரி 148.59 ஆக உள்ளது. 10 சிக்ஸர்களை பறக்கவிட்டுள்ள அவர், 19 பௌண்ட்ரிகளையும் விரட்டியுள்ளார். அரையிறுதியில் இந்திய அணியின் கனவை சிதைத்த ஹேல்ஸ் கூறும்போது, "நான் மீண்டும் ஓர் உலகக் கிண்ணத்தில் விளையாடுவேன் என்று நினைக்கவில்லை, அதனால் இது மிகவும் சிறப்பு வாய்ந்தது" என்றார்.

அரையிறுதிப் போட்டியில் இந்திய அணியை இங்கிலாந்து சிதைத்ததில் அலெக்ஸ் ஹேல்ஸ் பிரதான பங்கு வகித்தார். இதன் மூலம் தன்னை மீண்டும் அணியில் சேர்த்ததற்கு நியாயம் சேர்த்துள்ளார். ஹேல்ஸின் வெறித்தனமான ஆட்டம் 2019இல் அவர், செய்த தவறுகளை மறக்கடிக்க வைத்துள்ளது என்பது நிதர்சனம்.

## பிரான்ஸ் தலைநகர் பாரிசில் நடந்த

- தேவ தாசன்

# “சமூக விடுதலைப்போராளிகள் நினைவரங்கம்”




சமூக இடைவெளி எனும் ‘இருண்ட காலத்தின்’ பிற்பாடு நடைபெற்ற நெருக்கமான ஒரு நினைவேந்தல் நிகழ்வாகவும், கலந்துரையாடலாகவும் அமைந்தது “சமூக விடுதலைப்போராளிகள் நினைவரங்கம்”. அண்மையில் பாரிஸ் நகரில் காலை 11 மணிக்கு ஆரம்பித்து இரவு 7 மணிவரை நடைபெற்றது.

நீண்ட காலத்திற்கு பின் லண்டன், ஜேர்மனி, டென்மார்க், ஹொலன்ட் போன்ற நாடுகளிலிருந்தும் நண்பர்கள் கலந்து கொண்டு சிறப்பித்த நிகழ்வாக அமைந்தது. பிரான்சில் வாழும் சிங்கள நண்பர்களையும் உள்வாங்கி, அவர்களோடும் உரையாடியது நிகழ்வின் சிறப்பம்சமாக கருதலாம். ஜேர்மனியில் இருந்து கலந்து கொண்ட உமா உரையாடல்களை சுருக் கமாக சிங்களத்தில் மொழிபெயர்த்தார். வட பகுதியில் தொடரும் சாதியம் குறித்த தமது சந்தேகங்கள் பலவற்றை சிங்கள நண்பர்கள் கேட்டுத்தெரிந்து கொண்டார்கள்.

தனது வரவேற்புரையூடாக, சமூக விடுதலைப் போராளிகளின் தீண்டாமைக்கு எதிரான அர்ப்பணிப்புப் போராட்டச் சம்பவங்களின் முக்கியத்துவத்தை தேவதாசன் நினைவுறுத்தியதோடு, இன்றைய நவீன சாதியத்தின் இருப்பையும் அதன் சமூக பிரயோகத் தன்மை குறித்தும் பேசினார். மறைந்த சமூக விடுதலைப் போராளிகளை கௌரவிக்குமுகமாக அனைவராலும் நினைவுத் தீபம் ஏற்றி நிகழ்வு தொடங்கியது.

தீண்டாமை ஒழிப்பு போராட்டங்களோடு நேரடி அனுபவம் கொண்ட வர்களும், அப்போராட்டத் தலைமைகள், தோழர்களோடு மிக நெருக்கமான தொடர்பு வைத்திருந்தவர்களான வி.ரி.இளங்கோவன், ஆர். யோகரட்ணம் ஆகி யோர் கடந்தகாலப் போராட்ட அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.



கடந்த கால சாதியப் போராட்டத் தகவல்களை உள்ளடக்கிய புத்தகம், மற்றும் சாதிய ஒடுக்குமுறைக் குள்ளான சொந்த அனுபவங்களை பதிவு செய்த புத்தகம் என ஐந்து புத்தகங்களின் அறிமுக நிகழ்வு நடைபெற்றது. அதில்: சரவணனால் (நோர்வே) எழுதித் தொகுக்கப்பட்ட ‘தலித்தின் குறிப்புகள்’ நூலை விஜி அறிமுக உரையாகவும் அந்நூலினூடாக நாம் அறிந்து கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் பகிர்ந்து கொண்டார். ‘எழுவோம்!நிமிர்வோம்! திரள்வோம்!’ எனும் ஏ. ஜி.யோகராஜா (சுவிஸ்) எழுதிய கட்டுரைத் தொகுப்பினை அந்தோனிப்பிள்ளை அறிமுகம் செய்தார்.

மிக நுட்பமாக வாசித்து கட்டுரையாளரின் நோக்கத்தையும், அதனூடாக அந்நூல் வெளிப்படுத்தும் கருத்தியலையும் தனதுரையூடாக அந்தோனிப்பிள்ளை பார்வையாளர்களின் கவனத்திற்கு கொண்டுவந்தார். சிவா சின்னப்பொடி எழுதிய ‘நினைவழியா வடுக்கள்’ எனும் புத்தகத்தின் வாசிப்பனுபவத்தை அரவிந்த் அப்பாத்துரை பகிர்ந்து கொண்டார். மூன்றாவது பதிப்பாக அண்மையில் வெளிவந்த வெகுஜனன்-இராவணா (இலங்கை) இரு வரும் எழுதிய ‘இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டமும்’ நூலின் வாசிப்பனுபவத்தை அகரன் பகிர்ந்து கொண்டார்.

மறைந்த சமூக விடுதலைப்போராளியான என். கே.ரகுநாதனின் படைப்புக்கள், கட்டுரைகள் உட் பட மேலும் அவர் குறித்த அபிப்பிராயங்கள் இணைந்த கட்டுரைகள் என அதனை ‘ரகுநாதம்’ எனும் ஓர் பெரும் ‘தொகுப்-ஓசையாக’ தொகுத்தளித்துள்ளார் கற்சுறா (கனடா) அவர்கள். அப்பெரும் தொகுப்பின் உள்ளடக்க அறிமுகத்தையும், தனது கவனத்திற்கும் நெருக்கத்திற்கும் உள்ளான சில படைப்புக்களை உமா (ஜேர்மனி) அறிமுக-விமர்சனப் பாங்கில் உரையாற்றினார்.

“சமூக விடுதலையின் அவசியமும் அது எதிர்கொண்டுள்ள சவால்களும்” எனும் தலைப்பிலான உரையாடலுக்கு சிவா சின்னப்பொடி நெறியாளராக செயலாற்றினார். இத்தலைப்பிலான உரையாடலுக்கு அவர் மிக பொருத்தமானவரும், சாதியத் தீண்டாமை ‘வடுக்கள்’ சுமந்த அனுபவம் நிறைந்தவர். அதனை தனது ‘நினைவழியா வடுக்கள்’ எனும் புத்தகத்தினூடாக பதிவு செய்தும் உள்ளார். இத்தலைப்பில் கலையரசன் (ஹொலன்ட்), தர்மு பிரசாத், ரயாகரன் என மூவரும் தங்களது தனித்துவமான சமூகப் பார்வைகளை முன்வைத்து மிக சிறப்பாக உரையாற்றினார்கள்.

“இலங்கையின் சமகால அரசியல் கலந்துரையாடல்” எனும் தலைப்பிலான நிகழ்வை ராகவன் (லண்டன்) வழிநடத்தினார். அண்மையில் ராஜபக்ச குடும்ப அரசுக்கு எதிராக காலிமுகத்திடலில் நடைபெற்ற போராட்டத்தின் சாதக-பாதகங்கள் குறித்த இருதரப்பு உரையாடலாக நீண்டு வளர்ந்து கொண்டே சென்றது. ராகவனின் தலைமை உரையின் தூண்டுதலால் இந்நிகழ்வில் பார்வையாளர்களாக அமர்ந்திருந்தவர்களே உரையாடலில் கடந்துகொண்டனர்.

காலிமுகத்திடல் போராட்டத்தின் மீதான பலம்-பலவீனம் அதற்கும் தற்போதைய அரசிற்குமான தொடர்பு குறித்த சந்தேகங்களை அவரவர் அரசியல் தேடலூடாக விவாதித்துக்கொண்டனர். கரவை தாசன் (டென்மார்க்), வி.ரி.இளங்கோவன், கோவை நந்தன், உமா, அந்தோனிப்பிள்ளை, சோலையூரான், சோபாசக்தி, ரஞ்சனி, வரதன் என பலரும் தமது அரசியல் கருத்துக்களை முன்வைத்தனர்.

இந்நிகழ்விற்கு இங்கிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் வருகை தந்தவர்ளுக்கும், இந்நிகழ்விற்கு சகலவித உதவிகளை வழங்கிய நண்பர்களுக்கும் சுந்தரலிங்கம் நன்றி உரையாற்றினார்.

---



# வியுக்தியார் பதில்கள்

**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

**நி. ராஜேந்திரன், குருமணக்காடு, வவுனியா.**

**கேள்வி:** தமிழரின் உரிமைப் போராட்டம் குறித்த சிந்தனையை இளைஞர்களிடத்தில் மழுங்கடிக்கும் நோக்குடன் போதைப்பொருள் விற்பனையையும் பாவனையையும் வடக்கில் வேரூன்ற செய்கிறார்களோ என்ற சந்தேகம் எனக்குள் உள்ளது என்று நீதியரசர் சி.வி. விக்கினேஸ்வரன் தெரிவித்திருக்கிறாரே?

**வியுக்தியார்:** இந்த சந்தேகம் பலருக்கும் இருக்கிறதுதான். ஆனால், வடக்கு கிழக்கில் மாத்திரம் என்ன நடக்கின்றது என்று தெரிந்துகொள்ளும் நாம் அப்படி நினைப்பதில் தவறில்லைத்தான். போதைக்கு அடிமையான சகோதரன் பாலியல் வல்லுறவு செய்ததால் சகோதரி தற்கொலை செய்துகொண்ட சம்பவம் நமக்குத் தெரியும். ஏனெனில் அது நமது மண்ணில் நடந்தது. ஆனால் குருநாகலில் போதைக்கு அடிமையான மகன், தனது தாயையே வல்லுறவு செய்த சம்பவங்களும் தெற்கில் நடக்கின்றன. இது பற்றிய செய்திகள் நமக்கு வராததால் நாம் இது என் னவோ நமது மண்ணில் மாத்திரம் நடப்பதாக எண்ணிக்கொண்டு இருக்கிறோம். வடக்கில் இளைஞர்களிடத்தில் உரிமைப் போராட்டம் குறித்த சிந்தனையை மழுங்கடிக்கவெனில், தெற்கில் எதற்காக என்று தெரியவில்லை.

---

**கே. கோபாலசிங்கம், காரைதீவு, அம்பாறை.**

**கேள்வி:** நமது கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஐயாவை ஈழநாடு தொடர்ச்சியாக விமர்சித்து வருவதை அண்மைக் காலங்களில் காணமுடிகின்றது. இந்த நிலையில் ஐயாவுக்கு “ஜனநாயகத்தின் பொன்” என்று தெற்கு நிறுவனம் ஒன்று பட்டமளித்துக் கௌரவித்திருக்கிறது. இனியாவது ஈழநாடு, ஐயாவை விமர்சிக்காமல் இருக்கும் என்று நம்பலாமா?

**வியுக்தியார்:** சம்பந்தன் ஐயாவை விமர்சிக்கிறது என்பதற்காக அவருக்கு எதிரானது என்று முடிவெடுத்து விட்டீர்கள் போலத் தெரிகின்றது. அப்படியல்ல, ஐயாவை எம்.பி. பதவியிலிருந்து ராஜினாமாச் செய்யச்சொல்லி சிலர் தமிழரசு மத்தியகுழுக் கூட்டத்தில் கோரிக்கை வைத்தபோது அதனைக் கண்டிக்கவும் ஈழநாடு தவறியதில்லை. அவரை விமர்சிப்பது என்பது, அவர் தவறுசெய்யக்கூடாது என்ற விருப்பத்தில்தானே தவிர, அவர் மீது எமக்கு தனிப்பட்ட விருப்பு வெறுப்பு ஏதும் இல்லை. அது சரி அவருக்கு ஜனநாயகத்தின் பொன் என்ற விருது தெற்கில் ஒரு நிறுவனத்தால் வழங்கப்பட்டிருப்பது நல்ல செய்திதான். ஐந்து வருடங்கள் நல்லாட்சி அரசாங்கத்தின்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவர் அவர். ஒரு எதிர்க்கட்சித் தலைவர் ஐந்து ஆண்டுகள் அரசின் வரவுசெலவுத்திட்டத்தை ஆதரித்து வாக்களித்தவர் என்ற பெருமைக்குரிய எதிர்க்கட்சித் தலைவருக்கு இப்படியொரு விருது கொடுப்பது பொருத்தமானதுதானே?

---

**ந. கிரோஷன், மகிழுர், மட்டக்களப்பு.**

**கேள்வி:** 306 இலங்கையர்களுடன் கனடாவிற்கு சென்றுகொண்டிருந்த படகு ஒன்று கடலில் மூழ்கும் நேரத்தில் ஜப்பான் கடற்படையினரால் மீட்கப்பட்டு காப்பாற்றப்பட்டனர். அந்தக் கப்பல் இன்னும் சில நாட்கள் பயணம் செய்த பின்னர் இந்த அனர்த்தம் நேர்ந்திருந்தால் இவர்கள் காப்பாற்றப் பட்டிருப்பார்களோ தெரியவில்லையே?

**வியுக்தியார்:** நம்மவர்களின் வெளிநாட்டு மோகம் எப்போது தீருமோ தெரியவில்லை. அதிலிருந்த 306 பேரில், எத்தனை பேருக்கு தாங்கள் எங்கிருந்து புறப்படுகின்றோம், இன்னும் எத்தனை நாட்களில் கனடாவுக்கு போய்ச் சேருவோம் என்பது தெரிந்திருந்ததோ தெரியவில்லை. அப்படித் தெரிந்திருந்தால் தமக்கு அதுவரை தேவையான உணவுப்பொருட்கள் இருக்கின்றதா என்பதை பார்த்திருப்பார்கள். கப்பல் புறப்படும்போதே சில மணி நேரத்தில் கப்பலில் இருந்து அதன் மாலுமி கடலில் குதித்து தப்பிச் சென்று விட்டாராம். ஆக, அது ஒரு திட்டமிட்ட மோசடியாகவே தெரிகின்றது. ஒவ்வெருவரிடமும் இருபது லட்சங்களுக்கு குறையாத பணத்தை வாங்கிக்கொண்டு நடுக்கடலில் தவிக்க விட்டுவிட்டு அவர்களை ஏற்றிச் சென்ற மோசடிக்காரர்கள் தப்பி விட்டனர். இந்தச் செய்தியையும் அதிலிருந்து மீட்கப்பட்ட அம்மாமாரையும் காணொளிகளில் பார்த்தபோது, கொடுத்த இருபது லட்சம் ரூபாவையும் இலங்கை வங்கி ஒன்றில் வைப்பிலிட்டுவிட்டு வட்டியை எடுத்து சீவியம் நடாத்தினாலும், இன்றுள்ள வட்டிக்கு ஒரு பட்டதாரி ஆசிரியரின் சம்பளத்தை விட அதிகமாகப் பெற்றிருக்கலாம் என்று சொல்லாமல் இருக்க முடியவில்லை.

# மவுஸ்

கே.எஸ்.சுதாகர்

காலாண்டிற்கு ஒரு தடவை ஜப்பானில் இருந்து எமது தொழிற்சாலைக்கு வரும் 'வர்ணமும் கடதாசியும்' (Paint & Paper) என்ற துண்டுப்பிரசுரத்தில் இருந்த அந்தச் செய்தி என்னைத் திகைப்படையச் செய்தது.

செய்தி இதுதான்.

"காரின் உதிரிப்பாகங்களுக்கு மாத்திரம், வர்ணம் அடிக்கும் நவீன முறை ரோபோக்களில் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இந்த நவீன முறையை, சர்வதேசம் எங்கும் உள்ள எமது கார் உற்பத்தி தொழிற்சாலைகளில் நடைமுறைப்படுத்துவதன் மூலம் வீணாகப் போகும் பல லட்சம் பெறுமதியான வர்ணத்தை மீதப்படுத்தலாம்."

●

எத்தகைய இருட்டடிப்பு இது!

இதைப் பலரும் அறிவார்கள். இருப்பினும் அதன் வலி எங்கள் ஐவருக்கும் மட்டுமே உரியது. ஐவர் என்று இங்கே நான் குறிப்பிடுவது---குலேந்திரன் ஆகிய நான், சீனத்துப்பெண் சியாங் சை, யுவானஸ் மற்றும் வியட்நாமியர்கள் பிங் பொங் ஹாவ், துஜி.

அந்தச் சம்பவம் நடந்து மூன்று வருடங்கள் ஆகிவிட்டன.

●

ஒரு கார் ஒன்றை உற்பத்தி செய்வதற்குத் தேவையான சகல வளங்களையும்– இஞ்சின் முதற்கொண்டு உதிரிப்பாகங்கள் வரை– கொண்டுள்ளது எமது உற்பத்தி நிறுவனம். இஞ்சின் (இயந்திரம்), 'பொடி ஷொப்' (காரின் உருவத்தைத் தயாரித்தல்), பெயின்ற் (காரின் உருவத்திற்கு வர்ணம் அடித்தல்), அசெம்பிளி (இயந்திரங்களைப் பொருத்துதல்) என்பவை தொழிற்சாலையின் பிரதான பிரிவுகள். தவிர இன்னும் பல சிறிய பிரிவுகளும் உண்டு. இந்தப் பிரிவுகளுக்கிடையே வருடாவருடம் 'குவாலிற்றி சேர்க்கிள்' என்ற தொழின்முறை சார்ந்த போட்டி நடைபெறுவதுண்டு. ஏறக்குறைய முப்பது குழுக்கள் வரையில் போட்டியில் பங்குபற்றும்.

அப்படிப்பட்டதொரு சந்தர்ப்பத்தில்தான் நாங்கள் ஐவரும் ஒன்றாக ஒரு குழுவில் இணைந்தோம். குழுவிற்கு 'நுயுஊநு' என்று பெயரிட்டோம். நான் எமது குழுவின் தலைவர் ஆனேன்.

முதலில் மூளைச்சலவை (பிறெய்ன் ஸ்ரோம்) செய்தோம்.

'மச்சான்' என்றபடியே என் தோளில் கை போட்டான் பிங் பொங் ஹாவ். வியட்நாமியனாகிய அவனுக்கு நிறையவே தமிழ் சொற்கள் தெரியும்.

"நான் ஒரு ஐடியா வைத்திருக்கின்றேன்"அவன் சொல்லப் போவதை கூர்ந்து அவதானித்தோம்.

"காரின் பெயின்ரின் தரத்தைக் கண்டுபிடிக்க மவுஸ் ஒன்று டிசைன் பண்ணலாம். மவுசை காரின் உலோகப் பகுதியெங்கும் நகர்த்துவதன் மூலம் இதனை நாங்கள் கண்டறியலாம்." ஹாவ் மிகவும் புத்திக் கூர்மை கொண்டவன். ஆனால் ஆங்கிலத்தில் தெளிவுபடச் சொல்ல மாட்டான்.

"வர்ணம் அடிக்கப்பட்ட ஒரு காரில் எத்தனை வகையான பிழைகள் இருக்கு என்று உனக்குத் தெரியுமா?" நையாண்டித்தனத்துடன் கேட்டாள் சியாங் சை.

"ஒரு காரில் வரக்கூடிய வர்ணம் சார்ந்த அத்தனை பிழைகளையும் மவுசில் பதிவு செய்வோம். பல நூற்றுக்கணக்கான நுண்ணிய கமராக்களைக் கொண்ட அந்த மவுஸ், தவறுகளை தன்னிடமுள்ள பதிவுகளுடன் ஒப்பிட்டுத் தரவுகளைத் தரும்" விலாவாரியாகச் சொன்னான் ஹாவ். "ஆமாம்... கண் தெரியாத கபோதிகளும் இதனைப் பாவிக்கலாம்" ஹாவிற்கு கண்பார்வை கொஞ்சம் மந்தம் என்பதைப் புட்டுக் காட்டிச் சிரித்தாள்துஜி.

"நமது புலன்கள் வேறு திசை சென்றாலும் மவுஸ் தவறுகளைத் துல்லியமாகக் கண்டு பிடித்துவிடும்" கண்டுபிடிப்பிற்கு மீண்டும் வலுச் சேர்த்தான் ஹாவ்.

"நாங்கள் ரொப்கோற்றில் வேலை செய்கின்றோம். நீ என்னவென்றால் அடுத்த பகுதியில் உள்ளவர்களுக்கு திட்டம் ஒன்றை உருவாக்கிக் கொடுக்கின்றாய்" மறுதலித்தாள் சியாங் சை. ஹாவ் தன் பூஞ்சைக் கண்களால் அவளை உற்றுப் பார்த்தான்.

நான் ஒன்றும் பேசாமல் மௌனமாக இருந்தேன். என்னுள் வேறு ஒரு திட்டம் உருவாகிக் கொண்டிருந்தது.

ஹாவின் அலுப்புத் தாங்காத துஜி, அவனின் இடுப்பின் கீழ் தொட்டுக் காட்டி "கடைசியில் நீ இந்த மவுசைத்தான் அவிட்டு விடப் போகின்றாய்" என்றாள். சியாங் சை வெட்கம் தாளாமல் கண்களைப் பொத்தியபடியே குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாள்.

அதன் பின்னர் வேறு திட்டங்கள் பற்றியும் ஆராய்ந்தோம்.

போட்டி நடைபெறுவதற்கு முன்பு அதன் நகல் வடிவத்தை போட்டி அமைப்பாளர்களிடம் சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. அமைப்பாளர்களில் ஒருவராக எமது பகுதி மனேஜர் கார்லோஸ் இருந்தார். கார்லோஸ் குள்ளமான மனிதர். குறும் தாடி வைத்திருப்பார். பார்ப்பதற்கு ஒரு விஞ்ஞானி போல இருப்பார். மிகவும் சாந்தமானவர். ஆனால் குரல் மாத்திரம் அவரது தோற்றத்திற்குச் சம்பந்தமற்று கணீரென்று இருக்கும். எங்களுக்கு நடக்கும் தொடர்பாடல் கூட்டங்களில், சிலவேளைகளில் வேலை செய்யும் ஊழியர்களில் ஒருவராகக் கலந்து நிற்பார். திடீரென அவரைக் காணும்போது திகைத்து விடுவோம். அவரின் இப்படிப்பட்ட திடீர் விளையாட்டினால் கூட்டம் நடைபெறும் போதெல்லாம் மிகவும் அவதானமாக இருப்போம். தேவையில்லாத எவற்றையுமே எங்களுக்குள் அப்பொழுது கதைப்பதில்லை.

ஹாவ் வரிக்கு வரி மிகவும் மகிழ்ச்சியாக தனது திட்டத்தை விவரித்தான். அதை மிகவும் உன்னிப்பாக கேட்டறிந்த கார்லோஸ்,

"இந்தத் திட்டத்திற்கு நிறையச் செலவாகும். வேறு ஒன்றைப்பற்றி யோசியுங்கள்" என்று திடமாக மறுத்துவிட்டார்.

அதன் பின்னர் எனது திட்டத்தை அவர்களிடம் சொன்னேன். நீண்ட கலந்துரையாடலின் பின்னர் எனது திட்டத்திற்கு ஆதரவு தந்தார்கள்."ஓடும் கொன்வேயரில் வைத்துக் காரின் உதிரிப்பாகங்களுக்கு, மிகக் குறைவான செலவில் பெயின்ற் அடிக்கும் முறை."

பெயின்ற் ஷொப்பில்காரின் வெற்றுடலுக்கு பிறைமர், ரொப் கோற் என்ற இரண்டுவிதமான வர்ணங்கள் அடிக்கப்படுகின்றன.

சந்திரமண்டலத்திற்குப் போனவர்களை விஞ்சிய ஆடை அணிகலங்களுடன், அவர்களைப் பழிக்கும் நடையில்ஸ்ப்பிறே பெயின்ரேர்ஸ் தோற்றமளிப்பார்கள். முகமூடி அணிந்து, ஒக்சிசன் உயிர்ப்பேற்ற அவர்கள்தான் இங்கே ஹீரோக்கள்.

ஒரு காரிலிருந்து அகற்றப்படக்கூடிய பொனற், ஃபென்டர், கதவுகள், பூற் லிட் என்பவற்றிற்கும் றூவ் மற்றும் உட்பாகங்களுக்கும் வர்ணம் அடிக்கப்பட வேண்டும்.

ஒரு கண்ணாடி அறை. அறையின் உட்புற சுவரோரமாக நீளப்பாட்டிற்கு,மூன்று மூன்று ரோபோக்கள் என மொத்தம் ஆறு ரோபோக்கள். நடுவே கொன்வேயரினால் கார்கள் இழுத்து வரப்படும்.

ரோபோக்களால் அடைய முடியாத காரின் உட்பாகங்களை, வரிசைக்கு இரண்டு பேர்களாக மொத்தம் நான்கு ஸ்பிறே பெயின்ரேஸ் கவனித்துக் கொள்வார்கள். ஆக மொத்தம் பத்துப் பேர்கள் இந்தக் கண்ணாடி அறைக்குள் வேலை செய்கின்றார்கள். இங்கு ரோபோக்களின் ஆதிக்கம் அதிகம். அவைகள் முரண்டு பண்ணினால் தொழில் நாறிப் போய்விடும்.

காரிலிருந்து அகற்றப்படக்கூடிய பகுதிகளில் ஏதாவது பழுது வந்தால், அவற்றைத் திருத்தி மீண்டும் வர்ணம் அடிப்பார்கள். அகற்றப்பட முடியாத றூவ் போன்ற பகுதிகளில் பாரதூரமான பழுதுகள் வந்தால் அந்தக்காரை ஸ்கிறப் பொடிக்கு அனுப்பி விடுவோம்.

இதுவரை காலமும் இருந்துவந்த நடைமுறை இதுதான்--- ஒரு கதவிற்கு வர்ணம் அடிக்கவேண்டி இருந்தாலும், அதனைக் காரினில் பூட்டி முழுக்காரிற்குமே வர்ணம் அடித்தார்கள். இதனால் பெருமளவு வர்ணம் வீணாகியது.

நாங்கள் முதலில் 'கவசாக்கி' ரோபோவில் உள்ள புரோகிறாமைத் திருடினோம். அதுவே எமது செயற்திட்டத்தின் உயிர் நாடி. அந்தப் புறோகிறாமில் முற்றுமுழுதாக என்ன எழுதப்பட்டுள்ளது என்பதை அறிய போதுமான அறிவு இல்லாவிடினும், வுசயைட ரூ நசசழச மூலம் எமக்கு வேண்டியதைச் செய்யலாம் என்று நினைத்தோம்.

பிங் பொங் ஹாவ் தவிர ஏனைய மூன்று பேருக்கும் கொம்பியூட்டர் அறிவு சுத்த சூனியம். அவர்கள் அணில் ஏறவிட்ட நாயைப் போல எங்களின் வாயைப் பார்த்தபடி இருந்தார்கள்.

நாலைந்து நாட்கள் இரவு பகல் முயன்று புறோகிராமை மாற்றி எழுதினேன்.ஹாவ் அதைச் சரி பிழை பார்த்தான்.

செயன்முறையில் பரீட்சிக்க நாங்கள் வேலை முடிந்த பின்னரும் உழைக்க வேண்டி இருந்தது. தினமும் ஒருமணி நேரம் எல்லோரும் வேலை முடித்துப் போனபின்னர் பரீட்சித்துப் பார்த்தோம். முதல்நாள் வெள்ளோட்டத்தில் கார் நகரவேயில்லை. எல்லாக் கார்களும் வரிசையாய் அணிவகுத்து வந்து கண்ணாடிறூமிற்கு முன் கைகட்டி நின்றன.

"கமோன்... கமோன்" என்று துஜி சத்தமிட்டாள்.

"ஏய்... நீ எந்த பாஷையில் கமோன் சொல்கின்றாய்?" என்று சீனத்துப்பெண் துஜியிடம் கேட்டாள். வியட்நாம் பாஷையில் 'கமோன்' என்றால் 'நன்றி' என்று பொருள்படும்.அன்றைய தினம் அவை நகரவே மாட்டோம் என்று அடம் பிடித்தன.

மறுநாள் சில திருத்தங்கள் செய்த பின்னர், கார்கள் நகர்ந்தன. ஆனால் ரோபோக்கள் அசைய மறுத்தன. தமக்கு முன்னாலே கார்கள் போகின்றனவே என்ற பிரக்ஞை அற்று மொக்கையாக நின்றன. பலமணி நேரம் போராடி ரோபோக்களை அசைய வைத்தோம். இருப்பினும் அவை ஊமைப்படம் காட்டி உடற்பயிற்சி செய்தனவேயன்றி துளி பெயின்றும் அடிக்கவில்லை.

போட்டி நடைபெறும் நாள் நெருங்கிக் கொண்டிருந்தது.

"இந்தப் புறொயெக்றைக் கைவிட்டு இன்னொன்றை ஆரம்பிப்போமா?" சியாங் சை கேட்டாள். பாம்பு படமெடுத்து 'பென்சீன்' வளையத்தைக் கேர்க்குளேயிற்குக் காட்டிக் கொடுத்தது போல ஒரு அதிசயத்திற்காகக் காத்துக் கிடந்தோம். கனவு காண்பதற்குக் கண்ணை மூடினால், பாம்பும் வரவில்லை கீரியும் வரவில்லை. சியாங் சை என் கண் முன்னே வந்து நின்றாள்.

கொம்பியூட்டரில் இருந்த அடிப்படை அறிவைக் கொண்டு, பல நாட்கள் உழைப்பின் பின்னர் எல்லாம் சரியாக வந்தது.

போட்டி கொன்வென்சன் சென்ரறில் மாலை மூன்று மணிக்கு ஆரம்பமானது.நாங்கள் மூன்றாவது குழுவாகப் பங்குபற்றினோம். எல்லாப்பகுதி மனேஜர்களும் அங்கு வந்திருந்தார்கள். அவர்களின் மத்தியில் சில ஜப்பானியர்களும் இருந்தார்கள். நாங்கள் புறயெக்ரர் போட்டுக் காட்டி விளக்கம் கொடுத்தோம். ஒவ்வொரு குழுவினருக்கும் 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. சிலர் உதிரிப்பாகங்களைத் தூக்கிக் கொண்டு வேடுவர்கள் போல வரிசையில் நின்றார்கள். சிலர் நடித்துக் காட்டினார்கள்.இவர்கள் மத்தியில் எம்முடையது எடுபடுமா என்பது எங்கள் சந்தேகம்.

எங்களுடைய பிறசென்ரேசனைப் பலரும் உன்னிப்பாகக் கவனித்தார்கள். ஹாவ் பயக் கெடுதியில் 'லேடீஸ் அண்ட் ஜென்ரில்மன்' என்ற வார்த்தைகளை பல தடவைகள் சொல்லி விட்டான். போட்டி முடிவடைந்த பின்னர் நடுவர்கள் எங்களைச் சந்திக்க விரும்புவதாகச் சொன்னார்கள்.முதல் பரிசு எங்களுக்குத்தான் என்று அப்போதே புரிந்து கொண்டோம்.

இறுதியில் சாப்பாடு தந்தார்கள். ஒவ்வொரு குழுக்களாக நிற்க வைத்து புகைப்படம் எடுத்தார்கள்.

"நான் உங்கள் செயல்திட்டத்தை ஜப்பானிற்கு எமது தலைமையகத்திற்கு அனுப்பலாமா?" நடுவர்களுக்குப் பொறுப்பான ஜமசான் என்ற ஜப்பானியர் கேட்டார்.

"இது எல்லாம் ஒரு கேள்வியா?" என்று ஹாவ், துஜியின் காதிற்குள் சொல்லிவிட்டு திரும்பி நின்று சிரித்தான். அதை அவதானித்த யமசான், "லேடீஸ் அண்ட் ஜென்ரில்மன்... நீர் என்ன நினைக்கின்றீர்?" என்று ஹாவைப் பார்த்துச் சிரித்தபடியே கேட்டார். எல்லாரும் ஒருமித்த குரலில் 'ஆம்' என்றோம்.

அதன்பின்னர் போட்டியின் பரிசுகள் பற்றித் தினமும் ஆராய்ந்தோம்.

முதல் பரிசு – ஒரு வாரம் ஜப்பான் சென்றுவருவதற்கான மொத்தச் செலவு (விமானச் செலவு, மற்றும் தங்குமிட வசதிகள் உணவு உட்பட)

இரண்டாம் பரிசு – 50 டொலருக்கான பணிங்ஸ் வவுச்சர்

மூன்றாம் பரிசு – சான்றிதழ்

வீட்டிற்குப் போய் அன்றைய நடப்புகளை மனைவிக்குச் சொன்னேன்.

"இலங்கையில் இருந்து ஜப்பான் போவது பெருமையாக இருக்கலாம். ஆனால் அவுஸ்திரேலியாவில் இருந்துகொண்டு ஜப்பான் போவது பெருமைக்குரிய விஷயமா? ஏன் அமெரிக்காவிற்குத் தரமாட்டினமோ?"என்று கேள்வி எழுப்பினாள். உண்மைதான்.

ஒருகாலத்தில்---நாற்பது வருடங்களுக்கு முன்னர்--- எனது மாமா ஸ்கொலஷிப்பில் இலண்டன் போனபோது அது ஒரு செய்தியாக வீரகேசரியில் கொட்டை எழுத்தில் வந்து பெரும் பரபரப்பூட்டியது.

திடீரென்று ஒரு யோசனை வர பாஸ்போட்டை எடுத்துப் பார்த்தேன். அது காலாவதியாகுவதற்கு இன்னும் இரண்டு மாதங்கள் இருந்தன. உடனே அதனைப் புதிப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டேன். 250 டொலர்கள் செலவாகியது. முடிவுகள் வந்தபோது பெரும் ஏமாற்றத்திற்கு உள்ளானோம்.

வெறும் சான்றிதழ் பரிசான மூன்றாவது இடமே எங்களுக்குக் கிடைத்தது. இந்த ஏமாற்றம் எங்களுக்கு மாத்திரமல்ல, முழுப் பெயின்ற் ஷொப்பிற்குமே உரித்தானது. அன்று முழுவதும் அதைப் பற்றியே கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

அதன் பின்னர் ஜெனரல் போர்மன் வந்து எங்களுக்கு ஆறுதல் சொன்னார். முதலாவது இடத்திற்கு வராததன் காரணத்தை மனேஜரிடம் அறிந்து வருவதாகச் சொல்லிச் சென்றார்.

அவர் சொன்ன காரணம் இதுதான்–

நாம் எடுத்துக் கொண்ட செயற்திட்டம் எமது தகுதிக்கு அப்பாற்பட்டது. அதில் உள்ள புறோகிறாம், கை தேர்ந்த புறோகிறாம் விற்பன்னர்களைக் கொண்டு அது தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆக மொத்தம் நாங்கள் அந்தச் செயற்திட்டத்தைத் தயாரிக்கவில்லை என்பதுதான் நடுவர்களின் தீர்மானம் என கார்லோஸ் சொன்னார்.

●

ஆனால் இன்று 'பெயின்ற் அண்ட் பேப்பரில்' இருந்த அந்தச் செய்தி? எமது அடிப்படை அறிவை அவர்கள் திருடிவிட்டார்கள்!

●

இந்த விடயம் மிக முக்கியமானதாகக் கருதப்பட்டதால் பெரிதுபடுத்தப்பட்டது. தொழிற்சங்கம் (யூனியன்) இதில் தலையிட்டு சமரசம் செய்து வைக்க முனைந்தது. அதன் பிரகாரம் கார்லோஸ் எங்கள் ஐவருடனும் கதைக்க விரும்புவதாக தெரிவித்தார். நாங்கள் அவரின் கதவைத் தட்டினோம்.

"உள்ளே வாருங்கள்" அவரது கம்பீரமான குரல் உள்ளிருந்து கேட்டது. மேசைமீது ஃபைல்கள் கன்னா பின்னாவென்று கிழறிவிடப்பட்டுக் கிடந்தன. கொம்பியூட்டருக்கு முன்னால் வேர்த்து விறுவிறுக்க இருந்தார்அவர். விசைப்பலகைக்கு அருகே பல மவுஸ்கள் வரிசையாக இருந்தன.

"விசர் மனிசன்... ஒரு கொம்பியூட்டருக்கு எத்தினை மவுஸ்கள் வைத்திருக்கின்றார் பார்..." நான் ஹாவின் கால்களைச் சுரண்டினேன்.

"நீங்கள் குவாலிற்றி சேர்க்கிளுக்காகச் செய்ததும், ஜப்பானியர்களின் இந்தக் கண்டுபிடிப்பும் எதேச்சையாக நிகழ்ந்தவை. இது ஜப்பானில் பல பொறியியலாளர்கள் விஞ்ஞானிகள் புறோகிறாமேர்ஸ் சேர்ந்து பல வருடங்களாகச் செய்த திட்டம். உங்கள் புரயெற் ஆரம்ப படிநிலைகளை மாத்திரம் கொண்டது. இருப்பினும் உங்கள் முயற்சியைப் பாராட்டி ஒவ்வொருவருக்கும் தலா 100 டொலர்களை கொடுக்கும்படி ஜமசான் எனக்குப் பணித்துள்ளார்" சொல்லியபடியே ஜமசானின் கடிதத்தை எடுத்துக் காட்டுவதற்காக இருக்கையைவிட்டு எழுந்தார். தவறுதலாக அவரது கை மேசையில் இருந்த மவுஸ் ஒன்றைத் தட்டிவிட்டது. நிலத்தில் விழுந்து வெடித்த மவுசிற்குள்லிருந்து முத்துப்பரல்கள் போல சில சிதறி ஓடின. துஜி அதைக் குனிந்து எடுக்கப் போனாள்.

"அப்படியே இருக்கட்டும் அது. பிறகு நான் பார்த்துக் கொள்கின்றேன்" முகம் வெளிறியபடி கோபமானர் கார்லோஸ். மேசை லாச்சிக்குள்ளிருந்து ஒரு கடிததத்தை எடுத்த அவர் எங்களின் பார்வைக்குத் தந்தார்.

"இத்தோடு இந்த விடயத்தை மறந்துவிடுங்கள். உங்கள் பணத்திற்கான வவுச்சர் அடுத்த கிழமை வந்துவிடும். அடுத்த தடவை புரயெக்ற் செய்யும்போது உங்கள் தகுதிக்குள் நின்று கொண்டு செய்யப்பாருங்கள். நீங்கள் சாதாரண ஊழியர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்" என்றார் கார்லோஸ். ஆனால் ஹாவின் பார்வை அந்த விழுந்து வெடித்த மவுஸ் மீது வெறித்துக் கிடந்தது. அது அவனுக்கு ஆயிரம் கதைகளைச் சொல்லின. அதற்குள்ளிருந்து ஓடிச்சிதறிய நுண்ணிய கமராக்கள் அவனின் கனவுகள். அவன் நிமிர்ந்து கார்லோசைப் பார்த்தான். 'எதையுமே விட்டுவிட முடியாது' என்பது போல. அப்போது மேசை மீதிருந்த ஏனைய மவுஸ்களை மேசைலாச்சிக்குள் ஒழித்துக் கொண்டிருந்தார் கார்லோஸ். ●

ஈழநாடு



# அழிவுகளில் உதித்த ஆபிரிக்க தேசம்:

## ஐ.நா அங்கீகார பொது வாக்கெடுப்பினால் புதிய தேசமாக மலர்ந்த தென் சூடான்!

- ஐங்கரன் விக்கினேஸ்வரா

எந்த விடுதலைப் போரும் இறுதியில் வெல்லும் என்பதை மீண்டுமொருமுறை மெய்ப்பித்திருக்கிறது. ஆப்பிரிக்கக் கண்டத்தில் 'தென் சூடான்' என்றொரு நாடு உலக வரைபடத்தில் புதிதாக உருவாகியிருப்பது இதற்கு சான்றாகும்.

உலகின் 193வது தேசமாக தெற்கு சூடான் பிறப்பெடுத்து உள்ளமை, விடுதலைக்காக போராடிய ஒரு இனத்தின் வேட்கையை அவ்வளவு சாதாரணமாக அணைத்துவிட முடியாது என்பதை எத்தனையோ அழிவுகளையும் சதிகளையும் சந்தித்து, தெற்கு சூடான் உருவாகியுள்ளது.




பல்லாண்டுகளாக வடக்கு - தெற்காக பிளவுண்டு உள்நாட்டு போராக வெடித்து, விடுதலைப் போராக முடிவுக்கு வந்தபோது 1.5 மில்லியன் மக்கள் தம் உயிர்களை இழந்திருந்தனர். ஆபிரிக்க கண்டத்தில் அளவில் பெரியதும் - கனிம வளம் கொண்டதுமான நாடு சூடான் ஆகும்.

உலகின் இன்றைய வல்லாதிக்க அரசுகள் தங்கள் சந்தை, சொந்த நலனுக்காகக் கூட்டு சேர்ந்து உலகை மறு பங்கீடு செய்து வருகின்றன. இனிமேல் தேசிய இனப் போராட்டங்களோ, அதன்வழி நின்று விடுதலை பெறுவதோ சாத்தியமில்லையென்று பலர் வாதிடும் வேளையில் உலகின் புதிய தேசமாக தெற்கு சூடான் பிறப்பெடுத்து உள்ளது.

**உலகின் 193 வது தேசம் : தென்சூடான்**

சூடானை இரண்டாக பிரிக்க மக்கள் வாக்கெடுப்பு நடத்த வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது. 2005ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட அமைதி உடன்பாடு குருதி தோய்ந்த இந்த உள்நாட்டுபோரை முடிவுக்கு கொணர்ந்தது.

பல்வேறு நெருக்கடிகள் தோன்றியபோதும் அமைதி உடன்பாடு முறிபடாமல் பேணபட்டதால் 2011-ம் ஆண்டு ஜனவரி மாதம் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அதில் மக்கள் ஆணையும் பெறப்பட்டது. அதன்படி 2011 யூலை 9ம் நாள் 'தென் சூடான்' என்னும் புதிய தேசம் பிறப்பெடுத்தது.

அதனை வட சூடானும் ஏற்று ஒப்புதல் வழங்கியுள்ளது. தென் சூடான்' தலைநகரம் ஜூபா - துரடிய எழுச்சி கொண்டது.

**அடக்குமுறைக்கு எதிரான போராட்டம்:**

தென் சூடான் அடக்குமுறைக்கு எதிராகப் பல ஆண்டுகள் போராடி வந்துள்ளது. ஆபிரிக்காவின் எண்ணெய் வளமிக்க நாடான சூடானுக்கு 1956 ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்தது. வடக்குத் தங்களைப் புறக்கணிப்பதாக தெற்குவாசிகள் கருதினர்.தெற்கில் ஏற்பட்ட இனக்கலவரத்தைத் தொடர்ந்து உருவான சூடான் மக்கள் விடுதலை இயக்கம் தெற்கு சூடானைத் தனியாகப் பிரித்துத் தனி நாடாக அறிவிக்க வேண்டும் என்று கூறி ஆயுத போராட்டத்தை கையில் எடுத்தது.

அது முதல் தென் சூடானியர்கள் தங்களது சுதந்திரத்துக்கும் இறைமைக்கும் போராடி வந்திருக்கிறார்கள். 2005 ஆண்டில்தான் முழுமையான அமைதி உடன்படிக்கை எழுதப்பட்டது. அதன்படி 2011 இல் நேரடி வாக்கெடுப்பு நடத்தி நாட்டை பிரிப்பது என்று முடிவானது.

2011 ஜனவரி 15 இல் நடந்த வாக்கெடுப்பில் 99 விழுக்காடு மக்கள் தெற்கு சூடான் தனியாகப் பிரிவதற்கு ஆதரவு தெரிவித்தார்கள்.

**20 இலட்சம் மக்கள் கொல்லப்பட்டனர்:**

தென் சூடான் விடுதலைப் போரில் 20 இலட்சம் மக்கள் கொல்லப்பட்டார்கள். பல இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்தார்கள். வடக்கு சூடான் பகுதியில் வசிப்பவர்கள் இஸ்லாம் மதத்தையும் தெற்கு சூடான் பகுதியில் வசிப்பவர்கள் கிறித்துவம் மற்றும் இயற்கை சார்ந்த புராதனக் கடவுள்களைப் பின்பற்றி வருபவர்கள். அராபிய மொழியே வடக்கு சூடானில் பெரும்பான்மை மக்கள் பேசும் மொழி.

ஆங்கிலம், மற்றும் பழமைவாத அரபு உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட இனக்குழு மொழிகளே தெற்கு சூடானின் பேச்சு மொழி. பிரித்தானியர்களின் ஆட்சியில் வடக்கு, தெற்கு பகுதிகள் தனித் தனி ஆட்சியாகவே நடத்தப்பட்டன.


1956ஆம் ஆண்டு பிரித்தானியர்கள் வடக்கையும் தெற்கையும் ஒரே நாடாக இணைத்து வடக்கு சூடானில் உள்ள கார்டூமை தலைநகரமாக அறிவித்து நாட்டை விட்டு வெளியேறினர்.

**முதல் உள்நாட்டுப் போர் (1955 - 1972)**

1956இல் பிரித்தானியர் வடக்கு சூடானியரிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைப்பதற்கு முன்பாகவே, தெற்கு சூடான் மக்கள் அதிகாரத்தைப் பரவலாக்கக் கோரி பல்வேறு போராட்டங்களை நடத்தி வந்தனர்.

வேலை வாய்ப்பு முழுவதையும் வட சூடானியரே அபகரித்துக் கொண்டனர். பெரிய தொழிற்சாலைகள் அனைத்தும் வடக்குப் பகுதியில்தான் நிறுவப்பட்டது. 80 வீத எண்ணெய் வளங்களையுடைய பகுதிகள் தெற்குப் பகுதியில் இருந்த போதிலும், கச்சா எண்ணெயைத் துப்பரவு செய்யும் தொழிற்சாலைகள் வடக்கில் தான் உருவாக்கப்பட்டது. ஒட்டுமொத்தத்தில் வடக்கு மட்டுமே உயர்வாய் வாழ்ந்தது. தெற்கோ வேகமாக தாழ்ந்தது.

1964இல் சூடா னில் இராணுவ ஆட்சி முடிவுக்கு வந்தபின் பாராளுமன்றம் செயற்படத் தொடங்கியது. தெற்கு சூடான் மக்களின் உணர்வுகளை ஏற்றுக் கொள்வதாகவும், கூடுதல் அதிகாரம் தருவதாகவும் அனைத்துக் கட்சி மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.



சூடானில் நடைபெற்ற உள்நாட்டுக் கலகத்தைப் பயன்படுத்திக் கொண்டு 1969 ஆம் ஆண்டு மீண்டும் ஒரு இராணுவப் புரட்சி நடைபெற்றது. இராணுவத் தளபதி கேணல் நிமெய்ரி ஆட்சியைக் கைப்பற்றி, மதச்சார்பற்ற சோசலிச அரசாகச் சூடானைப் பிரகடனப் படுத்தினார். தெற்கு சூடானுக்குத் தன்னாட்சி அதிகாரம் வழங்குவதாகவும் அறிவிப்புச் செய்தார்.

**இரண்டாம் உள்நாட்டுப் போர் (1983 - 2005)**

நிமெய்ரியின் ஆட்சிக் காலத்தில் 1983இல் இஸ்லாமியர்களால் பின்பற்றப்படும் 'சரியத்' சட்டம் நாடு முழுவதும் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டம் தெற்குப் பகுதி மக்களுக்குப் பொருந்தாது என்று வாக்குறுதி அளிக்கப்பட்டாலும் அது தம் மீது செலுத்தப் படும் மற்றொரு ஒடுக்குமுறையாகவே தென் சூடான் மக்கள் கருதினர். நாடு முழுவதும் கலவரங்கள் வெடித்தன.

1985ஆம் ஆண்டு பலத்த எதிர்ப்பின் காரணமாக நிமெய்ரி பதவி விலகினார். இதற்கிடையில் இசுலாமிய அடிப்படைவாதிகள் ஒன்று சேர்ந்து 'தேசிய இஸ்லாமிய முன்னணி'யைக் கட்டமைத்தனர். சூடான் நாட்டை இஸ்லாமியத் தேசமாக மாற்றுவதே இவ்வமைப்பின் நோக்கமாகும்.

1989ஆம் ஆண்டில் இராணுவத்தின் துணையோடு ஆட்சியைக் கைப்பற்றினர். அப்போது நடைபெற்ற ஈரானுக்கும், எகிப்திற்குமிடையிலான 'பனிப் போரில்' ஈரானிய அரசு 'இஸ்லாமிய சூடான்' அரசிற்கு முழு ஆதரவைத் தந்தது.

**சூடான் மக்கள் விடுதலை இயக்கம் - 1983**

தென் சூடான் நாடானது 'இஸ்லாமியமாகுதல்' என்கிற மோசமான நிலைக்குத் தள்ளப்பட்ட சூழலில், 1983ஆம் ஆண்டு மருத்துவர் ஜான்கரஸ் டிமபாயர் தலைமையில் சூடான் மக்கள் விடுதலை இயக்கம் உருவானது.

அதன் இராணுவப் பிரிவானது இஸ்லாமிய அரசை தூக்கியெறிவதற்காக, தெற்கு சூடானின் பல்வேறு இனக் குழுக்களை ஒன்று சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டது.

1989இல் இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பு மூலம் ஒமர் அசன் அல்பசீர் அதிபர் ஆனார். இவர் ஆட்சிக் காலத்தில் சூடான் மக்களின் விடுதலைப் போராட்டம் தீவிரமடைந்தது.

**நைரோபி உடன்படிக்கை - 2005**

கடந்த 50 ஆண்டுகளாக நடைபெற்று வரும் உள் நாட்டுப் போரில் பல இலட்சம் மக்கள் கொல்லப் படுவதைக் கண்டு அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் கவலைப்படுவதைப் போல நாடகமாடின. இருப்பினும், சூடான் நாட்டின் மீது பல்வேறு அழுத்தங்களைக் கொடுக்கவும் இந்நாடுகள் தவறவில்லை.

2005ஆம் ஆண்டு மே 9ஆம் நாள் கென்யா நாட்டின் தலைநகர் நைரோபியில் சூடான் தேசியக் காங்கிரசுக் கட்சி அரசுக்கும், சூடான் மக்கள் விடுதலை இயக்கத்திற்குமிடையில் உடன்பாடு கையொப்பமானது.

2011 சனவரி 9ஆம் நாளன்று தெற்கு சூடான் மக்களிடம் தனி நாடாவதா? என்று கருத்து வாக்கெடுப்பு நடத்தப்படுமென்றும் நைரோபி உடன்பாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

**கருத்துக் கணிப்பு முடிவுகள் - 2011**

2011 யூலை 9ஆம் நாள் அதிகாரபூர்வமாகத் தென் சூடான் நாடு விடுதலை பெறுவதாக அறிவிக்கப் பட்டது. அதே நாளில் ஐ.நா.மன்றத்தில் 193 ஆவது உறுப்பு நாடாக இணைய உள்ளது. கருப்பு, வெண்மை, சிவப்பு, பச்சை, தங்க விண்மீன் உள்ளடங்கிய ஆறு வண்ணக் கொடி பட்டொளி வீசிப் பறக்கிறது.

புதிதாகப் பிறந்துள்ள தெற்கு சூடான் நாட்டின் கிழக்கே எத்தியோப்பியாவும், தெற்கே கென்யாவும், உகண்டாவும், மேற்கே மத்திய ஆப்பிரிக்கக் குடியரசும் வடக்கே - சூடான் நாடும் எல்லையாக அமைந்துள்ளன. அதன் தலைநகராக ஜூபா அமைந்துள்ளது. 2011 இல் புதிய அதிபராகச் சல் வாகீர் மாயார்திக் பதவியேற்றார்.

**அமெரிக்காவின் ஆதரவு:**

தென் சூடானின் விடுதலைப் போராட்டத்தின் போது அமெரிக்காவில் உள்ள பலர் ஆதரவு வழங்கினார்கள். பன்னாட்டு மீட்பு குழு மருத்துவம் மற்றும் தூயநீர் போன்ற அவசர உதவிகளை வழங்கியது.

தென் சூடான் குடியரசு ஆபிரிக்காவில் 54 ஆவது நாடாகவும் ஐநா அவையில் அதன் 193 ஆவது உறுப்பினராகவும் மலர்ந்தது.

ஆயினும் போர் தணிந்த வட சூடானில் அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் சீனா தங்களுக்குள் எண்ணெய் வளத்துக்காக போட்டி போடுகின்றன. ஆயினும் மேற்கு நாடுகளை நம்பாத வட சூடான் அரசு தனது நாட்டின் எண்ணெய் வளத்தையும் அது தொடர்பான உரிமைகளையும் சீனாவுக்குக் கொடுத்துள்ளது. பெரும் உற்சாகத்தோடு ஆபிரிக்க நாட்டில் அந்த எண்ணெய் வளத்தை சீனா சுரண்டிக் கொண்டிருக்கிறதும் உண்மையே.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

1) C    2) E    3) F

24. மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி நாற்காலிகள் மூன்று உள்ளன. அங்கு காணப்படும் கால்களின் எண்ணிக்கை யாது?
1) 16    2) 15    3) 13

25. சத்தி, நிஷான், விஜய், அருண் ஆகிய நால்வரில் விஜயிலும் உயரம் குறைந்தோர் இருவர் மட்டுமே உள்ளனர். நிஷானிலும் உயரம் குறைந்தோர் ஒருவர் மட்டும் உள்ளார். சத்தி மாத்திரம் நிஷானிலும் உயரம் குறைந்தவர் ஆவார். நால்வரில் உயரம் கூடியவர் யார்?
1) விஜய்    2) நிஷான்    3) அருண்


26. ஒரு வரிசையில் கமலா முன்னாலிருந்து 7 ஆவதாகவும் விமலா பின்னாலிருந்து 4 ஆவதாகவும் உள்ளனர். அவர்கள் இருவருக்குமிடையில் இரண்டு பேர் உள்ளனர். அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?
1) 13    2) 14    3) 15

27. 
உருவில் உள்ள வடிவத்தைப் புள்ளிக்கோட்டின் வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம்
1) சதுரம்    2) செவ்வகம்    3) அரியம்

28. மகனை விட அப்பா உயரம் கூடியவர் என்பது
1) எப்பொழுதும் உண்மையானது
2) சில சமயம் உண்மையானது
3) எப்பொழுதும் பொய்யானது

29.  இச் சிறிய முக்கோணத்தின் சுற்றளவு 9cm எனின்  இம்முக்கோணியின் சுற்றளவு யாது?
1) 12cm    2) 18cm    3) 36cm

30. படகு ஒன்றில் 30 பேர் பயணிக்கலாம் எனின் 100 பேர் பயணிப்பதற்கு எத்தனை படகுகள் தேவை?
1) 3    2) 2    3) 4


31. 

வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் யாது?
1) 14    2) 10    3) 12

32. அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.


| பூக்கள் | பழங்கள் | D |
|---|---|---|
| A | மாம்பழம் | கத்தரி |
| மல்லிகை | அன்னாசி | வெண்டி |
| செவ்வந்தி | C | தக்காளி |

அட்டவணையில் ACD ஆகியவற்றுக்குப் பொருத்தமான விடைகள் முறையே
1) நித்திய கல்யாணி, பலாப்பழம், காய்கறிகள்
2) முருங்கை, காய்கறிகள், வெண்டி
3) கீரை, பருப்பு, சோயா

33. 


நித்திய கல்யாணிப் பூவைக் குறிக்கும் எழுத்து
1) அ    2) ஆ    3) இ

❖ 34, 35 ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருவைக் கொண்டு விடையளிக்குக.

34. 

பிள்ளை காலையில் தான் நிற்கும் இடத்திலிருந்து பாடசாலை நோக்கிச் செல்லும்போது எத்தனை தடவை தெற்கு பக்கமாகச் செல்ல வேண்டும்?
1) 2 தடவைகள்    2) 3 தடவைகள்    3) 4 தடவைகள்

35. இப் பிள்ளை காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது இவரது நிழல் எத்தனை தடவை முன்னால் விழுந்தது?
1) [illegible] தடவைகள்    2) 5 தடவைகள்    3) 4 தடவைகள்

36. 
இவ்வுருவில் $\frac{3}{8}$ நிறம் தீட்ட வேண்டும் எனின் மேலும் எத்தனை துண்டங்களுக்கு நிறம் தீட்ட வேண்டும்?
1) 2    2) 3    3) 4

## விடைகள்

| | | |
|---|---|---|
| 24. 2 | 28. 2 | 32. 1 |
| 25. 3 | 29. 2 | 33. 1 |
| 26. 1 | 30. 3 | 34. 2 |
| 27. 2 | 31. 1 | 35. 1 |

---

கல்வி tv CHANNEL-1

**13.11.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

கல்வி tv CHANNEL - 2

**13.11.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

மாலி

# கலாஷேத்ரா பாணி!

‘சதிர்’ என்று, தேவதாசிகளால் ஆடப்பட்டுவந்த ஆடல் வடிவம், பரதநாட்டியமாக இன்று உலகம் முழுவதும் ஓர் அந்தஸ்தின் சின்னமாகவும் ஆளுமை பெறுகிறது. இந்த வரலாற்றின் நாயகி ருக்மிணி அருண்டேல். சரபோஜி மன்னர் காலத்தில் (1777 - 1832) தஞ்சை நால்வர்கள் வகுத்த அதே பத்ததியிலும் (அலாரிப்பு, ஜதிஸ்வரம் ..... தில்லானா), மரபார்ந்த பந்தணைநல்லூர் பாணியிலும், நாம் பார்க்கும் இக் காலத்து பரதநாட்டிய அரங்க அமைப்பை ருக்மிணி அருண்டேல் நிறுவினார். நால்வகை அபிநயங்களா கின்ற ஆகார்யம் (உடை, அணிகள்), வாசிகம் (பாடற் பொருள்), ஆங்கிகம் (கை முத்திரைகள், கண், புருவ அசைவுகள்) என்பவற்றில் ஏற்றதான மாற்றங்களை அமைவாகவே மேற்கொண்டார். (நான்காவதான சாத்வீக அபிநயம், ஆடுபவர் தனது உடல் மெய்ப்பாடு களால் உணர்த்துவது.)

திருவாளபுத்தூர் கல்யாணியின் புதல்வியான ஜீவரத்தினம் என்ற தாசிகுலப் பெண்ணின் நடனத்தைப் பார்த்ததில் ஏற்பட்ட ஆர்வத்தில், வைதீக பிராமண குலப் பெண்ணான ருக்மிணி தேவி, அந் நடனத்தில் இத்தகைய மாற்றங்களுடன், தன்னுடைய 31ஆவது வயதில் 1935இல், தன்னுடைய அரங்கேற்றத்தை நிகழ்த்தினார். அடுத்த ஆண்டு கலாஷேத்ரா நிறுவனத்தை அவரின் இக் கனவுகளுடன் ஆரம்பித்தார். மிகுந்த நுணுக்கமும் அழுத்தமுமான பந்தணைநல்லூர் பாணியில், கூடவே கலாக்ஷேத்ரத்துக்கான ஓர் அடையாளத்தை ருக்மிணி



அருண்டேல் காண்பித்தார். அது கலாஷேத்ரா பாணி என்றாகிறது.

அண்மையில், ‘கோவிட்’ முடக்கத்துக்குப் பின்னர் லண்டனில் பார்த்த ஒரு பரதநாட்டிய அரங்கேற்றம், மனதுக்கு நிறைவாயிருந்ததுடன், இப்படிப் பல நினைவுகளையும் மீட்ட வைத்தது. ஆடல், பாட்டு-நட்டுவாங்கம், பக்கவாத்தியங்கள், உடை-ஒப்பனை என்று அனைத்திலும் ஓர் ஈர்ப்பை ஏற்படுத்தி, லயிப்பூட்டவைக்கின்ற சில அரங்கேற்றங்களைப் பார்க்கும் நிலை, லண்டனில் எப்போதோ ஏற்பட்டுவிட்டது. ஆனால் இந்த அளவுகோல், பரதநாட்டியத்தின் தற்கால பரிமாணத்தை அளப்பதில் எத்தகையது என்பது தெரியவில்லை. இதைவிட முக்கியமானது, யாழ்ப்பாணத்தில், பல்கலைக்கழக அந்தஸ்தைப் பெற்றபின்னரான கர்நாடக இசையினதும் பரதநாட்டியத்தினதும் நிலை தொடர்பான ஆய்வு.

ஆக, லண்டனில் பரதநாட்டிய அரங்கேற்றமொன்றுக்கு சென்றால் - குறிப்பாக, அந்த அரங்கேற்றம் இலங்கையர் ஒருவரைக் குருவாகக் கொண்டிருந்தால் - அது என்ன தேவையோ - அது, ‘கலாஷேத்ரா பாணி’ என்று பெரும்பாலும் எப்படியோ அழுத்தமாக குறிப்பிடப்படும் (‘…அந்த வழியில் சொந்தம்’ என்பதுபோல). லண்டனுக்கு அமைவானதான (Compatible) அந்தஸ்துடைய பாணி அதுதான் என்பதாக, அந்த ஆளுமையைப் பெற்றவர்களால் அது எப்படியோ ஆக்கப்பட்டுவிட்டது! எனினும், கலாஷேத்ரா பாணியில் ஓர் அரங்கேற்றம் இது.

நம்முடைய, யாழ்ப்பாணம் என். வீரமணி ஐயரின் உறவுக்காரரான பிரசாந்தி உதயபாபு கலாஷேத்ராவில் நடனம் பயின்றவர். முன்னதாக, சாந்தினி சிவநேசனின் மாணவி. பிரசாந்திதான் அரங்கேற்ற குரு. அருவி ஜெயகாந்தனின் அரங்கேற்றம்.

காரைக்குடி ஆர். கிருஷ்ணமூர்த்தி மிருதங்கம் வாசித்தார். கலாஷேத்ரா பாணியின் ‘லயம்’ காரைக்குடி கிருஷ்ணமூர்த்தி. கலாஷேத்ரா பாணி



**மிகுந்த நுணுக்கமும் அழுத்தமுமான பந்தணைநல்லூர் பாணியில், கலாஷேத்ரத்துக்கான ஓர் அடையாளத்தை ருக்மிணி அருண்டேல் காண்பித்தார்**

என்று ஒன்று அமைவதற்கு ருக்மிணி அருண்டேலுக்கு துணைநின்றவர் இவர். பரதநாட்டியத்துக்கான மிருதங்க வாசிப்பின் பிதாமகர் என்று மதிக்கப்படுபவர்.

எண்பது வயதைக்கடந்துவிட்ட நிலையிலும், இம்மி பிசகாத திட்டமான அழுத்தமும் மிடுக்கும் செறிவுமான அவரது வாசிப்பில் நர்த்தகியுடன், பாட்டு, நட்டுவாங்கமும், கூடவே புல்லாங்குழல், வயலினும் தடத்தில் ஒன்றி, நிகழ்ச்சி முழுமையும் செம்மையும் ரசனையுமாய் மேலிட்டது.

அமைவான முகபாவங்களும், அபிநயச் செழுமையும் வெளிப்பட்டன. சுத்தமான முத்திரைகள்.

எடுத்த எடுப்பிலேயே ‘ஆகா’ எனவைத்த பிச்சையப்பா ஞானவரதனின் (புல்லாங்குழல்) பைரவி ராக எடுப்பு கட்டியமிட்டவிதத்தில், அந்த ராகமாளிகை சப்தத்தில் தன்னை ஸ்திரப்படுத்திக்கொண்ட நர்த்தகி, அவையையும் வசப்படுத்திக்கொண்டார்.

கல்யாணி இராக வர்ணம். லண்டன், ஈலிங் கனக துர்க்கை அம்மன்மீதானது. பிரசாந்தியின் சாகித்தியத் துக்கு காரைக்குடி கிருஷ்ணமூர்த்தி வர்ண அமைப்பு கொடுத்திருந்தார். சொற் செறிவும் பொருட் செறிவு மாக, அழகாயிருந்தது.

ஆனால், ஒரு பத வர்ணம், அது தீர்மானிக்கப்பட்ட கதியில் வார்த்தைகள் மிகும்போது, அந்த வேகத்தில் வார்த்தைகளின் அர்த்தபுஷ்டியான அபிநயத்தை கை அசைவுகளிலோ முக பாவங்களிலோ வெளிப்படுத்துவதில் அது நர்த்தகிக்கு சிரமத்தை ஏற்படுத்தும். அப்படி, அபாரமான வேகத்திறனுடைய ஒருவர் அதனை ஒத்திசைவுடன் ஆடினாலும், சாகித்தியத்துடன் தொடர்புபடுத்திப்பெறும் அபிநய நுகர்வு அவையினருக்கு கிட்டாமலும் போகலாம்.

ஆக, பிரசாந்தியின் இந்த வர்ணம் மிதமான வார்த்தைகளைக்கொண்டதாகவிருந்தாலும், ஒரு சவாலில் வென்ற உணர்வு அரங்கிலும் அவையிலும் நிறைந்தது. ஈடுகொடுத்து, ஆடி நிறைத்தார் அருவி.

அந்த வர்ணத்தில் எந்தவொரு வார்த்தையையும் நீக்கிவிட மனம் ஒப்பவில்லை என்று காரைக்குடி கிருஷ்ணமூர்த்தி சொன்னது உண்மையானதுதான். பொதுவாக, அரங்கேற்றங்களில் பலப்பரீட்சை ஒன்றுக்கு செல்லாமல், பரிச்சயமான வர்ணமொன்றில் நர்த்தகியின் ஆற்றலை வெளிக்கொணர்வது, ஜனரஞ்சகமானதாய் அமையும்.

அரங்கேற்றத்தில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டவரும் ஒரு கலாஷேத்ரா காரர். லண்டனிலேயே வசிக்கும் கீதா சேகர், நல்ல கலைஞர். ‘தகதிமிதா’ சுகன்யாவின் சகோதரி. காரணமொன்றுடன்தான், தன்னுடைய பேச்சில் ஒரு விடயத்தை வெகு பக்குவமாக சொன்னார்.

கலாஷேத்ரா பாணி தொடர்பில், லீலா சாம்சனின் ‘ருக்மிணி தேவி - ஒரு வாழ்வு’ என்ற நூலிலுள்ள ஒன்றை மேற்கோளிட்டார். கலாஷேத்ரா பாணி அவாவும் நர்த்தகியின் அர்ப்பணிப்பையும் ஆத்மார்த்த ஈடுபாட்டையும் அவர் வலியுறுத்திக் காண்பிக்க நினைந்தார்.

‘பந்தணைநல்லூர் பாணியுடன், கலாஷேத்ரா பாணி என்பது இன்னும் ஒரு படி மேலேபோகிறது. எது எப்படியாயினும், ஒரு சிஷ்யையிடம்



வேரூன்றவேண்டியது, அர்ப்பணிப்புடன் கூடிய நடனப் பயிற்சியும், தினமும் மேற்கொள்ளும் கடின உழைப்பிற்கூடாக எழும் ஆத்மார்த்தமான பரிவர்த்தனையுமேயாகும். இங்கே, தன்னகங்காரத்திற்கு இடமில்லை. உடல் போன பாங்கிற்கெல்லாம் விட்டுக்கொடுப்பதும் என்றில்லை. அசமந்தத்திற்கும் ரொம்பவும் இசைந்து போவதற்கும் இங்கு இடமில்லை. இக் கலை நுட்பமும், கலைத் தத்துவமும் நடன அசைவின் அல்லது இயக்கத்தின் நெருக்கத்திற்கும், நிகழ்காலத்தின் ஈடுபாட்டிற்கும் இடந்தருகிறது. காலம், வெளி என்ற எல்லைகளை முற்றாக மறந்து, ஒரு நர்த்தகிகொள்ளும் நடன லயத்தை அது வலியுறுத்துகிறது. நிருத்தியக் கலையில் ருக்மிணி அருண்டேல் இதனைத்தான் காண விழைந்தார் என்றே நான் நம்புகிறேன். இதனையே ஒரு தேர்ந்த நர்த்தகியும், நடன வடிவத்தை ஒரு கலையாகக் காணும் எவருமே வேண்டிநிற்பார்கள்.’ - கீதா சேகர் குறிப்பிட்ட மேற்கோள், லீலா சாம்சனின் நூலில் இவ்வாறு காணப்படுகிறது.

திலகசக்தி ஆராவமுதன் பாட்டு. பிச்சையப்பா ஞானவரதன் புல்லாங்குழல். ஏ. ஜி. ஏ. ஞானசுந்தரம் வயலின். இவர்கள் லண்டனின் உன்னதமான பக்கவாத்திய கலைஞர்கள். ஒவ்வொரு இராகத்திலும் ஞானசுந்தரம் லால்குடியை ஜாடைகாட்டினார். பிரசாந்தியின் அடக்கமான - கச்சிதமான நட்டுவாங்கம். காரைக்குடி கிருஷ்ணமூர்த்தியிடம் அரங்கேற்றத்தின் ‘கடிவாளம்’ இருந்தது. ●

உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள
யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்
துயர் நெற்
THUYAR.NET
துயர் நெற்றில் பிரசுரமாகும்
அனைத்து விளம்பரங்களும்
யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்
ஈழநாடு
Eelanadu
ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும்
யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்
DAN news
டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்
விபரங்களுக்கு: thuyar.net
Tel: 0094 752 225 225

## மொட்டுக்கு...

ஜனாதிபதி மேற்கொண்டுவரும் நடவடிக்கையில் நாட்டுக்குள்ளும் சர்வதேச ரீதியிலும் அவர் மீது நம்பிக்கை ஏற்பட்டு வருகின்றது.

ஏனெனில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் தலைமை பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்போது நாடு எதிர்கொண்டிருந்த நிலையை மக்களால் மறக்க முடியாது.

குறிப்பாக, எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு கப்பல் வரும் வரை மக்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னாலும், சமையல் எரிவாயு சிலிண்டர் விற்பனை நிலையங்களுக்கு முன்னாலும் நாட்கணக்கில் காத்துக் கொண்டிருந்த நாட்களை மக்கள் மறக்கவில்லை.

அதேபோன்று குழந்தைகளின் பால்மா உட்பட அத்தியாவசிய பொருட்களை பெற்றுக்கொள்ளவும் மக்கள் வரிசையில் நிற்கவேண்டிய நிலையே இருந்தது.

விவசாயம் செய்ய விவசாயிகளுக்கு உரம் இருக்கவில்லை. ஆனால், இந்த பிரச்னைகள் அனைத்தும் முழுமையாக தீர்க்கப்படாவிட்டாலும், மக்கள் நிம்மதியாக செயற்படக்கூடிய வகையில் நிலைமையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

அத்துடன், சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடல் சாதகமான நிலைக்கு வந்திருப்பதாக ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

இந்நிலையில் நாட்டில் போராட்டங்களை மேற்கொண்டு, நாட்டை கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல், ஜனாதிபதியின் வேலைத்திட்டங்களுக்கு ஆதரவளிப்பதே நாட்டை நேசிப்பவர்கள் அனைவரதும் கடமையாக இருக்கின்றது.

மேலும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப மேற்கொண்டுவரும் வேலைத்திட்டங்கள் மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டு வருகின்றது. அதனால் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து செயற்படுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி உட்பட அனைத்து கட்சிகளின் ஆதரவாளர்களும் எமது கட்சியின் தலைமையகத்துக்கு வந்து, எம்முடன் கலந்துரையாடி வருகின்றனர்.

அதேபோன்று ஆளும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலரும் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்பட இணக்கம் தெரிவித்திருக்கின்றனர்.

அத்துடன் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுவதற்கு இணக்கம் தெரிவிப்பதன் மூலம் இவர்கள் அமைச்சுப் பொறுப்புகளை எதிர்பார்த்து, இவ்வாறு கூறவில்லை. மாறாக, நாட்டை கட்டியெழுப்ப ஜனாதிபதி மேற்கொண்டுவரும் வேலைத்திட்டத்துக்கு ஆதரவளிக்கவே முன்வருவதாக தெரிவித்திருக்கின்றனர்.

அதேவேளை நாடு பொருளாதார நிலையில் ஓரளவு ஸ்திரநிலையை அடையும்போது தேர்தலொன்றுக்கு செல்ல முடியும். அப்போது பலரும் எங்களுடன் இணைந்துகொள்வார்கள்.

ஆனால், நாட்டில் எந்த தேர்தல் இடம்பெற்றாலும், மக்கள் இனி ஒரு போதும் மொட்டு கட்சிக்கு வாக்களிக்கப்போவதில்லை. நாட்டை இந்த நிலைக்கு கொண்டுவந்தது மொட்டு கட்சியாகும். அதனால் மொட்டு கட்சியுடன் இணைந்து மீண்டும் கஷ்டத்தில் விழுவதற்கு யாரும் விரும்பமாட்டார்கள்-என்றார். (அ)

## பயங்கரவாத...

தெரியவந்துள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்களை வழங்குமாறு, தகவல் அறியும் உரிமையின் கீழ், ஜூலை 2021 இல் செய்யப்பட்ட கோரிக்கை பொலிஸாரால் நிராகரிக்கப்பட்ட பின்னர், நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் மனித உரிமைகள் ஆணையாளராக செயற்பட்ட அம்பிகா சற்குணநாதன் மேன்முறையீடு செய்ததையடுத்து, ஆணைக்குழு உத்தரவிட்டிருந்த நிலையில் தகவல்களை வெளியிடவேண்டிய நிலைமை பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு ஏற்பட்டது.

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு தொடர்பாக சந்தேகத்தின் பேரில் பெரும்பாலானோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அந்த எண்ணிக்கை 81 ஆகும். அவர்களில் 42 பேர் உயர்நீதிமன்றத்தினாலும், 39 பேர் நீதவான் நீதிமன்றத்தினாலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 44 பேர் நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீதிமன்ற உத்தரவின்றி இருவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஒருவர் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பிலும், மற்றையவர் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்திலும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும், பொலிஸாரின் புள்ளிவிவரங்களுக்கும் சிறைச்சாலை புள்ளிவிவரங்களுக்கும் இடையில் முரண்பாடு காணப்படுவதாக முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளர் கூறுகிறார்.

“2021 ஒகஸ்டில் சிறைச்சாலை புள்ளிவிவரத் திணைக்களத்தின் தகவல்களுக்கு அமைய, விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய குற்றங்களுக்காக தண்டனை விதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 24 ஆகும். 85 பேர் விளக்கமறியலில் உள்ளனர். 205 பேர் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். ஆகவே பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 298 ஆகும்” என சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் சமூக ஊடகங்களில் தெரிவித்துள்ளார்.

அவர்களில் பெரும்பாலோர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறுகிறார். (அ)

## மஹிந்த...

திர மக்கள் சபை அறிவித்துள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட மேற்படி சபையின் உறுப்பினர் பாராளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமன கூறியதாவது:-

தற்போதைய பாராளுமன்றம், மக்கள் எதிர்பார்ப்பைப் பிரதிபலிக்கவில்லை. எனவே, புதிய மாற்றமொன்றை மக்கள் வலியுறுத்துகின்றனர். புதியவர்களிடம் ஆட்சியை ஒப்படைக்க வேண்டும் எனக் கருதுகின்றனர்.

மக்களின் மனநிலை என்னவென்பதை அறிவதற்குக் குறைந்தபட்சம் உள்ளூராட்சி சபைத் தேர்தலாவது நடத்தப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் மக்கள் போராட்டம் வெடிக்கும்.

தேர்தல் நடைபெற்றால் நாம் வெற்றி பெறுவோம். வெல்லும் அணியில் நாம் பிரதான பங்காளியாக இருப்போம். ‘மொட்டு’க் கட்சியுடன் இனி அரசியல் உறவு இல்லை. தேர்தலில் அவர்களுடன் போட்டியிடவும்மாட்டோம்- என்றார்.

## படகு...

செய்யச் சென்றபோது, படகு கவிழ்ந்ததில் அதில் 8 பேர் இருந்ததாகவும் எட்டு மாதக் கைக்குழந்தை உட்பட ஐவர் பிரதேசவாசிகளால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரியவந்துள்ளது.

10 முதல் 18 வயதுக்குட்பட்ட சிறுமிகளே காணாமல் போயுள்ளனர் என்றும் அவர்களை தேடும் பணியை கடற்படையினர் மேற்கொண்டுள்ளனர் என்றும் பேச்சாளர் மேலும் கூறினார். (அ)

## இலங்கையின்...

மைக்கான பிரித்தானியாவின் பதில் குறித்த பின்வரிசை வணிகக் குழு விவாதத்தின்போதே இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இலங்கையைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அனுப்பவும். ஜி.எஸ்.பி. பிளஸ் பெறுவதற்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றி இராணுவத்திற்கான அதிகப்படியான செலவினங்களைக் குறைக்கவேண்டியதன் அவசியத்தையும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் முக்கிய பங்குதாரராக உள்ள பிரித்தானியா, தமிழர்களுக்காக சர்வதேச நாணய நிதிய நிதியுதவிக்கு நிபந்தனைகளை முன்வைக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் செயற்பாடுகளுடன் இணங்கி 30/1 தீர்மானத்தை முழுமையாக அமுல்படுத்தவேண்டும் என்றும் போர்க்குற்றம் புரிந்தவர்களுக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை விதிக்கவும் அவர்கள் கேட்டுக்கொண்டனர். (அ)

## 40 ஆயிரம்...

படும் என்று யாழ். அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

மாவட்ட விவசாயக் குழுக்கூட்ட கலந்துரையாடல் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தலைமையில் நேற்று மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நெல் செய்கை விவசாயிகளுக்கு 40,000 ரூபாவாக இருந்த விவசாய கடன் ஒரு இலட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனை விவசாயிகளுக்கு தெரியப்படுத்தவேண்டும்.

இந்த வருடம் பெரும்போக நெற்செய்கைக்கான உர விநியோகத்தில் 70வீ இரசாயன உரமும், 30 வீத சேதன உரமும் தெரிவு செய்யப்பட்டதுடன் மாவட்டத்தில் சேதன உர விநியோகத்திற்காக 7 விநியோகத்தர்கள் தயாராக வுள்ளனர்.

உர விநியோகத்தர்களை இனங்கண்டு அவர்களிடம் உள்ள உரத்தின் தரத்தை உறுதி செய்து விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார்.

வெள்ள அழிவு, டீசல் மற்றும் மண்ணெண்ணெய் விநியோகம், நீர் விநியோகம், விவசாயிகளுக்கான காலநிலை தகவல்கள், உருளைக்கிழங்கு செய்கை, திராட்சை பழ செய்கையில் காணப்படும் நோய்த்தாக்கம், விதை உற்பத்தி மற்றும் விதை உற்பத்தி ஊக்குவிப்பு நடவடிக்கைகள், பால், முட்டை உற்பத்தி மற்றும் விநியோகம் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இக்கலந்துரையாடல் மாவட்ட உணவுப்பாதுகாப்பு மற்றும் போசாக்கு தொடர்பான மாவட்ட ஒருங்கிணைந்த பொறிமுறையின் 2ஆவது முன்னேற்றக் கூட்டமும் நடைபெற்றது. இதில் கிராம, பிரதேச செயலக, மாவட்ட ரீதியாக தரவுகள் பெறப்பட்டு எதிர்பார்த்துள்ள பெரும்போக விவசாய உற்பத்தி அறுவடை, மரக்கறிகள், கடலுணவு உற்பத்திகள் தொடர்பாகவும் உணவுப் பாதுகாப்பு மற்றும் போசாக்கு குறைபாட்டால் பாதிக்கப்படும் சிறுவர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார் திட்டங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தப்படவுள்ள 9 திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன. (அ)

## மஹிந்தவின்...

பட்டன.

நிலவும் நிலைமையின் அடிப்படையில் அரசியல் கூட்டங்களை நடத்துவது பொருத்தமாக இருக்காது என கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதை அடுத்து, கூட்டங்களை தற்காலிகமாக நிறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

முதலில் கட்சி தொடர்பில் ஆராய்ந்து, கட்சியை ஒருங்கிணைத்து, அதன் பின்னர் கூட்டங்களை நடத்துவது பொருத்தமானதாக இருக்கும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

## விடுதலைப் புலி...

கபிலன் ஆகியோருக்கு எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

மே 19 அன்று, சேலம் மாவட்டம், ஓமலூர் காவல் நிலையப் பகுதியில் வாகனச் சோதனையின்போது, இரண்டு நாட்டுத் துப்பாக்கிகள், வெடிமருந்துகள் மீட்கப்பட்டமை தொடர்பான வழக்கிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டதாக இந்திய தேசிய புலனாய்வு முகவரகம் தெரிவித்துள்ளது.

இவர்கள் விடுதலைப் புலிகளின் சித்தாந்தத்தால் ஈர்க்கப்பட்டு, அரசாங்கத்துக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தை நடத்தும் நோக்கத்துடன் புலிகளைப் போன்ற ஒரு அமைப்பை உருவாக்க விரும்பியதாக அது கூறியுள்ளது.

மேலும் இலங்கை உள்நாட்டுப் போரில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இலங்கைத் தமிழ் மக்களால் அனுசரிக்கப்படும் முள்ளிவாய்க்கால் நினைவு நாளைக் குறிக்கும் மே 18 அன்று வேலைநிறுத்தம் செய்யவும் இவர்கள் திட்டமிட்டதாக இந்திய தேசிய புலனாய்வு முகவரகம் தெரிவித்துள்ளது. (அ)

## புதிய...

ஆண்டு டிசெம்பர் 12 ஆம் திகதி வரை 38 குழுக் கூட்டங்களையும் 9 வெளித்தரப்பினருடனான கூட்டங்களையும் நடத்த 2,08,43,098 ரூபா செலவிடப்பட்டுள்ளதை கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நீதி மற்றும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளரின் அறிக்கையில் இது தெரியவந்துள்ளது.

பயன்படுத்தப்படாத மூன்று அலுவலக அறைகளுக்கு 8,16,480 ரூபாவும் அலுவலக உபகரணங்களுக்காக மேலும் 4,35,348 ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது.

புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்காக அமைக்கப்பட்ட குழுவின் நிபுணர்கள் அமர்வு ஒன்றுக்கு 25,000 ரூபா வழங்கப்பட்டுள்ளதுடன், அதற்காக செலவிடப்பட்ட தொகை 31 இலட்சம் ரூபாவாகும்.

மேலும் 1,25,000 ரூபா நிபுணர்களின் பயணச் செலவுக்காக செலவிடப்பட்டுள்ளது.

2020 ஒக்ரோபர் முதல் 2021 டிசெம்பர் வரை, பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தின் அலுவலகம் மற்றும் மண்டப வசதிகளுக்காக செலவிடப்பட்ட தொகை 47,68,200 ரூபா.

2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி குழு நியமிக்கப்பட்டு 15 மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் அதன் பணி நிறைவடையவில்லை எனவும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu

# தரம் ஒன்றிலிருந்து ஆங்கிலக் கல்வி!



கொழும்பு, நவ. 13

தரம் ஒன்றில் இருந்து மாணவர்களுக்கு ஆங்கிலம் பேசும் பழக்கத்தை அதிகரிக்க 2023ஆம் ஆண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

இதற்கமைய அனைத்து மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அரச பாடசாலைகளின் முதலாம் மற்றும் இரண்டாம் தரங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் 13,500 ஆசிரியர்களை நவம்பர் 18ஆம், 19 ஆம் திகதிகளில் பயிற்றுவிப்பாளர்களாகப் பயிற்சியளிக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

எதிர்காலத் தேவைக்கு ஏற்ற வகையில் பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கில மொழியைக் கற்பிப்பதற்கு முன்னுரிமை வழங்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார விடுத்த கோரிக்கைக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

ஆங்கில மொழிமூலப் பாடப்புத்தகங்களில் உள்ள இலக்கணப் பிழைகள் இங்கு கவனம் செலுத்தப்பட்டதுடன், அவ்வாறான இலக்கணப் பிழைகள் உள்ளதா என்பதைக் கண்டறியுமாறு தேசிய கல்வி நிறுவகத்துக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்தார்.

அத்துடன் இலங்கையிலுள்ள தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் உள்ள பிள்ளைகள் விரும்பினால் சிங்கள மொழிமூலத்தில் கல்வி கற்க சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையும் இங்கு பரிசீலிக்கப்பட்டது.

தற்பொழுது பாடசாலைகளில் போதைப்பொருள் பாவனை அதிகரித்திருப்பதாகவும், இதனைத் தடுப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கருத்துத் தெரிவித்தனர்.

இது தொடர்பில் ஏற்கனவே நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் பதில் வழங்கினார். (அ)

# என் மகனைப் பார்ப்பதற்கே நான் உயிருடன் இருக்கிறேன்

## சாந்தனின் தாயார் உருக்கம்



யாழ்ப்பாணம், நவ. 13

"எனது ஆசை எல்லாம் எனது பிள்ளை நல்லபடியாக என்னிடம் வந்து சேரவேண்டும் என்பதுதான். அவருடன் நான் சிறிதுகாலம் வாழ வேண்டும். அதற்காத்தான் நான் உயிருடன் இருக்கிறேன்."

- இவ்வாறு தெரிவித்தார் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுவிக்கப்பட்டுள்ள சாந்தனின் தாயார்.

ராஜீவ் கொலை வழக்கில் ஆயுள் தண்டனைக் கைதிகளாக இருந்து வரும் நளினி, முருகன், ரவிச்சந்திரன், றொபேர்ட் பயஸ், ஜெயக்குமார், சாந்தன் ஆகிய 6 பேரையும் விடுதலை செய்து இந்திய உச்ச நீதிமன்றம் நேற்று முன் தினம் தீர்ப்பளித்துள்ளது.

இது தொடர்பில் சாந்தனின் தாயார் தில்லையம்பலம் மகேஸ்வரி (வயது 75) கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்ப்பாணம், வடமராட்சி - உடுப்பிட்டியில் வசித்து வரும் சாந்தனின் தாயார் மேலும் தெரிவிக்கையில்,

"30 வருடங்களாகக் கோயில்களாகத் திரிந்து முன்வைத்த வேண்டுதல்களுக்கு இன்று பலன் கிடைத்துள்ளது. எனது மகன் விடுதலையாவதற்குக் காரணமான அனைவருக்கும் நன்றி.

பேரறிவாளனை விடுதலை செய்ததில் இருந்து எனக்குப் பெரும் மன வருத்தமாக இருந்தது. எனது பிள்ளையை எப்போது விடுதலை செய்வார்கள் என்று ஏக்கமாக இருந்தது. அது இப்போதுதான் நிறைவேறியது.

எனது பிள்ளைக்கு இப்போது 53 வயது. 30 வருடங்களைச் சிறையிலேயே தொலைத்துவிட்டார்.

எனது உடல்நிலை சரியில்லை. இல்லையென்றால் நான் சென்று எனது பிள்ளையை அழைத்து வருவேன்.

எனது ஆசை எல்லாம் எனது பிள்ளை நல்லபடியாக என்னிடம் வந்து சேரவேண்டும் என்பதுதான். அவருடன் நான் சிறிது காலம் வாழ வேண்டும். அதற்காகத்தான் நான் உயிருடன் இருக்கின்றேன்" - என்றார். (அ)

# மார்ச் 20 இற்குள் உள்ளூராட்சி தேர்தல் நடத்தாவிடின் நீதிமன்றம் செல்வோம்!

## அரசுக்கு தயாசிறி எச்சரிக்கை



கொழும்பு, நவ. 13

"உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை இரு வருடங்களுக்கு பிற்போடுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது. இந்த சூழ்ச்சியை தோற்கடிக்க வேண்டும். அதற்காக எமது நீதிமன்றத்தை நாடும்."

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் சட்டத்தரணி தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உள்ளூராாட்சிமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டமொன்று நடைபெற்றுள்ளது. இதன்போது, நீங்கள் கவலைப்படவேண்டியதில்லை, தேர்தலை இரு வருடங்களுக்கு பிற்போட ஏற்பாடு செய்கின்றோம். தவிசாளர், உப தவிசாளர் பதவிகளில் தொடர்ந்து இருங்கள் என மொட்டு கட்சி தலைவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தலை இவ்வாறு பிற்போட முடியாது என்பதை உறுப்பினர்கள் புரிந்துகொள்ளவேண்டும். இனிமேலும் உள்ளூராட்சிமன்ற தேர்தலை பிற்போடுவதாக இருந்தால் சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்லவேண்டும்.

எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் தேர்தலை நடத்தும் முடிவை தேர்தல் ஆணைக்குழு எடுக்காவிட்டால், எமது கட்சி நீதிமன்றத்தை நாடும் - என்றும் தயாசிறி குறிப்பிட்டார். (அ)




# புதிய விடியல் இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,நவ.13

டான் தொலைக்காட்சி யாழ். உதைபந்தாட்ட லீக்குடன் இணைந்து நடத்தும் புதிய விடியல் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று 7 ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன. கடந்த வாரம் பெய்த மழை காரணமாக தடைப்பட்ட இந்த ஆட்டங்கள் இன்று யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளன.

இன்றைய ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

- காலை 9.00மணி - அராலி ஏ.எல். எதிர் அருணோதயா.
- முற்பகல் 10.15 மணி - கலைவாணி எதிர் திருவள்ளுவர்.
- முற்பகல் 11.30 மணி - நசேரத் எதிர் அராலி அண்ணா.
- நண்பகல் 12.45மணி - சென்தோமஸ் ஏள சென்ஜேம்ஸ்.
- பிற்பகல் 2.00 மணி - வளர்மதி எதிர் ஈஸ்வரன்.
- பிற்பகல் 3.30 மணி - சென்பிலிப்ஸ் எதிர் ஸ்ரீ அம்பாள்.
- மாலை 4.45 மணி - பல்கலைக்கழகம் எதிர் நியூ ஸ்ரார்.




# ஊடகவியலாளர் மாலினிக்கு விருது

யாழ்ப்பாணம், நவ.13

தமிழ் சங்கு கலை இலக்கிய விருது விழாவில் டான் தொலைக்காட்சியின் மூத்த ஊடகவியலாளரும் அரசியல் நிகழ்ச்சி நெறியாளருமான மாலினி அஜந்தனுக்கு சிறந்த ஊடக செயற்பாட்டாளர் விருது வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் தனியார் விடுதி ஒன்றில் இடம்பெற்ற தமிழ் சங்கு கலை இலக்கிய விருது விழா 2022 நிகழ்வில் துறை ரீதியாக சிறப்பாக செயற்பட்டவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்ட நிலையில் ஊடக பரப்பில் சிறப்பாக செயற்படும் டான் தொலைக்காட்சியின் மூத்த ஊடகவியலாளர் மாலினி அஜந்தனுக்கு சிறந்த ஊடக செயற்பாட்டாளர் விருது வழங்கப்பட்டது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.11.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.